வருடாந்த அறிக்கை

2024

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

இலக்கம் 117, சுபத்ராராம வீதி, கங்கொடவில,
நுகேகொட.

உள்ளடக்கம்

1. ஆம் அத்தியாயம்
1.1. கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை பற்றி ---------- 163
1.2. முந்திய பத்து வருடங்களுக்கான நிதிசார் பொழிப்பு ---------- 165
1.3. நோக்கும் அரும்பணியும் ---------- 166
1.4. நிறுவனத்தின் நோக்கங்கள் ---------- 167
1.5. பணிப்பாளர் சபை 2024 ---------- 168
1.6. சிரேஷ்ட முகாமைத்துவம்---------- 173
1.7. அபாயநேர்வு முகாமைத்துவக் குழு அங்கத்தவர்களும் கூட்டங்களின் பொழிப்பும் ---------- 179
1.8. கணக்காய்வு முகாமைத்துவக் குழு அங்கத்தவர்களும் கூட்டங்களின் பொழிப்பும்---------- 180
1.9. தாபனஞ்சார் கட்டமைப்பு---------- 181

2. ஆம் அத்தியாயம்
2.1. தலைவரின் செய்தி ---------- 182

3. ஆம் அத்தியாயம்
3.1. நெறிப்படுத்தல் பிரிவு ---------- 185

4. ஆம் அத்தியாயம்
4.1. காப்புறுதிப் பிரிவு ---------- 189

5. ஆம் அத்தியாயம்
5. 1 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ---------- 194

6. ஆம் அத்தியாயம்
6.1 நிர்வாக மற்றும் மனிதவளங்கள் பிரிவு ---------- 198

7. ஆம் அத்தியாயம்
7.1 திட்டமிடல் பிரிவு ---------- 202

8. ஆம் அத்தியாயம்
8.1. தகவல் தொழில்நுட்பப் பிரிவு ---------- 210

9. ஆம் அத்தியாயம்
9.1. ஓய்வூதியப் பிரிவு ---------- 216

10. ஆம் அத்தியாயம்
10.1 நிதிப் பிரிவு
10.1.1.முந்திய பத்து வருடடங்களின் நிதிசார் தகவல்கள் ---------- 225

11. நிதிசார் கூற்றுகள்
11.1. ஒட்டுமொத்த செயற்றிட்டங்களுக்குமான ஒருங்கிணைந்த கணக்குக் கூற்றுகளும் கமத்தொழில் காப்புறுதித் திட்டமும் ---------- 230
11.2 கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் ---------- 264
11.3 கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் ---------- 287

12. ஆம் அத்தியாயம்
12.1. கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகள்
12.1.1. கமத்தொழில் காப்புறுதித் திட்டம் ---------- 306
12.1.2. கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் ---------- 319
12.1.3. கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் ---------- 326

எம்மைப் பற்றி....

உள்நாட்டு விவசாயியையும் விவசாயத்தையும் பாதுகாப்பதற்காக அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்பினை ஈடேற்றுவதற்காக 1973 இன் 27 ஆம் இலக்கமுடைய கமத்தொழில் காப்புறுதிச் சட்டத்தின் மூலமாக கமத்தொழில் காப்புறுதிச்சபை நிறுவப்பட்டதோடு 1999 இன் 20 ஆம் இலக்கமுடைய கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை என மீளவும் தாபிக்கப்பட்டது.

விவசாயத்தின் நிலைபெறுதகு அபிவிருத்திக்காக அமுலாக்கப்படுகின்ற தேசிய வேலைத்திட்டத்தில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை பிரமாண்டமான செயற்பொறுப்பினை ஈடேற்றி வருகின்றது.

அதன் முதன்மைப் பணியென்றவகையில் அபாயநேர்வு முகாமைத்துவத்தில் விவசாயிக்காக இடையீடு செய்கின்ற தரப்பினராக தொடர்புகொள்வது விசேட முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதன்போது விவசாயியின் பயிர்களுக்கான அபாயநேர்வினை பொறுப்பேற்பதற்கு மேலதிகமாக விவசாயியின் வாகனங்கள், உபகரணங்கள் மற்றும் களஞ்சியங்களுக்காகவும் செயலாற்றிவருவதும் தனித்துவமானதாகும்.
விவசாயியைப் போன்றே விவசாயத்தினதும் நிலைபெறுதகு மேம்பாட்டுக்காக நாட்டின் உணவு உற்பத்திச் செயற்பாங்கினை மிகவும் உறுதியாகவும் துரிதப்படுத்துவதையும் நோக்கத்துடன் கமத்தொழில் அமைச்சினை அடிப்படையாகக்கொண்டு அரசாங்கத்தினால் விவசாயிகளுக்காக அமுலாக்கிய உர மானியம் போன்ற கமக்காரர்களுக்காக அமுலாக்கப்பட்ட வசதிகள் ஊக்குவித்தல்களின்கீழ் நாட்டில் பயிரிடப்படுகின்ற வகை 06யான பயிர்களான நெல், சோளம், உருளைக் கிழங்கு, சோயா மற்றும் மிளகாய் ஆகிய பயர்களுக்காகவும் வெங்காயச்செய்கைக்காகவும் வறட்சி, வெள்ளப்பெருக்கு மற்றும் காட்டுயானைகளால் எற்படுகின்ற சேதம் என்பவற்றுக்காக சிறு 2018 போகத்தில் ஆரம்பிக்கப்பட்ட இலவசமாக வழங்கப்பட்ட கட்டாயக் காப்புறுதித் திட்டம் 2024 ஆம் ஆண்டிலும் அமுலாக்கப்பட்டது.

2024 ஆம் ஆண்டில் சபையின் வருமானத்தில் முனைப்பாகத் தெரிகின்ற வகையிலான முன்னேற்றத்தை அடைந்துகொள்வதில் அனைத்து காப்புறுதித் திட்டங்களும் வெற்றிபெற்றுள்ளன. 2023 ஆம் ஆண்டில் 502.15 மில்லியன் ரூபாவாக அமைந்த வருமானத்தை 2024 ஆண்டின் இறுதியில் 623.28 மில்லியன் ரூபாவரை அதிகரித்துக் கொண்டமை இவ்வருடத்தின் விசேட அம்சமாகும். மாவட்ட மட்டத்தில் விரிவான சந்தைப்படுத்தல் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கியதன் பெறுபேறாக இந்த முன்னேற்றத்தை அடைய இயலுமாயிற்று. இதன் மூலமாக ஈட்டிய வருமானம் சபையின் நிதிசார் உறுதிநிலையை வளரத்தெடுப்பதில் பெரிதும் உறுதுணையாக விளங்கியது.

GIZ (Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit) நிறுவனத்தின் நிதியுதவியின்கீழ் சபையின் உள்ளக நிர்வாகம் மற்றும் தொழிற்பாட்டுச் செயற்பாங்கினை முழுமையாகவே டிஜிட்டல்மயப்படுத்தும் நோக்கத்துடன் அறிமுகம் செய்யப்பட்ட ERP (Enterprise Resource Planning) முறைமையின் அபிவிருத்திப் பணிகளை மிகவும் வேகமாக அமுலாக்குதல் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டது.
தகவல் தொழில்நுட்ப பிரிவு நிறுவப்பட்ட பின்னர் சபையின் பிரச்சார அலுவல்கள் மற்றும் விழிப்பூட்டல் செயற்பாடுகளுக்காக e-SMS சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்த குறுஞ்செய்தி சேவை மூலமாக மாவட்ட அலுவலகங்களிலும் தலைமை அலுவலகத்திலும் இடம்பெறுகின்ற வாடிக்கையாளர்களை விழிப்பூட்டுதல் மற்றும் பிற மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் மிகவும் வெற்றிகமாக இடம்பெற்று வருவதோடு அதன்மூலமாக தொடர்புடைய அனைத்து தரப்பினர்களால் நேரடியானதும் வினைத்திறன் கொண்டதுமான தொடர்பாடலை மேற்கொள்வதற்கான வாயப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையினால் அமுலாக்கப்பட்டு வருகின்ற பிரதானமான சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டமான கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டத்தின்கீழ் 2024 ஆம் அண்டின் இறுதியளவில் புதிய செயற்றிட்டத்தில் பங்களிப்புச் செய்துள்ள ஒட்டுமொத்த உதவுதொகை செலுத்துனர்களின் எண்ணிக்கை 4,903 ஆக அமைவதோடு இவ்வருடத்தில் இந்த செயற்றிட்டத்தின்கீழ் நனமைமகள் வழங்கப்படுகின்ற கமக்காரர்களின் எண்ணிக்கை 179,382 ஆகும்.
இதற்கு மேலதிகமாக மீனவர் சமுதாயத்தின் நன்மைகருதி அமுலாக்கப்படுகின்ற கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின்கீழ் 2024 ஆம் ஆண்டின் இறுதியளவில் 69,049 மீனவர்கள் அங்கத்துவம் வகிப்பதோடு கடற்றொழிலாளர் ஓய்வூதியம் பெறுகின்ற 6,056 மீனவர்களுக்கு மாதாந்தம் ஓய்வூதியம் செலுத்தப்பட்டும் வந்தது.

நாட்டில் நிலவிய பொருளாதார ஸ்திரமற்றநிலையிலும்கூட தேசிய விவசாய, கால்நடைவள உற்பத்திச் செயற்பாங்கில் விரிவான பங்களிப்பினை நல்கி அபாயநேர்வினைக் குறைப்பதற்கான வலிமையை விவசாயியை முதன்மையாகக்கொண்ட தேசிய விவசாய உற்பத்திச் செயற்பாங்கிற்கு வழங்கி நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார செயற்பாங்கின் முதன்மை செயற்பொறுப்பினை ஈடேற்றிவருகின்ற நிறுவனமென்ற வகையில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை தனது பொறுப்பினை 2024 ஆம் ஆண்டிலும் ஈடேற்றியது.

பத்து ஆண்டுகள் நிதிசார் பொழிப்பு

பத்து ஆண்டுகள் நிதிசார் பொழிப்பு

2015 தொடக்கம் 2024 வரையான வருடாந்த காப்புறுதிக் கட்டுப்பண வருமானம்

(மி.ரூபா)

காப்பீட்டு அமைப்பு	2015	2016	2017	2018	2019	2020	2021	2022	2023	2024
கெத்தட்ட அருண (கட்டாய பயிர்க் காப்புற	1,086.27	667.54	65.64	119.97	58.07	43.62	67.84	50.99	90.95	178.80
உப உணவுப் பயிர்க் காப்புறுதி	24.72	30.09	30.01	8.04	3.05	2.28	6.41	4.72	9.75	9.99
கால்நடைக் காப்புறுதித் திட்டம்	9.01	10.57	13.39	10.59	7.87	5.78	11.07	5.25	15.59	19.63
அசைகின்ற ஆதனக் காப்புறுதி	-	7.81	41.91	137.85	220.15	278.94	296.50	311.04	353.44	358.85
களஞ்சியக் காப்புறுதி	1.09	-	0.20	-	-	-	-	-	-	-
சுவசெத விபத்துக் காப்புறுதித் திட்டம்	16.43	15.61	53.13	6.34	9.42	13.78	9.04	18.55	32.30	56.00
கூட்டுத்தொகை	**1,137.51**	**731.63**	**204.29**	**282.79**	**298.55**	**344.40**	**390.85**	**390.56**	**502.03**	**623.28**

2015 தொடக்கம் 2024 வருடாந்த தேறிய இலாபம் (கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதித் திட்டம்) (குழுமம்)

(மி.ரூபா)

	2015	2016	2017	2018	2019	2020	2021	2022	2023	2024
மொத்த வருமானம்	1,361.31	972.87	5,916.38	4,569.71	3,566.55	3,724.63	3,655.16	3,676.44	3,848.42	4,013.93
தொழிற்பாட்டுச் செலவினம்	(3,599.05)	(21.07)	(25.68)	(50.66)	(63.43)	(66.43)	(70.06)	(72.52)	(98.28)	(129.69)
தொழிற்பாட்டு மிகைநிலை	(2,237.75)	(5,682.55)	(6,397.36)	(5,446.34)	(6,328.90)	(7,324.58)	(6,306.83)	(5,817.01)	(7,927.18)	(7,557.69)
பிற வருமானம்	2,285.80	2,696.89	2,811.59	2,842.56	3,215.52	4,661.08	4,011.14	4,167.82	4,619.45	5,033.84
மொத்த செலவுகள்	(307.08)	(269.11)	(293.47)	(307.82)	(328.96)	(327.95)	(336.20)	(486.77)	(576.82)	(658.34)
வருடாந்த தேறிய இலாபம்/நட்டம்	(256.35)	(3,254.77)	(3,879.24)	(2,911.60)	(3,442.35)	(2,991.45)	(2,631.89)	(2,135.97)	(3,884.55)	(3,182.19)

2015 தொடக்கம் 2024 வருடாந்த தேறிய இலாபம் (கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதித் திட்டம்)

(மி.ரூபா)

	2015	2016	2017	2018	2019	2020	2021	2022	2023	2024
மொத்த வருமானம்	1,156.07	782.21	5,735.18	4,398.51	3,365.07	3,530.41	3,456.91	3,432.32	3,488.25	3,691.94
தொழிற்பாட்டுச் செலவினம்	(1,116.14)	(9.95)	(12.00)	(36.37)	(48.76)	(51.37)	(54.70)	(56.86)	(81.62)	(111.50)
தொழிற்பாட்டு மிகைநிலை	39.93	377.72	80.94	1,144.73	878.06	1,401.34	1,752.00	2,663.14	1,268.23	1,799.76
பிற வருமானம்	98.90	122.51	130.12	4.00	9.14	8.29	8.16	6.75	14.35	17.21
மொத்த செலவுகள்	(131.97)	(144.40)	(161.13)	(169.73)	(185.02)	(179.77)	(184.29)	(229.20)	(300.08)	(353.91)
வருடாந்த தேறிய இலாபம்/நட்டம்	8.76	355.83	49.93	979.00	702.19	1,229.86	1,575.88	2,440.68	982.50	1,463.06

நோக்கும் அரும்பணியும்

நோக்கு....

"உள்நாட்டு விவசாயத்தின்
உன்னதமான பாதுகாவலனாக
மாறுவதன் மூலமாக தெற்காசியாவின்
மிகச்சிறந்த முன்னுதாரணமாகத்
திகழும் காப்புறுதி நிறுவனமாதல்"

அரும்பணி...

"கமத்தொழில் காப்புறுதி மற்றும் பாதுகாப்பினை
வழங்குவதற்கான கூட்டு முயற்சிகள் மற்றும்
சம்பந்தப்பட்ட நிறுவனங்களை இணைப்பாக்கம்
செய்வதன் ஊடாக சர்வதேசரீதியாக
ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைசிறந்த சேவையை
வழங்குதல்"



கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் நோக்கங்கள்.....

- விவசாய செய்கைகளுடன் தொடர்புடைய அபாயநேர்வு முகாமைத்துவம்
- கமக்காரர்களின் ஏனைய அசைகின்ற மற்றும் அசைவற்ற ஆதனங்களுக்கான அபாயநேர்வு முகாமைத்துவம்
- கமக்காரர்களின் கால்நடை வளங்களுடன் தொடர்புடைய அபாயநேர்வு முகாமைத்துவம்
- சமூகப் பாதுகாப்பு மற்றும் ஆயுட் காப்புறுதி முறையியல்கள் ஊடாக கமக்கார மற்றும் மீனவ சமுதாயத்தை பாதுகாத்தல்
- நிறுவனத்துடன் ஏற்புடையதாகின்ற உள்நாட்டு மற்றும் சர்வதேச தரச்சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளல்
- அபிவிருத்தி, தொழிற்பாடுகள் மற்றும் சந்தைப்படுத்தல் மேம்பாடு
- மாவட்ட நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் வெளிவாரி நிறுவனங்களுடனான இணைப்பாக்கம்
- தாபனம்சார், மனித மற்றும் பௌதீக வளங்களின் திட்டமிடலும் அபிவிருத்தியும்
- பெறுகை மற்றும் வழங்கல் முகாமைத்துவம்
- சட்டங்களை அமுலாக்கலுடன் தொடர்புடைய சட்டரீதியான உதவிகளை வழங்குதல்
- தாபனஞ்சார் நோக்கங்களை ஈடேற்றிக்கொள்வதற்கான திட்டமிடல், மேற்பார்வை மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.
- முறைசார்ந்த உள்ளக கட்டுப்பாட்டு முறையியலைக் கட்டியெழுப்புதலும் நிர்வாக செயற்பாங்கின் பலவீனங்களை குறைத்தலும்
- இலாபகரமான வளர்ச்சியின் ஊடாக நிலைபேறான நிதிசார் சக்தியை உறுதிசெய்தல்
- தாபனஞ்சார் செயற்பாங்குகளை முறைமைப்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்ப முறையியல்களையும் GIS முறையியல்களையும் பாவித்தல்

பணிப்பாளர் சபை 2024



கலாநிதி டபிள்யு.டபிள்யு.எம்.பீ. வீரசேகர
தலைவர்
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
(2022 செப். தொடக்கம் 2024 செப். வரை)

SLAS (Special grade).

- **DBA –** Doctoral Degree in Business Administration – IIC University of Technology - Colombia
- **MSc** – Master of Science – Human Resource Planning and Development – University of Gurugobing Singh, New Delhi, India.
- **MSsc- Master of Social Science** – University of Kelaniya Sri Lanka

Bachelor of Arts –University



திரு. பேமசிறி ஜாசிங்ஆரச்சி
தலைவர்
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
(2024 ஒக். தொடக்கம்)

- **Bachelor of the Science** (Agriculture), University of Ruhuna.
- **Dip.** in Inland Fisheries and Aquaculture Extension, Ministry of Fisheries and Aquatic Resources.



திரு. றுவன் பத்திரண
பணிப்பாளர்சபை உறுப்பினர்
மேலதிக செயலாளர்
கமத்தொழில், கால்நடை வளங்கள்,காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

SLAS (Special grade)

- **B.SC** Eng. (Mechanical) University Of Moratuwa
- **MA** Sociology, University of Kelaniya



திரு. ஆர்.ஏ.டீ.எஸ். ரணதுங்க
பணிப்பாளர்சபை உறுப்பினர்
மேலதிக செயலாளர் (கடற்றொழில் வளங்கள் முகாமைத்துவம்)
கடற்றொழில் நீரகவளங்கள் அமைச்சு
SLAS (Special grade).

Additional Secretary (Fisheries Resource Management)
Ministry of Fisheries, Aquatic and Ocean Resources

- **BSc** (Agri) **Hons**, University of Ruhuna),
- **MPA** University of Sri Jayawardanapura,
- **MDP**, University of Queensland



திரு டீ.என். ஜீ.கே. டீ.எம். ஆர். ரணதுங்க
பணிப்பாளர்சபை உறுப்பினர்
மேலதிக பணிப்பாளர் நாயகம்
திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம்
நிதி அமைச்சு
(2024 ஜூலை வரை)

- **MA** Economics- University of Keleniya
- **BSc**. University of Sri Jayewardenepura,
  - Fellow Member of the Institute of Public Finance and Development Accountancy.
  - Licentiate Examination at Institute of Chartered Accountants of Sri Lanka



திரு. எம். ஏ. எஸ் எச். பெரேரா
பணிப்பாளர்சபை உறுப்பினர்
மேலதிக பணிப்பாளர் நாயகம்
திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம்
நிதி அமைச்சு
(2024 ஆகஸ்ற் தொடக்கம்)

- **BSc** Mgt (Public) special, University of Sri Jayawardanapura
- **MSc** in App. Finance, University of Sri Jayawardenapura
- ACMA, CPFA(CASL), CPIFA(UK)



ஜீ.ஜீ.வீ.ஷ்யாமி மி
கல்வி குழு உறுப்பினர்
கூடுதல் கல்வி அதிகாரி
விவசாய துறை

- **BSc**, Agriculture special, University of Peradeniya
- **MSc** Horticulture (Pomology), Punjab Agricultural University, Ludhiana, India



பணிப்பாளர்சபை உறுப்பினர்
கமநலசேவைகள் ஆணையாளர் நாயகம்
கமநல சேவைகள் திணைக்களம்

(2024 ஜூலை வரை)
SLAS (Special grade)



திரு. றோஹண ராஜபக்ஷ
பணிப்பாளர்சபை உறுப்பினர்
கமநலசேவைகள் ஆணையாளர் நாயகம்
கமநல சேவைகள் திணைக்களம்

(2024 செப். தொடக்கம்)

SLAS (Special grade)



திரு. தனஞ்சய நந்தசிறி
பணிப்பாளர்சபை உறுப்பினர்
உப தலைவர் / பிராந்திய முகாமையாளர்
DFCC வங்கி
(IBSL)



கலாநிதி சீ.என்.எஸ். கமகே
பணிப்பாளர்சபை உறுப்பினர்
பணிப்பாளர் (கால்நடை வளத் திட்டமிடல்) (அமைச்சு) கால்நடை வளங்கள் விலங்கு வேளாண்மைஊக்குவிப்பு , பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சு



திரு. எஸ் எம். ஜீ. சமரக்கோன்
பணிப்பாளர்சபை உறுப்பினர்
கமக்காரர் பிரதிநிதி

2024 ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபைக் கூட்டங்களும் வரவு பற்றிய விபரங்களும்

தொடர் இலக்கம்	பணிப்பாளர் சபை/பிரதான முகாமைத்துவம்	பதவி	அங்கத்துவம்	ஆண்டில் பங்கேற்ற கூட்டங்களின் எண்ணிக்கை
1	கலாநிதி டபிள்யு. டபிள்யு.எம்.பீ. வீரசேகர (2024.09.30 வரை)	தலைவர், கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை	பணிப்பாளர் சபைத் தலைவர்	9
	திரு. பேமசிறி ஜாசிங்க	தலைவர், கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை	பணிப்பாளர் சபைத் தலைவர்	1
2	திரு. ஆர்.எம்.டீ.கே.ஜீ.என் டீ. ரணதுங்க	மேலதிக பணிப்பாளர் நாயகம் திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம் நிதி அமைச்சு	அங்கத்தவர்	6
	திரு. எம்.ஏ.எஸ்.எச்.பெரேரா	மேலதிக பணிப்பாளர் நாயகம் திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம் நிதி அமைச்சு	அங்கத்தவர்	4
3	திரு. ஆர்.ஏ.டீ.எஸ். ரணதுங்க	மேலதிக செயலாளர் (கடற்றொழில் வளங்கள் முகாமைத்துவம்) கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு	அங்கத்தவர்	8
4	கலாநிதி சீ.என்.எஸ் கமகே	பணிப்பாளர் (கால்நடை வளங்கள் திட்டமிடல்) கால்நடை வளங்கள், விலங்கு வேளாண்மை மேம்பாடு மற்றும் பால் மற்றும் முட்டைசார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சு	அங்கத்தவர்	8
5	திருமதி.ஜீ.ஜீ.வீ. சியாமலீ	மேலதிக பணிப்பாளர் நாயகம் கமத்தொழில் திணைக்களம்	அங்கத்தவர்	2
	எச்.எம்.எஸ்.பி. ஹேரத்	மேலதிக பணிப்பாளர் நாயகம் கமத்தொழில் திணைக்களம்	அங்கத்தவர்	2
6	ஏ.எச்.எம்.எல். அபேரத்ன	கமநல சேவைகள் ஆணையாளர் நாயகம் கமநல சேவைகள் திணைக்களம்	அங்கத்தவர்	3
	திரு. ரோஹண ராஜபக்ஷ	கமநல சேவைகள் ஆணையாளர் நாயகம் கமநல சேவைகள் திணைக்களம்	அங்கத்தவர்	3
7	திரு. தனஞ்சய நந்தசிறி	உப தலைவர்/பிராந்திய முகாமையாளர்	அங்கத்தவர்	2
8	எஸ்.எம்.ஜீ. சமரக்கோன்	கமக்காரர் பிரதிநிதி	அங்கத்தவர்	8

சிரேஷ்ட முகாமைத்துவம்



திரு. டபிள்யு.டபிள்யு. எம்.பீ. வீரசேகர
தலைவர்
(2024.09.30 வரை)



திரு. பேமசிறி ஜாசிங்ஆரச்சி
தலைவர்



திரு. கே.டீ.பி.ஆர். வீரசேகர
பணிப்பாளர் நாயகம்
(2024.03.18 வரை)



திரு. ஐ.யூ.கே. களுஆரச்சி

பணிப்பாளர் நாயகம்



திருமதி சீ.எம்.எம் மன்திலகா
பணிப்பாளர்-
காப்புறுதிப் பிரிவு



திரு. எஸ்.எம்.யு.எஸ். கே. சுபசிங்க
பதில் பணிப்பாளர்
நிதிப் பிரிவு



திரு.கே.ஏ.டீ.சீ.ஜீ. கொடிப்பிலி
பதில் பணிப்பாளர்
நெறிப்படுத்தல் பிரிவு



செல்வி பீ.ஆர். கௌஷல்யா
பதில் பணிப்பாளர்
ஓய்வூதியப் பிரிவு



திருமதி டீ.ரீ பர்னாந்து
உதவிப் பணிப்பாளர்
ஓய்வூதியப் பிரிவு



திருமதி பி.ஆர். சத்துராங்கனீ
உதவிப் பணிப்பாளர்
நிதிப் பிரிவு



திருமதி பி.எச்.கே. சமன்குமாரி
உதவிப் பணிப்பாளர்
நிதிப் பிரிவு



திரு.கே.டிக்சன்
உதவிப் பணிப்பாளர்
காப்புறுதிப் பிரிவு



திருமதி அயேஷா சமரக்கோன்
உதவிப் பணிப்பாளர்
திட்டமிடல் பிரிவு



திருமதி, டீ.எச்.என். பிரியதர்ஷனீ
உதவிப் பணிப்பாளர்
உள்ளக கணக்காய்வுப் பிரிவு



திருமதி இஷாரி வீரசேகர
உதவிப் பணிப்பாளர்
சட்டப் பிரிவு



திரு.ரீ.என். இசுறு கவிந்ய
உதவிப் பணிப்பாளர்
தகவல் தொழில்நுட்ப பிரிவு



திரு.கே.சீ.சீ. சமரவிக்ரம
உதவிப் பணிப்பாளர்
நிர்வாக மற்றும் மனிதவளப் பிரிவு



திரு.எச். டீ.எஸ். விதானகே
உதவிப் பணிப்பாளர்
ஓய்வூதியப் பிரிவு



செல்வி கே.டீ.ரீ. பெரேரா
உதவிப் பணிப்பாளர்
நிர்வாக மற்றும் மனிதவளப் பிரிவு



திரு.எம்.பி.குமார
உதவிப் பணிப்பாளர்
காப்புறுதிப்பிரிவு
(கால்நடைக் காப்புறுதி)

திரு.டீ.கிரிதரன் – பிரதிப் பணிப்பாளர்
யாழ்ப்பாண மாவட்டம்

திருமதி தீபிகா கொல்லல்பிட்டிய- பிரதிப் பணிப்பாளர்
பதுளை மாவட்டம்

திரு. யூ.சீ.கே.ஆர். கேமரத்ன - பிரதிப் பணிப்பாளர்
குருநாகல் மாவட்டம்

திரு.எஸ்.பி.டீ.எல். அம்பேபிட்டிய - பிரதிப் பணிப்பாளர்
புத்தளம் மாவட்டம்

திரு.பீ.குகன் – உதவிப் பணிப்பாளர்
முல்லைத்தீவு மாவட்டம்

திரு.டீ.பீ.என். தியவடன – உதவிப் பணிப்பாளர்
கேகாலை மாவட்டம்

திரு.டபிள்யு.எஸ் ஆர். குலரத்ன - உதவிப் பணிப்பாளர்
கண்டி மாவட்டம்

திரு.ஏ.காவன்தீசன் – உதவிப் பணிப்பாளர்
மட்டக்களப்பு மாவட்டம்

திரு.ஈ.என்.ஏ.பீ. ஏக்கநாயக்க – உதவிப் பணிப்பாளர்
அநுராதபுரம் மாவட்டம்

திரு.டீ.பீ.எச். அம்பன்வல – உதவிப் பணிப்பாளர்
மாத்தளை மாவட்டம்

திருமதி. டீ.கே. திசாநாயக்க – உதவிப் பணிப்பாளர்
கம்பஹா மாவட்டம்

திரு. டீ.ஜீ.ஆர்.கே. குலவர்தன – உதவிப் பணிப்பாளர்
காலி மாவட்டம்

திரு.ஏ.எம்.எல்.ஜீ. அதிகாரி – உதவிப் பணிப்பாளர்
மாகோ மாவட்டம்

திரு.டபிள்யு. பீ. பியசிறி- உதவிப் பணிப்பாளர்
மொனறாகல மாவட்டம்

திரு.டீ.எச்.ஜே.பி.வீ. ரசாங்க - உதவிப் பணிப்பாளர்
நுவரெலியா மாவட்டம்

திரு.டீ. ரங்கன - உதவிப் பணிப்பாளர்
மன்னம்பிட்டி மற்றும் தெஹிஅத்தகண்டிய மாவட்டம்

திரு. என் கம்ஹேவகே - உதவிப் பணிப்பாளர்
அம்பாந்தோட்டை மாவட்டம்

திருமதி கே.சீ. அமரவீர - உதவிப் பணிப்பாளர்
எம்பிலிபிட்டிய மாவட்டம்

திரு.எஸ் திலிப்குமார் - உதவிப் பணிப்பாளர்
மன்னார் மாவட்டம்

திரு.டபிள்யு.ரீ.ஏ. பிரியதர்ஷன - உதவிப் பணிப்பாளர்
பொலநறுவை மாவட்டம்

திரு.எஸ். சதீஸ்குமார - உதவிப் பணிப்பாளர்
அம்பாறை மாவட்டம்

திருமதி. ஜீ.கே.என்.ரீ. கல்லொலுவ - உதவிப் பணிப்பாளர்
இரத்தினபுரி மாவட்டம்

திருமதி ஏ.ஜே.என். அத்துரலிய - உதவிப் பணிப்பாளர்
கொழும்பு மாவட்டம்

திரு.பி.கதிர்காமநாதன் - உதவிப் பணிப்பாளர்
வவுனியா மாவட்டம்

திரு. அநுராத தென்னக்கோன் - பதில் உதவிப் பணிப்பாளர்
தம்புத்தேகம மாவட்டம்

திரு.கே.கே.எஸ். ரவீந்திர - பதில் உதவிப் பணிப்பாளர்
களுத்துறை மாவட்டம்

திரு.ஆர்.ரீ. லொக்குஹெட்டி - பதில் உதவிப் பணிப்பாளர்
மாத்தறை மாவட்டம்

திரு.கே.எல். அன்சார் - பதில் உதவிப் பணிப்பாளர்
திருகோணமலை மாவட்டம்

திரு. பூரண சந்திரன் - பதில் உதவிப் பணிப்பாளர்
கிளிநொச்சி மாவட்டம்

அபாயநேர்வு முகாமைத்துவக் குழு அங்கத்தவர்களும் கூட்டங்களின் பொழிப்பும்

திகதி	பெயர்	பதவி	நிறுவனம்
2024.02.28	திரு. ஏ.எச்.எம்.எல். அபேரத்ன	ஆணையாளர் நாயகம்	கமநல அபிவிருத்தி திணைக்களம்
	திரு. ஆர்.எம்.கே.ஜீ.என்.பீ. ரணதுங்க	மேலதிக பணிப்பாளர் நாயகம்	திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம்
	திரு. கே.சீ.நிரோஷன	மேலதிக செயலாளர்	கமத்தொழில் அமைச்சு
2024.05.21	திரு. ஏ.எச்.எம்.எல். அபேரத்ன	ஆணையாளர் நாயகம்	கமநல அபிவிருத்தி திணைக்களம்
	திரு. ஆர்.எம்.கே.ஜீ.என்.பீ. ரணதுங்க	மேலதிக பணிப்பாளர் நாயகம்	திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம்
	திரு. கே.சீ.நிரோஷன	மேலதிக செயலாளர்	கமத்தொழில் அமைச்சு
2024.09.18	திரு. ஏ.எச்.எம்.எல். அபேரத்ன	ஆணையாளர் நாயகம்	கமநல அபிவிருத்தி திணைக்களம்
	திரு. ஆர்.எம்.கே.ஜீ.என்.பீ. ரணதுங்க	மேலதிக பணிப்பாளர் நாயகம்	திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம்
	திரு. கே.சீ.நிரோஷன	மேலதிக செயலாளர்	கமத்தொழில் அமைச்சு
2024.12.24	திரு. ஏ.எச்.எம்.எல். அபேரத்ன	ஆணையாளர் நாயகம்	கமநல அபிவிருத்தி திணைக்களம்
	திரு. ஆர்.எம்.கே.ஜீ.என்.பீ. ரணதுங்க	மேலதிக பணிப்பாளர் நாயகம்	திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம்
	திரு. கே.சீ.நிரோஷன	மேலதிக செயலாளர்	கமத்தொழில் அமைச்சு

கணக்காய்வு முகாமைத்துவக் குழு அங்கத்தவர்களும் கூட்டங்களின் பொழிப்பும்

காலாண்டும் திகதியும்	பெயர்	பதவி	நிறுவனம்
I வது காலாண்டு 2024.02.28	திரு. ஆர்.எம்.கே.ஜீ.என்.பீ. ரணதுங்க	மேலதிக பணிப்பாளர் நாயகம்	திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம்
	ஏ.எம்.எல். அபேரத்ன	கமநல சேவைகள் ஆணையாளர் நாயகம்	கமநல அபிவிருத்தி திணைக்களம்
	ஆர்.ஏ.டீ.எஸ். ரணதுங்க	மேலதிக செயலாளர் (கடற்றொழில் வளங்கள் முகாமைத்துவம்)	கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு
III வது காலாண்டு 2024.07.16	திரு. ஆர்.எம்.கே.ஜீ.என்.பீ. ரணதுங்க	மேலதிக பணிப்பாளர் நாயகம்	திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம்
	ஏ.எம்.எல். அபேரத்ன	கமநல சேவைகள் ஆணையாளர் நாயகம்	கமநல அபிவிருத்தி திணைக்களம்
	எச்.ஏ.கே.ஆர் திசேரா	மேலதிக செயலாளர் (உரம்)	கமத்தொழில் அமைச்சு
IV வது காலாண்டு 2024.12.24	ஏ.எஸ்.எச். பெரேரா	மேலதிக பணிப்பாளர் நாயகம்	திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம்
	ரோஹண ராஜபக்ஷ	கமநல சேவைகள் ஆணையாளர் நாயகம்	கமநல அபிவிருத்தி திணைக்களம்
	எச்.ஏ.கே.ஆர் திசேரா	மேலதிக செயலாளர் (உரம்)	கமத்தொழில் அமைச்சு

தாபனக் கட்டமைப்பு

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை





திரு. பேமசிறி ஜாசிங்ஆரச்சி
தலைவர்
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

தலைவரின் செய்தி

2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகளை சமர்ப்பித்து கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் 2024 செயற்பாடுகள் மற்றும் திட்டங்கள் சம்பந்தமாக சுருக்கமாக விபரிக்கிறேன்.

கமத்தொழில் காப்புறுதிச் சபையின் 2024 நிதிசார் பிறப்பாக்கமும் இழப்பீடு செலுத்துதலும் :-

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையினால் 2024 ஆம் ஆண்டில் கமத்தொழில் காப்புறுதி செயற்றிட்டங்கள் மூலமாக 623.28 மில்லியன் ரூபா தெறிய இலாபம் ஈட்டப்பட்டுள்ளதோடு இந்த வருடத்தில் ஈட்டப்பட்டுள்ள தொழிற்பாட்டு இலாபம் 1,799.76 மில்லியன் ரூபாவாகும். பாதிப்பிற்குள்ளாகிய கமக்காரர்களுக்கு துரிதமாக இழப்பீடு செலுத்துதல் சபையின் முதன்மை செயற்பொறுப்பாக அமைவதோடு 2024 அம் ஆண்டிலும் தீவின் பல விவசாய மாவட்டங்களில் மிகையான மழை, வெள்ளப்பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்ட கமக்காரர்களுக்காக சபையின் கட்டாய பயிர்க் காப்புறுதி இழப்பீடாக 2,516.94 மில்லியன் ரூபா பணத்தொகை செலுத்தப்பட்டது.

திட்டங்கள்

ஒரு விவசாய நாடான இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்காக விவசாயத்துறை அண்ணளவாக 7% பங்களிப்பினை வழங்குவதோடு இலங்கை உழைப்புப் படையணியின் 27% இற்கு கிட்டிய அளவு விவசாய நடவடிக்கைகளைச் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொண்டால் இலங்கை சனத்தொகையில் பெரும்பகுதியினர் விவசாயத்தை தமது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளமை தெளிவாகின்றது.

அடிக்கடி கமக்காரர்கள் எதிநோக்க நேரிடுகின்ற எதிர்பாராத வெள்ளப்பெருக்கு, வறட்சி நிலைமைகள், காட்டு யானைகளால் ஏற்படுகின்ற சேதங்கள் பற்றிக் கருத்திற்கொள்ளும்போது கமக்காரரை பயிர்ச்செய்கையின்பால் ஊக்குவிக்க அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மேலதிகமாக அவர்களின் அபாயநேர்வுகளை முகாமை செய்யவேண்டியதன் அவசியம் பற்றியும் நிகழ்கால அரசாங்கம் விசேட கவனம் செலுத்தி இழப்பீடுசெலுத்துகின்ற செயற்பாங்கினை மேலும் வினைத்திறனாக்குவது சம்பந்தமாக அவசியமான பங்களிப்பினை வழங்கியது.

2024 ஆம் ஆண்டில் நான் கடமைகளைப் பொறுப்பேற்று செயலாற்றிய 02 மாதங்கள் எனும் குறுகிய காலப்பகுதிக்குள் அடிமட்டத்தில் மேற்கொண்ட வெளிக்கள பரிசோதனைகளின்போது நிலவுகின்ற பயரக்காப்புறுதிகளுக்கு மேலதிகமாக கமக்காரர்கள் ஈடுபடுகின்ற கைத்தொழில்களுடன் தொடர்புடையதாக அபாயநேர்வுகளை உள்ளடக்கவேண்டிய அவசியம் பெரும்பாலான கமக்காரர்கள் மத்தியில் நிலவுகின்ற சிக்கலாக இனங்கண்டேன். அதன்படி அவ்விதமாக இனங்காணப்பட்ட விவசாயம்சார்ந்த துறைகள் சம்பந்தமாக நிலவுகின்ற அபாயநேர்வுகளை விஞ்ஞானரீதியாக மேற்பார்வைசெய்து அந்த அபாயநேர்வுகளக்கு எற்புடையதான காப்புறுதிக் காப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்படி அலுவல்களை மிகவும் விரிவாக 2025 ஆம் ஆண்டில் நாடளாவியரீதியில் அமுலாக்குதல் தொடர்பாக வெளிக்களப் பணியாளர்களுக்கு அவசியமான பயிற்சியும் வழிகாட்டலும் வழங்கப்பட்டது.

மனிதவள முகாமைத்துவம்

சபையின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி 421 ஆகும். 2024.12.31 இல் ஊழியர்களின் எண்ணிக்கை 327 ஆக அமைந்ததோடு வெற்றிடங்களின் எண்ணிக்கை 94 ஆகும். வரையறுக்கப்பட்ட பணியாளர்களைக்கொண்டு நாடளாவிய சேவையை வழங்குகையில் தோன்றுகின்ற மனிதவளம் சார்ந்த சிக்கல்கள் பற்றிக் கவனம் செலுத்தி பணியாட்டொகுதியினரின் ஆக்கமுறையான உளப்பாங்குகளை வளர்த்தெடுப்பதற்காக அவர்களின் சேவைகளைப் பாராட்டுதலும் ஊக்குவித்தலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது.

சபையின் காப்புறுதி செயற்றிட்டங்களை அடிமட்டத்தில் அமுலாக்கிவருகின்ற மாவட்ட அலுவலகங்களின் முன்னேற்றம் மற்றும் சிக்கல்களை இனங்காண்பதற்காக மாகாணவாரியாக மாவட்டங்களுடன் ஏற்புடைய அனைத்து உத்தியோகத்தர்களையும் அழைப்பித்து உத்தியோகத்தர் மட்டத்திலான முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டது. அதன்போது கறைவான முன்னேற்றத்தை வெளிக்காட்டிய மாவட்டங்களின் முன்னேற்றத்தை வளர்த்தெடுப்பதற்காக மாவட்ட மட்டத்தில் அமுலாக்கக்கூடிய காப்புறுதி செயற்றிட்டங்களை இனங்கண்டு சந்தைப்படுத்தல் மேம்பாட்டு பணிகள் பற்றிய அறிவுறுத்தல்களை வழங்கி சந்தைப்படுத்தலை வளர்த்தெடுத்து இலக்குகளை அடைய அவசியமான ஊக்குவிப்புகளை வழங்கி பௌதீக அவசியப்பாடுகளையும் பூர்த்திசெய்ய உச்சஅளவில் செயலாற்றப்பட்டது.

அரச பொறியமைப்பினை டிஜிட்டல்மயப்படுத்துகின்ற செயற்பாங்கின்கீழ் கமத்தொழில் காப்புறுதிச் சபையினையும் உள்ளடக்குவதற்காக சபையின் தொடங்கப்பட்டிருந்த ERP மென்பொருள் முறைமையின் பணிகள் நிகழ்காலத்துடன் ஒத்துவருவதால் அது சம்பந்தமாக தொடர்ந்தும் அவசியமான ஒத்துழைப்பினையும் வழிகாட்டலையும் வழங்கி நிறைவுசெய்வதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

எதிர்கால நோக்கங்கள்

வளமான நாடு - அழகான எதிர்காலம் எனும் அரசாங்க கொள்கைப் பிரகடனத்தை நடைமுறைப்படுத்தி சபையின் நோக்கங்களை அடைவதற்காக மனிதவளத்தின் திறமைகளையும் உளப்பாங்குகளையும் விருத்திசெய்து மிகழச்சியுடன் செயலாற்றுகின்ற பணியாட்டொகுதியினரை உருவாக்குவதன் மூலமாக கமக்காரர்களுக்கு வளமானது அழகானதுமான வாழக்கையை பெற்றுக்கொடுத்து மனநிறைவுகொண்ட கமக்காரர் சமுதாயமொன்றை கட்டியெழுப்புதல் எமது அடிப்படைக் குறிக்கோளாகும். அதன்படி மேலே குறிப்பிட்டுள்ள திட்டங்களை 2025 ஆம் ஆண்டில் விரிவாக நாடளாவியரீதியில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கிறோம்.

நன்றி

கௌரவ கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரும் கௌரவ கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதியமைச்சரும் கமத்தொழில் காப்புறுதிச்சபையின் அலுவல்களுக்காக வழங்கிய தாராளமான ஒத்துழைப்பு தொடர்பில் எனத வணக்கத்தை தெரிவித்துக்கொள்வதோடு கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரினதும் மேற்படி அமைச்சு உத்தியோகத்தர்களினதும் பங்களிப்பு தொடர்பிலும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பணிப்பாளர்சபை வழங்கிய ஒத்துழைப்பு இவ்வேளையில் விசேடமாக குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும். கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் முகாமைத்துவத்தை உள்ளிட்ட அனைத்து பணியாட்டொகுதியினராலும் வழங்கப்பட்ட ஒத்துழைப்பிற்கு எனது விசேட நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்கு மேலதிகமாக விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தை உள்ளிட்ட பணியாட்டொகுதி மற்றும் கமநல அபிவிருத்தி ஆணையாளர் உள்ளிட் பணியாளர்கள் எமது சேவைகளை மண்ணில் பதியச்செய்விப்பதற்காக வழங்கிய பங்களிப்பு சம்பந்தமாகவும் இத்தருணத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெறிப்படுத்தல் பிரிவு

அத்தியாயம் 3

அபாயநேர்வு முகாமைத்துவ முறையியல் என்றவகையில் உள்நாட்டு விவசாயத் துறைக்கு விவசாயக் காப்புறுதியை அறிமுகம்செய்து உள்நாட்டு விவசாய உற்பத்தியை மேம்படுத்துதல் மற்றும் விவசாயியை பாதுகாப்பதை முக்கியமான கடமையாகக்கொண்டு கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை இயங்கிவருகின்றது. வறட்சி, வெள்ளப்பெருக்கு, காட்டு யானைகளால் சேதம் உள்ளிட்ட இயற்கை அனர்த்த நிலைமையில் கமக்காரர்கள் எதிர்நோக்குகின்ற பொருளாதார சிக்கல்களுக்கு சிறந்த தீர்வாக கமத்தொழில் காப்புறுதி முறையியல் முக்கியத்துவம் வகிக்கின்றது. அத்துடன் விவசாய பொருளாதார பாங்கின் ஊடாக உள்நாட்டு பொருளாதாரத்தை பலப்படுத்துகையில் விவசாய அபாயநேர்வு முகாமைத்துவத்தை மிகவும் நடைமுறைச் சாத்தியமானவகையில் பிரயோகித்தல் உள்நாட்டு விவசாயப் பொருளாதாரத்தையும் வாழக்கைப் பாங்கினையும் உறுதியான மட்டத்தில் பேணிவர பெரிதும் உறுதுணையாக அமைந்துள்ளது. குறிப்பாக கமக்காரர்களுக்கு மிகவும் நெருக்கமான பயிர்க் காப்புறுதி செயற்றிட்டம், கால்நடைக்காப்புறுதி செயற்றிட்டம், சுவசெத மற்றும் திடீர் விபத்துக் காப்புறுதி, விவசாய உபகரணக் காப்புறுதி, களஞ்சியக் காப்புறுதி மற்றும் மூன்றாந் தரப்பு மோட்டார் வாகனக் காப்புறுதி போன்ற அதிக நன்மைகளைக்கொண்ட பல காப்புறுதி செயற்றிட்டங்கள் கமக்காரர்களுக்காக சபையினால் அமுலாக்கப்பட்டு வருகின்றன.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் சேவைகளை கமக்காரர் மத்தியில் விரிவாக்குகையில் மிகவும் முக்கியமான செயற்பொறுப்பினை ஈடேற்றுதல் நெறிப்படுத்தல் பிரிவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. சபை மூலமாக அமுலாக்க எதிர்பார்க்கப்படுகின்ற எதிர்கால வேலைத்திட்டத்தை உள்ளிட்ட கூட்டுத் திட்டத்திற்கு அமைவாக அனைத்துவிதமாக தாபனஞ்சார் திட்டங்களை தயாரித்தல், மேற்படி திட்டங்களை அமுலாக்கச் செய்விப்பதற்காக நாடு பூராவிலும் அமைந்துள்ள மாவட்ட அலுவலகங்களை நெறிப்படுத்துதல், அதற்கான மானிட மற்றும் பௌதீக அவசியப்பாடுகளை நிறைவுசெய்தலை உள்ளிட்ட தனித்துவமான செயற்பொறுப்பு நெறிப்படுத்தல் பிரிவினால் ஆற்றப்பட்டு வருகின்றது.

- விவசாயத் துறையில் காப்புறுதிச் சேவைகளை வழங்கி வருகின்ற பிரதானமான அரச நிறுவனமென்றவகையில் உள்நாட்டு விவசாயத்தை மேம்படுத்துதல் மற்றும் விவசாயியின் பொருளாதாரத்தை உறுதிநிலைப்படுத்துவதற்காக கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்பினை உச்சஅளவில் ஈடேற்றுவதை நோக்கமாகக்கொண்டு, 2024 ஆம் ஆண்டிலும் பல காப்புறதி செயற்றிட்டங்களை நாடளாவியரீதியில் அமுலாக்க நெறிப்படுத்தல் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.
    1. பயிர்க் காப்புறுதி செயற்றிட்டம்
- நெற்பயிர்க் காப்புறுதி செயற்றிட்டம்
- சோளச் செய்கை காப்புறுதி செயற்றிட்டம்
- பெரிய வெங்காய காப்புறுதி செயற்றிட்டம்
- உருளைக் கிழங்கு காப்புறுதி செயற்றிட்டம்
- மிளகாய் செய்கை காப்புறுதி செயற்றிட்டம்
- சோயா செய்கை காப்புறுதி செயற்றிட்டம்
- உபஉணவுப் பயிர் காப்புறுதி செயற்றிட்டம் (எள்ளு, குரக்கன், கொள்ளு, பயறு,கவ்பி, உழுந்து)
- கரும்புச் செய்கை காப்புறுதி செயற்றிட்டம்
- ஏற்றுமதிப் பயிர் காப்புறுதி செயற்றிட்டம் (மிளகு, கறுவா)
- பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை காப்புறுதி செயற்றிட்டம் (தேயிலை)
- தெங்குச் செய்கை காப்புறுதி செயற்றிட்டம்
- மலர் வளர்ப்பு காப்புறுதி செயற்றிட்டம்

- இஞ்சி செய்கை காப்புறுதி செயற்றிட்டம்
- காய்கறிச் செய்கை காப்புறுதி செயற்றிட்டம்
- வாழைச் செய்கை காப்புறுதி செயற்றிட்டம்
- பழச் செய்கை காப்புறுதி செயற்றிட்டம்
- களஞ்சியக் காப்புறுதி செயற்றிட்டம்

1.களஞ்சியக் காப்புறுதி செயற்றிட்டம்

2. விவசாய உபகரண காப்புறுதி செயற்றிட்டம்

3. கால்நடைக் காப்புறுதி செயற்றிட்டம்

- மாடுகள்
- ஆடுகள்

4. திடீர் விபத்து காப்புறுதி செயற்றிட்டம்

5. சுவசெத சுகாதாரக் காப்புறுதி செயற்றிட்டம்

6. மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதி செயற்றிட்டம்

1. சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்
   - கமக்காரர் ஓய்வூதியத் திட்டம்
   - கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்

வறட்சி, வெள்ளப்பெருக்கு மற்றும் காட்டு யானைகளால் புரியப்படுகின்ற அனர்த்தங்களால் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு ஏற்படக்கூடிய சேதங்கள் காரணமாக கமக்காரர் சமுதாயம் முகம்கொடுக்கின்ற சிரமங்களுக்கான தீர்வாக நெல், சோளம், உருளைக்கிழங்கு, சோயா மற்றும் மிளகாய் செய்கைகளுக்காக கமக்காரர்களினதும் அரசாங்கத்தினதும் பங்களிப்புடனான கட்டாயக் காப்புறுதித் திட்டத்திற்காக கமக்காரர்களை சேர்த்துக்கொள்ளல் இடம்பெற்றதோடு 2018 சிறு போகத்தில் இருந்து கமக்காரர்களிடமிருந்து கட்டுப்பணம் அற்விடப்படாமல் அரசாங்கத்தின் கொள்கைரீதியான தீர்மானத்தின்பேரில் ஏக்கரொன்றுக்காக ரூ. 40,000 உச்ச எல்லைக்கு கட்டுப்பட்டதாக காப்புறுதிக் காப்பீட்டினை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. கமத்தொழில் அமைச்சு, கமநல சேவைகள் திணைக்களம், விவசாயத் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, அரச மற்றும் அரசசார்பற்ற வங்கிகளை உள்ளிட்ட ஏற்படைய அனைத்து நிறுவனங்களினதும் இணைப்பாக்கத்துடன் இந்த காப்புறுதி செயற்றிட்டம் 2018 சிறுபோகத்தில் இருந்து சபையினால் நாடளாவியரீதியில் அமுலாக்கப்பட்டு வருகின்றது.

நெறிப்படுத்தல் பிரிவினால் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்:

- 2024 ஆம் ஆண்டின் புத்தரிசி விழா அதிமேதகு சனாதிபதியவர்களின் தலைமையில் 2024.04.05,06 அகிய தினங்களில் அநுராதபுரம் ஜயஸ்ரீ மகாபோதிக்கருகில் நடாத்தப்பட்டவேளையில் அனுசரணை வழங்கியமையும் செயற்பாடுகளை மேற்கொண்டமையும்.
- மூன்றாந்தரப்பு மோட்டார் வாகன காப்புறுதி செயற்றிட்டம் சம்பந்தமான 02/2023 சுற்றிக்கையை திருத்தியமை.
- கண்டி, புத்தளம், காலி, கழுத்துறை, குருநாகல், மாகோ, மொணறாகலை, எம்பிலிபிட்டிய, அம்பாந்தோட்டை, திருகோணமலை, மாத்தறை, கொழும்பு, பதுளை, தம்புத்தேகம, இரத்தினபுரி, அகிய மாவட்டங்களின் சந்தைப்படுத்தல் மேம்பாட்டுப் பணிகளை இற்றைப்படுத்துவதற்காக பெனர்களையும் தண்டுப் பிரசுரங்களையும் மாவட்டங்களின் தேவைக்கிணங்க அச்சிட்டுக்கொள்ள அவசியமான நிதியேற்பாடுகளையும் அச்சிடல் மாதிரிகளையும் வழங்கியமையும் அலோசனைகளை வழங்கியமையும்.
- சந்தை சாத்தியவளங்களுக்கு ஏற்ற விதத்தில் வாடிக்கையாளர்களின் வசதியை உள்ளிட்ட விடயங்கள் பற்றிக் கவனஞ்செலுத்தி

கேகாலை, நுவரெலியா மாவட்ட அலுவலகங்களை புதிய கட்டிடங்களில் நிறுவியமை.

- மாவட்ட அலுவலக கட்டிடங்களையும் சபைக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களையும் அவசியப்பாட்டிற்கிணங்க திருத்தியமைத்தமையும் வாடிக்கையாளர்களை கவரத்தக்கவகையில் அமைத்தமையும் (அநுராதபுரம், குருநாகல், மாத்தறை, யாழ்ப்பாணம், மாகோ, கண்டி, அம்பாந்தோட்டை, எம்பிலிபிட்டிய, காலி, பொலநறுவை, பதுளை, நுவரெலியா, மன்னார், கழுத்துறை, தம்புத்தேகம)
- சபையின் விடுமுறை இல்லமென்றவகையில் கண்டி விடுமுறை இல்லத்தை தொடங்கியமை.
- சபையின் காப்புறுதி சந்தைப்படுத்தல் அலுவல்களை ஒழுங்கமைப்பதற்காக புதிய வெளிவாரி பிரதிநிதிகளை சேர்த்துக்கொண்டமையும் காப்புறுதி முறையயில்கள் பற்றி நாடளாவிய விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்தியமையும்.
- கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபையின் வெளிவாரி சந்தைப்படுத்தல் பிரதிநிதிகள் என்றவகையில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்ளுடன் பிரதிநிதிகள் ஒன்றுகூடலை நடாத்தியமை (மன்னார், மாத்தளை)
- கமத்தொழில் அமைச்சரை உள்ளிட்ட அரச பிரிவு உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் பயிர்ச்சேத காசோலைகளை வழங்குகின்ற வைபவத்தை நடாத்தியமை (இரத்தினபுரி, குருநாகல், எம்பிலிபிட்டிய, மாகோ, அம்பாந்தோட்டை, அங்குணுகொலபெலெஸ்ஸ, முறவெசிஹேன, சூரியவெவ, மயுரபுர.)
- இரத்தினபுரி, கண்டி, மொணறாகல மாவட்டங்களில் நடமாடும் பிரச்சார நிகழ்ச்சிகளை நடாத்தியமை.
- அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற "தக்ஷின ஜன மெஹெவர" நிகழ்ச்சியுடன் இணைந்து சந்தைப்படுத்தல் மேம்பாட்டுக் கூடமொன்றை பேணிவருதல்.
- வட மாகாண விவசாயத் திணைக்களத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட கண்காட்சிக்காக யாழ் மாவட்ட உத்தியோகத்தர்களை சபையின் சார்பாக பங்கேற்கச் செய்வித்தமையும் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிகழ்ச்சிகளை அமுலாக்கியமையும்.
- தெஹிஅத்தகண்டிய கால்நடை அபிவிருத்தி நிகழ்ச்சியில் பங்கெற்ற 600 கமக்காரர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சியை நடாத்தியமை.
- மாவட்ட அலுவலகங்களுக்கிடையில் "கமத்தொழில் காப்புறுதி அபிமன்" போட்டித்தொடரை நடாத்தியமை.
- 2024 சிறுபோக பயிர்ச்சேத பரிசோதிப்புகளுக்காக சபை உத்தியோகத்தர்களை பங்கேற்கச் செய்வித்தமை.
- 2024/25 பெரும்போகத்தில் வெள்ளப்பெருக்கு காரணமாக பயிர்ச்சேதமேற்பட்ட அம்பாறை, திருகோணமலை, கிளிநொச்சி, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு, பொலநறுவை, தம்புத்தேகம உள்ளிட்ட மாவட்டங்களுக்கு பயிர்ச்சேதபரிசோதனை வெளிக்கள அவதானிப்பு குழுக்களை அனுப்பிவைத்தமையும் பயிர்ச்சேத பரிசோதிப்புகளை மேற்கொண்டமையும்.

காப்புறுதிப் பிரிவு

அத்தியாயம் 4

- **பயிர்க் காப்புறுதி**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் காப்புறுதிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்கின்ற பிரதான பணியாக அமைவது காப்புறுதிச் செயற்றிட்டங்களை தயாரித்தல், அவை பற்றி விழிப்பூட்டுதல் மற்றும் நடைமுறைப்படுத்தியுள்ள காப்புறுதி காப்புறுதி செயற்றிட்டங்களின்கீழ் தோன்றுகின்ற உரிமைகோரல்களுக்கான இழப்பீட்டுத் தொகைகளைவிடுவித்தல் சம்பந்தமான கடமைகளை மேற்கொள்வதாகும்.

அதன்படி முந்திய வருடங்களில் போல் பயிர்ச்சேதங்களை பரிசோதனையிடல் கீழே குறிப்பிட்டடவாறு மேற்கொள்ளப்பட்டது. அதன்பொழிப்பு பின்வருமாறு

- **இழப்பீடு செலுத்துதல்**





போகம்	கமக்காரர் எண்ணிக்கை	ஏக்கரளவு	இழப்பீட்டுத் தொகை ரூ. (மில்.)
2023 சிறு	36629	30,627	726.11
2023/24 மகா	76189	131,277	1,734.57
2024 சிறு	2691	2,573	56.24
கூட்டுத் தொகை	**115,509**	**164,477**	**2,516.92**

இழப்பீட்டுத் தொகைகளை விடுவித்தலுக்கு முன்னுரிமையளித்து கடமைகளைப் புரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2023/24 பெரும்போகம் மற்றும் 2024 சிறு போகத்தின் பயிர்ச்சேத இழப்பீட்டுத் தொகைகளை செலுத்துதலுடன் சம்பந்தப்பட்ட அறிவுறுத்தல்களை வழங்கி இழப்பீடு செலுத்துவதற்காக பின்னணி வகுக்கப்பட்டது.

2023 சிறு போகத்தில் இழப்பீடு செலுத்துதல் மற்றும் 2023/24 பெரும்போகத்தில் இழப்பீடு செலுத்துதலும் நிறைவுசெய்யப்பட்டது. அத்துடன் 2024 சிறுபோகத்தின் இழப்பீடு செலுத்துதலில் 80% 2024 ஆம் ஆண்டில் நிறைவுசெய்யப்பட்டது.

இழப்பீட்டுத் தொகைகளை விடுவிக்கையில் இழப்பீட பெறுனர்களக்காக வழங்கவேண்டிய திடிர் விபத்து காப்புறுதிச் சான்றிதழை விநியோகித்தல் தொடர்பிலான தொழிற்பாட்டுச் செலவு தற்போது அதிகரித்துள்ளமையால் பணிபக்பாளர் சபைக்கு விழிப்பூட்டி காப்புறுதிச் சான்றிதழை விநியோகிப்பதற்குப் பதிலாக

SMS வழிமுறையூடாக கமக்காரர்களுக்கு விழிப்பூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு ஒவ்வொருந் கமநல சேவைகள் நிலையத்திலும் கமக்காரர்களுக்கு திடீர் விப்பத்துக் காப்புறுதி உள்ளதாக போஸ்டரைக் காட்சிப்படத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. சபையின் வெப் பக்கத்திலும் இந்த காப்புறுதி பற்றிய தகவல்களை உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இழப்பீட்டுத் தொகைகளை விடுவிக்கையில் கமக்காரர்களின் கணக்குகளுக்கு இழப்பீட்டுத் தொகைகளை வரவுவைத்த பின்னர் தொலைபேசி இலக்கங்களை வழங்கியுள்ள கமக்காரர்களின் தொலைபேசி இலக்கங்களுக்கு பணத்தை வைப்புச்செய்தமை பற்றிய செய்தியொன்றை அனுப்பிவைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2023/24 பெரும்போகம், 2024 சிறுபோகம் மற்றும் 2024/25 பெரும்போகத்தில் பயிர்ச்சேதமேற்பட்ட மாவட்டங்களில் பயிர்ச்சேதத்தை பரிசோதிப்பதற்கான குழுக்களை ஈடுபடுத்தி சேதங்கள் பரிசோதிக்கப்பட்டதோடு அதன் மூலமாக அரசாங்கத்தின் பொறுப்பினை இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆண்டுக்குள் பயிர்ச்சேத பரிசோதிப்புகள் மற்றும் இழப்பீட்டுக் கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான தொழிற்பாட்டுச் செலவினமாக ஏறக்குறைய 6 மில்லியன் ரூபா செலவாகியுள்ளது. 2023/24 பெரும்போகத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு நிலைமை மற்றும் 2024/25 பெரும்போகத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக துரிதமாக பயிர்ச்சேத பரிசோதிப்புகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் மூலமாக உண்மையான சேதத்தை இனங்காண இயலுமாயிற்று.

- **காப்புறுதி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்**



அத்துடன் 2024 ஆம் ஆண்டில் 06 பயிர்களுக்காக நிலவிய கட்டாயப் பயிர்க் காப்புறுதி செயற்றிட்டம் இற்றைப்படுத்தப்பட்டது. இழப்பீட்டுக்'கோரிக்கைக்கான உரிமை விண்ணப்பமும் இற்றைப்படுத்தப்பட்டது. அதன் மூலமாக GiyoGoviyaa தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காகவும் அவசியமான பின்னணி வகுக்கப்பட்டுள்ளது.

கட்டாய பயிர்க் காப்புறுதியின்கீழ் காட்டுயானைகளால் எற்படுகின்ற சேதத்தை பரிசோதிக்கையில் ஒருசில பிரதேசங்களில் போதுமான அளவிலான வனசீவராசி உத்தியோகத்தர்கள் /காடு பேணல் உத்தியோகத்தர்கள் இன்மை பதிவாகியுள்ளமையால் மேற்படி 2017 /07 சுற்றறிக்கையில் திருத்தங்களை மேற்கொண்டு மாவட்ட உத்தியோகத்தர்களை அதற்காக ஈடுபடுத்த அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டது.

அத்துடன் கட்டாய பயிர்க்காப்புறுதியில் சின்ன வெங்காயச் செய்கையை உள்ளடக்குவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சிற்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

காப்புறுதி நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாக ERP இற்கான தகவல்களை வழங்கி அந்த பணியை மேற்கொள்வதற்காக பிரிவு மூலமாக வழங்கவேண்டிய ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இரப்பர் வளர்ப்பிற்காக காப்புறதியொன்று அவசியமென இரப்பர் அபிவிருத்தி திணைக்களம் அறிவித்தமையால் அதற்கான காப்புறுதித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது.

அத்துடன் கரும்புச்செய்கை காப்புறுதிக்கான காப்புறுதித் தொகையை

அதிகரித்து இற்றைப்படுத்தப்பட்டது. பப்பாசி செய்கை காப்புறுதியும் இற்றைப்படுத்தப்பட்டது.

பயிர்க்காப்புறுதியின்போது சாத்தியவளத்திற்கிணங்க அந்தந்த மாவட்டங்களுக்கான இலக்குகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்படி பயிர்க்காப்புறுதி செயற்பாடுகளை விரிவாக்க மாவட்டங்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

மாத்தறை மாவட்டத்தின் நில்வளா கங்கைக்கு குறுக்காக நிர்மாணிக்கப்பட்ட உவர்நீர் தடுப்பணை காரணமாக பயிர்ச்செய்கைகளுக்கு விளைந்த சேதத்திற்காக கமக்காரர்கள் இழப்பீடு கோரியுள்ளபோதிலும் அந்த சேதம் நடைமுறையிலுள்ள சுற்றறிக்கையில் உள்ளடக்கப்படாமையால் மேற்படி கமக்காரர்களுக்கு ஏற்பட்டுள்ள சேதம் தொடர்பில் நிதியேற்பாடுகளை பெற்றுக்கொள்ள அமைச்சரவைப் பத்திரமொன்று தயாரிக்கப்பட்டு அமைச்சிற்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக பிரிவுகளுடன் நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கவும் கணக்காய்வு அலுவல்களுக்காக ஏற்புடைய பதில்களை வழங்கி கிடைக்கின்ற அறிவுறுத்தல்களுக்கு அமைவாக முறையியல்களை தயாரித்துக்கொள்ளவும் ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதைப்போலவே நிறுவனத்தில் உள்ள ஏனைய பிரிவுகளுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுதலும் மாவட்ட அலுவலகங்களுக்கு அவசியமான அறிவுறுத்தல்களை வழங்கி காப்புறுதி நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதும் காப்புறுதிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

கால்நடைக் காப்புறுதி



பயிர்க் காப்புறுதிக்கு மேலதிகமாக கால்நடைக்காப்புறுதி செற்பாடுகளிலும் 2024 ஆம் ஆண்டில் விசேட கவனம் செலுத்தப்பட்டு காப்புறுதி செயற்பாடுகளை நெறிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

விலங்கு இனம்	வருமானம் ரூ. (மில்)	இழப்பீடு செலுத்துதல் ரூ. (மில்)
மாடுகள் காப்புறுதி	9.8	3
ஆடுகள் காப்புறுதி	9.9	2.5
கூட்டுத் தொகை	**19.7**	**5.5**

ஆடுகளை காப்புறுதி செய்கையில் 6 மாதங்களுக்கு குறைவான விலங்குகளுக்காக காப்புறுதி அவசியமென்பது உறுதியானமை காரணமாக அது சம்பந்தமாக பணிப்பாளர் சபைக்கு விழிப்பூட்டி அதற்கான காப்புறுதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதைப்போலவே கால்நடை மருத்துவர்களுக்கு பிரேத பரிசோதனைக்காக செலுத்தப்படுகின்ற கொடுப்பனவினை அதிகரித்து கால்நடைக் காப்புறுதியை உக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முன்னோடி நிக்ழ்ச்சித்திட்டமாக செல்லப் பிராணிகளை காப்புறுதி செய்வதற்கான காப்புறுதி செயற்றிட்டமொன்று தயாரிக்கப்பட்டது.

அதன்படி 2024 ஆம் ஆண்டில் காப்புறுதிப் பிரிவின் பிரதான பணியென்றவகையில் காப்புறுதிச் செயற்றிட்டங்களின்கீழ் இழப்பீடு செலுத்துதல் பற்றிய ஒட்டுமொத்த பொழிப்பு கீழே காட்டப்பட்டவாறு அமையும்.

ஒட்டுமொத்த இழப்பீடு செலுத்துதல்

காப்புறுதி வகை	கமக்காரர்களின் எண்ணிக்கை	இழப்பீட்டுத் தொகை ரூ. (மில்.)
பயிர்க் காப்புறுதி	132,416	3,002.00
கால்நடைக் காப்புறுதி	156	5.50
கூட்டுத் தொகை	**132,572**	**3,007.50**

அதைப்போலவே ஆண்டிறுதியளவில் 2023 சிறுபோகம், 2023/24 மகா, 2024 சிறுபோகம் சம்பந்தமான மேன்முறையீடுகளை பரிசீலனை செய்தல் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் 2024/25 பெரும்போக பயிர்ச்சேத இழப்பீடு செலுத்துதல் தொடர்பானப பூர்வாங்க கடமைப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

மேலும் 2023 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை மற்றும் 2025 ஆம் அண்டின் செயற்பாட்டுத் திட்டம் என்பவற்றுக்கான காப்புறுதிப் பிரிவின் கடமைகளைப் புரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2024/25 பெரும்போகத்தின் நவெம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக இடம்பெற்ற பயிர்ச்சேதத்திற்காக துரிதமாக இழப்பீடு செலுத்த அவசியமான பின்னணி வகுக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக பாராளுமன்ற வாய்மொழி மூல வினாக்கள், கமக்காரர்களிடமிருந்து கிடைக்கின்ற கடிதங்கள் மற்றும் வேறு நிறுவனங்களிடமிருந்து கிடைக்கின்ற கடிதங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி கடமைகள் புரியப்பட்டன.

மேலும் 2025 ஆம் ஆண்டில் அமுலாக்கத் திட்டமிடுகின்ற காப்புறுதி செயற்றிட்டங்களை தயாரிக்க அவசியமான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

உள்ளக கணக்காய்வுப் பிரிவு

அத்தியாயம் 5

2024ஆம் ஆண்டுக்காக கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையில் அமுலில் உள்ள காப்புறுதி மற்றும் சமூகப் பாதுகாப்பு திட்டங்களுக்காக அந்தந்த பிரிவுகள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்ட வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவாக உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் அமுலாக்கப்பட்டன.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபைக்காக நிலவுகின்ற அபாயநேர்வு முகாமைத்துவ நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு ஒவ்வொரு பிரிவு மற்றும் மாவட்ட அலுவலகங்களின் பணிகளை வினைத்திறன்மிக்கதாகவும் விளைவாற்றல்மிக்கதாகவும் ஈடேற்றுவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளின் அளவுசார்தன்மை மற்றும் திட்பநுட்பத்தன்மையின் செயற்பாட்டினை மதிப்பீடுசெய்வதற்காக ஒவ்வொருதுறையின்கீழும் உள்ளக கணக்காய்வு பரீட்சித்தல்கள் திட்டமிட்டு அமுலாக்கப்பட்டது.

உள்ளக கணக்காய்வு வட்டம்



அதன்படி உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பணிப்பாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் முகாமைத்துவ உதவியாளரின் சேவையைக் கொண்டதாக 2024 ஆம் ஆண்டுக்காக 29 உள்ளக கணக்காய்வு பரிசோதிப்புகள் தலைமை அலுவலகத்தின் ஒவ்வொரு பிரிவுகளிலும் புவியியல்ரீதியாக வியாபித்துள்ள 30 மாவட்ட அலுவலகங்களையும் அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

நிர்வாகப் பிரிவு

1. சபையின் ஒதுக்க வாகனஓட்டப் பராமரிப்பு, பழுதுபார்த்தல் மற்றும் எரிபொருள் பாவனை பற்றிய முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை.

2. உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் செலுத்துதல் மற்றும் சம்பள ஏற்றம் செலுத்துதல் பற்றிய முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை.

நிதிப் பிரிவு

1. காசேடு மற்றும் வங்கிக் கணக்கு பரிசீலனை - 001622 ஆம் இலக்கமுடைய கால்நடைக் காப்புறுதி கணக்கு.
2. கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் 112347 இலக்கமுடைய கணக்கு.
3. கலப்பு முற்பணம் பெறுதல் மற்றும் முற்பணம் தீர்த்தல் பற்றிய முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை.

4. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதி இறுதி அறிக்கைகளில் அடங்கிய கணக்கீட்டுக் குறைபாடுகளை சரிசெய்தல் தொடர்பான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை.

நிர்வாகப் பிரிவு

5. சபையின் ஒதுக்க வாகனஓட்டப் பராமரிப்பு, பழுதுபார்த்தல் மற்றும் எரிபொருள் பாவனை பற்றிய முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை.

6. உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் செலுத்துதல் மற்றும் சம்பள ஏற்றம் செலுத்துதல் பற்றிய முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை.

நிதிப் பிரிவு

3. காசேடு மற்றும் வங்கிக் கணக்கு பரிசீலனை - 001622 ஆம் இலக்கமுடைய கால்நடைக் காப்புறுதி கணக்கு.
4. கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் 112347 இலக்கமுடைய கணக்கு.
7. கலப்பு முற்பணம் பெறுதல் மற்றும் முற்பணம் தீர்த்தல் பற்றிய முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை.

8. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதி இறுதி அறிக்கைகளில் அடங்கிய கணக்கீட்டுக் குறைபாடுகளை சரிசெய்தல் தொடர்பான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை.

காப்புறுதிப் பிரிவு

9. இழப்பீடு செலுத்துதல் கணிப்பிடுதல் சம்பந்தமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை.
   1. கால்நடை இழப்பீடு செலுத்துதல் - 2. நெற்செய்கை இழப்பீடு செலுத்துதல்
   3. சோள இழப்பீடு செலுத்துதல்

கமக்காரர் ஓய்வூதியம்

2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதி இறுதி அறிக்கைகளில் குறைபாடுகளை நிவர்த்திசெய்து கொள்ளல் சம்பந்தமான முகாமைத்து கணக்காய்வு

அறிக்கைகளில் கமக்காரர் ஓய்வூதிய பிரிவினால் திருத்திக்கொள்ளக்கூடியதாக நிலவுகின்ற குறைபாடுகள் சம்பந்தமான விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மாவட்ட அலுவலகம்

மாத்தளை, புத்தளம், திருகோணமலை, பதுளை, அம்பாறை, மட்டக்களப்பு, கழுத்துறை ஆகிய மாவட்டங்களில் அலுவலகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள விதம் மற்றும் காப்புறுதி அலுவல்கள் மாவட்ட மட்டத்தில் அமுலாக்கப்பட்டுள்ள விதம் பரீட்சிக்கப்பட்டு முகாமைத்துவ உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கள்

அரசாங்க பொறுப்புமுயற்சிகள் திணைக்களம் வெளியிட்டுள்ள அரசிற்கு சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான (SOE) வழிகாட்டிக் கோவையின் 4.2 இன்படி சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அங்கத்தவர்களை நியமித்தல், கூட்டங்களுக்கு அழைப்புவிடுத்தல் மற்றும் அறிக்கைசெய்தல் மேற்கொள்ளப்படுகின்றன.

அவதானிப்பு உத்தியோகத்தர்கள்.

1. பிரதம உள்ளக கணக்காய்வாளர்கள் – கமத்தொழில் அமைச்சு.
2. கணக்காய்வு அத்தியட்சகர் – தேசிய கணக்காய்வு அலுவலகம்.

நிர்வாக மற்றும் மனிதவளப் பிரிவு

அத்தியாயம் 6

2024 ஆம் ஆண்டு கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் மனித வளங்கள் மற்றும் நிர்வாக பிரிவு சம்பந்தமாக எடுத்துக்கொண்டால் எமது ஊழியர் குழாத்தின் வளர்ச்சி மற்றும் அவர்களின் பங்களிப்பினை பாராட்டுதல் தொடர்பில் முனைப்பாகத் தெரிகின்ற வருடமாக அமைந்தது. நிறுவனத்தின் ஒட்டுமொத்த தொழிற்பாட்டு வெற்றிக்கு அத்தியாவசியமானதாக அமைகின்ற வினைத்திறனையும் ஒத்துழைப்பு சேவைகள் சுற்றாடலையும் பேணிவர எம்மால் இயலுமாயிற்று.

இவ்வருடத்தில் ஊழியர் நலனோம்பல், பயிற்சி மற்றும் அபிவிருத்தி, செயலாற்றுகை முகாமைத்துவம் மற்றும் ஆட்சேர்ப்பு செயற்பாங்குகளை முன்னேற்றுவதற்காக கணிசமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஊழியர்களின் தொழில்சார் விருத்திக்கு ஒத்தாசை புரிதல், புதிய திறன்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் தாபனஞ்சார் நோக்கங்களை அடைவதற்காக அவர்களுக்கு அவசியமான ஒத்துழைப்பினை வழங்குவது தொடர்பிலேயே எமது பிரதான கவனம் செலுத்தப்பட்டது.

இடையறாத கற்றல் மற்றும் இசைவாக்கமடைவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் உபாய மார்க்கங்களை பாவித்து எமது தொழிற்பாடுகளை தொடர்ந்தும் டிஜிட்டல்மயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்மூலமாக மனிதவள செயற்பாங்குகளை மிகவும் ஒழுங்கமைத்து தரவுப் பகுப்பாய்வின் ஊடாக மிகவும் சரியான முடிவுகளை எடுக்க அவசியமான அத்திவாரம் தயாரிக்கப்பட்டது. அதன்படி சபைக்கு அறிமுகம்செய்ய செயலாற்றப்பட்ட புதிய தொழில்முயற்சி வளங்கள் திட்டத்திற்கு (ERP) அமைவாக சபை உத்தியோகத்தர்களிடம் அறிமுகம் செய்யப்பட்டுள்ள மனிதவள தகவல் முறைமை (HRIS) மூலமாக உத்தியோகத்தர்களின் வரவு, லீவு, மேலதிக நேரத்திற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல், உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்தலில் இருந்து இளைப்பாறும் வரையிலான அனைத்து நடவடிக்கைகளும் டிஜிட்டல்மயப்படுத்தப்பட்டுள்ளது.

AAIB இன் மனிதவளங்கள் மற்றும் நிர்வாக பிரிவு என்றவகையில் எமது ஊழியர்களை நிறுவனத்தின் பெறுமதிமிக்க சொத்தாக கருதுவதோடு அவர்களின் அர்ப்பணிப்பு, திறமைகள் மற்றும் இடையறாத பங்களிப்பு எமது வெற்றிக்கு அத்தியாவசியமானதென்பதை வலியுறுத்துகிறோம். 2024 ஆம் ஆண்டில் பெற்ற வெற்றியின் அடிப்படையில் எதிர்காலத்திலும் AAIB இன் மனிதவள முகாமைத்துவத்தை மென்மேலும் உயர்ந்த நிலைமைக்கு கொண்டுவர நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

1. பணியாட்டொகுதி

2024.12.31 ஆந் திகதியில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபையின் 2024.12.31 ஆந் திகதியிலான பணியாட்டொகுதி பகுப்பாய்வு

1. பணியாட்டொகுதியின் உள்ளடக்கம்

1.1 சேவைகள் பிரிவிற்கிணங்க நிரந்தர பணியாட்டொகுதியின் உள்ளடக்கம்

சேவைகள் பிரிவு	பதவிப் பெயர்	அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை	உள்ளோர் எண்ணிக்கை	வெற்றிடங்கள்
சிரேஷ்ட முகாமைத்துவம்				
	பணிப்பாளர் நாயகம்	1	1	-

பணிப்பாளர்	5	1	4
முகாமைத்துவம்			
பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர்	45	38	7
கனிஷ்ட முகாமைத்துவம்			
நிர்வாக உத்தியோகத்தர்	2	2	-
முறைமை நிர்வாகி	1	1	-
நிதி உத்தியோகத்தர்	1	-	1
திட்டமிடல் உத்தியோகத்தர்	1	-	1
இணை உத்தியோகத்தர்கள்			
அபிவிருத்தி உத்தியோகத்தர்	55	40	15
திட்டமிடல் உத்தியோகத்தர்	1	-	1
உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்	1	-	1
முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப)			
போக்குவரத்து உதவியாளர்	1	1	-
செயலாளர்	1	1	-
புத்தகக் காப்பாளர்	4	1	3
மென்பொருள் மற்றும் வலையமைப்பாக்க வினைஞர்	1	1	-
தொழில்நுட்ப உத்தியோகத்தர் (செவிப்புல/கட்புல)	1	-	1
முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத)			
முகாமைத்துவ உதவியாளர்	220	191	29
ஆரம்ப (வினைஞர்)			
சாரதி	38	19	19
ஆரம்ப (வினைஞரல்லாத)			
அலுவலக உதவியாளர்	42	30	12
கூட்டுத்தொகை	**421**	**327**	**94**

சபையின் செயற்பொறுப்பினை இடையறாமமல் மல் பேணிவருவதற்காக உத்தியோகத்தர்களைகளை சேர்த்துக்கொள்ளும்வரை நிலவுகின்ற வெற்றிடங்களில் அத்தியாவசியமான ஒருசில பதவிகளுக்காக பிரதான அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்காக கீழே குறிப்பிட்ட பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

1.2 நிரந்தரமல்லாத ஊழியர்கள்

சேவைத் தொகுதி	பதவிப் பெயர்	உள்ளோர் எண்ணிக
இணை உத்தியோகத்தர்கள்	அபிவிருத்தி உத்தியோகத்தர்	7
முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத)	முகாமைத்துவ உதவியாளர்/வெளிக்கள	17
ஆரம்ப (வினைஞர்)	சாரதி	12
ஆரம்ப (வினைஞரல்லாத)	அலுவலக உதவியாளர உதவியாளர் (துப்பரவேற்பாட்டுத் தொழிலாளி)	9
	கூட்டுத்தொகை	**45**

1.3 ஆண்/பெண் பால்நிலை பகுப்பாய்வு

பால்நிலை	ஊழியர் எண்ணிக்கை
ஆண்	153
பெண்	174
கூட்டுத்தொகை	**327**



1.4 சேவைக் காலத்திற்கமையப் பகுப்பாய்வு

வருடம்	ஊழியர் எண்ணிக்கை	சதவீதம்
30 க்கு மேல்	15	5%
26 - 30	7	3%
21 - 25	9	3%
16 - 20	44	10%
15 வயதிற்குட்பட்டவர்கள்	252	79%
மொத்தம்	**327**	**100%**

1.5 வயதுப் பகுப்பாய்வு

வயது பிரிவு /		சதவீதம்
56 - 60	23	8%
51 - 55	28	9%
46 - 50	54	16%
41 - 45	51	16%
36 - 40	34	10%
31 - 35	33	10%
30க்கு கீழ்	104	31%
மொத்தம்	**327**	**100%**



ஓய்வூதியப் பிரிவு

7 அத்தியாயம்

தொழில்நுட்பமும் விவசாயக் காப்புறுதியும்

தரப்பினரின் பங்காண்மையை

திடீர் அனர்த்த நிலைமைகளின்போது சேதமுற்ற விவசாய பயிர்நில மேற்பார்வைக்காக இலங்கை விமானப்படையின் ட்ரோன் தொழில்நுட்ப ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக 2024 மே மாதம் 20 ஆந் திகதி கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபைக்கும் இலங்கை விமானப் படைக்கும் இடையில் இரண்டு வருடகால புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டடது.
கைச்சாத்திடப்பட்டது.











தொழில்நுட்ப நிபுணர்களின்

இலங்கை கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்.) 1999 இன் 20 ஆம் இலக்கமுடைய சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டதோடு நுகேகொட, கங்கொடவில, சுபத்தராராம வீதியில் இலக்கம் 117 எனுமிடத்தில் அமைந்துள்ளதோடு அதன் பிரதான தொழில்முயற்சி நிலையமாகவும் செயலாற்றி வருகின்றது.

மேலும் விதிக்கப்படுகின்ற தினத்திலிருந்து அமுலுக்கு வரத்தக்கதாக 1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்திற்கு கையளிக்கப்பட்ட அனைத்துவிதமான தத்துவங்களும் பணிகளும் அதன்படி அமுலாக்கப்படவும் ஈடேற்றப்படவும் வேண்டும்.

1.2 தாய் அமைப்பாண்மை மற்றும் இறுதியான தாய் அமைப்பாண்மை

சபையின் தாய் அமைப்பாண்மை மற்றும் இறுதியான தாய் அமைப்பாண்மையாக அமைவது இலங்கை அரசாங்கமாகும்.

1.3 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

கடற்றொழிலாளர்களுக்கான ஓய்வூதிய மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டமொன்றை நெறிப்படுத்துவதே பிரதானமான செயற்பாடாக அமைகின்றது.

1.4 நிதிக்கூற்றுகள் தொடர்பிலான பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.

1.5 பணிப்பாளர் சபையினால் நிதிக்கூற்றுகள் அங்கீகரிக்கப்படுதல்

2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் நிதிக்கூற்றுகள் 2025 பெப்ருவரி 27 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு வெளியிடுவதற்கான அதிகாரம் கையளிக்கப்பட்டது.

2. தயாரித்தலுக்கான அடிப்படை

2.1 இசைவுக் கூற்று

இந்த நிதிக்கூற்றுகள் நிதி நிலைமை பற்றிய கூற்று, விரிவான வருமானக் கூற்று, நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களிலான மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப் பாய்வுக் கூற்று, மற்றும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. இந்த நிதிக் கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமங்கள் /இலங்கை கணக்கீட்டு நியமமங்கள்) பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன.

2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் கீழ்க்காணும் ஆக்கக்கூறுகளை உள்ளடக்குகின்றன.

- நிதி நிலைமை பற்றிய கூற்று 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்புத் திட்டம் பற்றிய தகவல்களை வழங்குகின்றது. (பக்கம் 01)
- விரிவான வருமானக் கூற்று மீளாய்வாண்டுக்கான கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் நிதிசார் செயலாற்றுகை பற்றிய தகவல்களை வழங்குகின்றது. (பக்கம் 02)

- உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று உரிமைப் பங்கிலான அனைத்துவிதமான மாற்றங்களையும் சித்தரிக்கின்றது. (பக்கம் 03)
- காசுப் பாய்வுக் கூற்று, காசு மற்றும் காசுக்கு இணையானவற்றை பிறப்பிப்பதில் சபை கொண்டுள்ள இயலுமையையும் மேற்படி காசுப்பாய்வின் பாவனை பற்றியும் பயனர்களுக்கு தகவல்களை வழங்குகின்றது. (பக்கம் 04)
- கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தல்களுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள். (பக்கம் 05)

2.2 அளவிடுதலுக்கான அடிப்படை

சம்பந்தப்பட்ட குறிப்புகளின்கீழ் நியாயமான பெறுமதி தொடர்பாக பொருத்தமான வெளிப்படுத்தல்கள் செய்யப்படுகின்றவேளையில் தவிர்ந்ததாக இந்த நிதிக்கூற்றுகள் வரலாற்றுக் கிரய மரபின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.3 நிதிக் கூற்றுகளை சமர்ப்பித்தல்

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்புத் திட்டம் அதன் சார்புரீதியான திரவத்தன்மையை பிரதிபலிப்புச் செய்வதற்காக விரிவானவகையில் அதன் நிதிநிலைமை பற்றிய கூற்றினை சமர்ப்பிக்கின்றது. நிதிக்கூற்றுகள்மீது தாக்கமேற்படுத்துகின்ற பணவீக்கம்சார்ந்த காரணிகளுக்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

2.4 நடைமுறைசார்ந்த மற்றும் சமர்ப்பித்தலிலான புழக்கத்திலுள்ள பணம்

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் நடைமுறைசார்ந்த மற்றும் சமர்ப்பித்தல் புழக்கத்திலுள்ள பணமான இலங்கை ரூபாய்களில் இந்த நிதிக்கூற்றுகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. இலங்கை ரூபாவில் சமர்ப்பித்துள்ள அனைத்துவிதமான நிதிசார் தகவல்களும் வேறுவிதமாக குறிப்பிடப்பட்டிருந்தாலேயொழிய அண்மித்த ரூபாவில் தரப்பட்டுள்ளது.

2.5 கணிசநிலையும் திரட்டலும்

ஒத்த உருப்படிகளில் ஒவ்வொரு கணிசமான வகுப்புகளும் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இயல்பு அல்லது பணிகளுக்கிணங்க உருப்படிகள் சமமற்றதாக அமைந்தாலேயன்றி அவையும் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2.6 அறிக்கையிடல் காலப்பகுதி

அறிக்கையிடல் காலப்பகுதியாக அமைவது 2024 சனவரி தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதியாகும். ஏற்புடையதாகுமிடத்து கணக்கீட்டுக் கொள்கைகள் அதனையடுத்து காட்டப்பட்டுள்ள குறிப்புகள் மூலமாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

2.7 முக்கியமான கணக்கீட்டுத் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமங்கள் /இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல், கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அறிக்கையிடப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகளின் கணிசநிலை பாவனை மீது தாக்கமேற்படுத்துகின்ற தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை மேற்கொள்ள முகாமைத்துவத்தை பணிக்கின்றது. பிரயோகிக்கப்பட்ட இந்த மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்கள் உண்மையான பெறுபேறுகளைவிட மாறக்கூடும்.

மதிப்பீடுகளும் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட ஊகங்களும் இடையறாதவகையில் மீளாய்வு செய்யப்படும். கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள், மதிப்பீட்டுத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள காலப்பகுதிக்குள்ளேயும் அவை தாக்கமேற்படுத்துகின்ற எதிர்கால காலப்பகுதிகளுக்குள் ஏற்பிசைவு செய்யப்படும்.

நிதிசார் கூற்றுகளில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ள அளவுகளின்பேரில் மிகவும் கணிசமான தாக்கங்களை ஏற்படுத்துகின்ற கணக்கீட்டுக்கொள்கைகளை பாவிக்கையில் மதிப்பீடுகள், ஐயப்பாடுகள் மற்றும் தீர்மானகரமான தீர்மானங்கள் பற்றி கருத்திற்கொள்ளப்படவேண்டிய துறைகள் பற்றிய தகவல்கள் நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்புகளில் அடக்கப்பட்டுள்ளன.

2.7.1 இடையறாத வழியுரிமை

நடப்புத் தொழில்முயற்சி என்றவகையில் இடையறாமல் நிலவ கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் கொண்டுள்ள இயலுமை பற்றி முகாமைத்துவம் மதிப்பீடொன்றினை செய்துள்ளது. அதனால் நடப்புத் தொழில்முயற்சி என்ற அடிப்படையில் நிதிக்கூற்றுகள் தொடர்ச்சியாக தயாரிக்கப்பட்டு வருகின்றன.

2.7.2 ஒப்பீட்டுரீதியான தகவல்கள்

இடைப்பட்ட காலஎல்லையின் ஒப்பீட்டுரீதியான தன்மையை முன்னேற்றும் பொருட்டு நடப்புக் காலஎல்லையின் நிதிக்கூற்றுகளை விளங்கிக்கொள்வதை மேம்படுத்துவதற்காக நிதிக்கூற்றுகளில் அறிக்கையிடப்பட்டுள்ள அனைத்துப் பணத்தொகைகளுக்காகவும் முந்திய கால எல்லையுடன் சம்பந்தப்பட்ட கணியரீதியான, தொடருரைசார்ந்த மற்றும் விபரங்களை உள்ளடக்கிய ஒப்பீட்டுரீதியான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுகளில் உருப்படிகளை சமர்ப்பித்தல் அல்லது வகைப்படுத்தல் திருத்தப்பட்டுள்ளவிடத்து மிகச்சிறந்த சமர்ப்பித்தலை வழங்கும்பொருட்டு நடப்பு வருடத்துடன் அமைந்தொழுகத்தக்கதாக ஒப்பீட்டுரீதியான பணத்தொகைகளும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2.7.3 நிதிசார் சொத்தொன்றின் மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயம்

கீழே காட்டப்பட்டுள்ள இரண்டு நிபந்தனைகளும் நிறைவேற்றப்படின் இலங்கை கணக்கீட்டு நியமம் 09 இன் பிரகாரம் சபை நிதிசார் சொத்துக்களை மதிப்பிறக்கம் செய்த கிரயத்தில் இனங்காண்கின்றது.

(அ) உடன்படிக்கைசெய்த காசுப் பாய்வினை சேகரிக்கும்பொருட்டு நிதிசார் சொத்துக்களை தேக்கிவைக்கின்ற நோக்கத்தைக்கொண்ட தொழில்முயற்சி மாதிரிக்குள் நிதிசார் சொத்துக்களை தேக்கிவைத்தல்

(ஆ) நிதிசார் சொத்துக்களின் உடன்படிக்கைசெய்த நியமங்கள் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினங்களில் காசுப்பாய்வினை உருவாக்குவதோடு அவை வெறுமனே ஆரம்பத் தொகை மற்றும் ஆரம்பத் தொகையின் தீர்க்கப்படாத பணத்தொகை மீதான வட்டியாக அமையும்.

அரசாங்க பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புகளில் மேற்கொண்ட முதலீடுகள், நிதிசார் சொத்துக்களின் மதிப்பிறக்கஞ்செய்த கிரய வழிமுறையின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

2.7.4. நிதிச் சாதனங்களின் நியாயமான பெறுமதி

அவதானிக்கக்கூடிய சந்தைவிலையொன்று இல்லாத, நிதிநிலைமை பற்றிய கூற்றில் அறிக்கைசெய்யப்பட்டுள்ள நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பொறுப்புகளுக்கான நியாயமான விலையை கணித முறை மாதிரிகளை பிரயோகித்தல் உள்ளிட்ட மதிப்பீடு செய்கின்ற பலதரப்பட்ட நுணுக்கமுறைகளை பாவித்தே நியாயமான விலை நிர்ணயம் செய்யப்படுகின்றது. பெறக்கூடியவிடத்து அவதானிக்கக்கூடிய சந்தை தரவுகளிலிருந்தே இந்த மாதிரிகள் வழமையாக பெறப்படுகின்றது. எவ்வாறாயினும் அவ்வாறான தரவுகள் இல்லாதவிடத்து இந்த நிதிச்சாதனங்களின் நியாயமான பெறுமதியை நிலைநாட்டும்பொருட்டு திறனாய்வு விவேகம் அவசியப்படுத்தப்படுகின்றது.

2.8 நிதிச்சொத்துக்கள் சேதமடைதல்

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் ஒவ்வோர்அறிக்கையிடல் திகதியிலும் நிதிசார் சொத்து அல்லது நிதிசார் சொத்துக்களின் குழுமம்

சேதமடைவதற்கான புறநிலையான சான்றுகள் உள்ளவாவென சபை மதிப்பீடுசெய்து வருவதோடு அத்தகைய சேதமடைதல் இடம்பெற்றிருப்பின், சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமானத்திற்கும் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்வின் நடப்புப் பெறுமானத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை பெற்றுக்கொள்ளல் மூலமாக சேதத்தின் அளவு கணிக்கப்படும்.

3. சொத்துக்களும் அவற்றை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படையும்

3.1 ஆதனம், சாதனம், பொறித்தொகுதி

3.1.1 இனங்காணலும் அளவிடலும்

சொத்துக்களை சார்ந்த எதிர்கால பொருளாதார நன்மைகள் சபைக்கு பாய்ந்துவரல் இடம்பெறுமாயின் மற்றும் சொத்தின் கிரயத்தை நம்பிக்கைமிக்கவகையில் அளவிட இயலுமாயின் மாத்திரமே ஆதனம், சாதனம், பொறித்தொகுதியை இனங்காண்பதற்கான அடிப்படை அடையாளம் காணப்படும்.

திரண்ட தேய்மானம் அல்லது சேதநட்டம் கழிக்கப்பட்ட கிரயத்திற்கே அனைத்துவிதமான ஆதனம், சாதனம், பொறித்தொகுதி தொடக்கத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளன. சொத்தொன்றின் முக்கியமான ஆக்கக்கூறுகள் தனிவேறாக இனங்காணப்பட்டு தேய்மானம் செய்யப்படுகின்றது. ஆதனம், சாதனம், பொறித்தொகுதியொன்றின் கணிசமான பகுதிகள் இந்த காலஇடைவெளிக்குள் மீள்நிறுவப்படுவதற்கான அவசியமேற்படுமிடத்து மீள்நிறுவிய பகுதி அதனைச்சார்ந்த பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் தேய்மானத்தைக் கொண்டதாக அமைப்பாண்மையால் ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய சகலவிதமான திருத்தவேலைகளும் பராமரிப்பும் உறப்பட்ட செலவினமாக வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

ரூ. 696,175.42 மொத்த வரலாற்றுக் கிரயத்தைக்கொண்ட முழுமையாகவே தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் ஆதனம், சாதனம், பொறித்தொகுதியில் அடங்குகின்றன.

3.1.2 கிரயம்

ஆதனம், சாதனம், பொறித்தொகுதிகளின் கிரயம் அதன் கொள்வனவு விலையையும் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் அதன் எதிர்பார்த்த பாவனைக்காக இயங்கும்நிலைக்கு கொண்டுவருவதற்காக நேரடியாக செலவிடப்பட்ட கிரயத்தைக் கொண்டதாகவே கணிக்கப்படுகின்றது.

சொத்துக்களின் ஈட்டல் கொள்திறனை தொடர்ச்சியாக பேணிவர அல்லது மேம்படுத்தும்பொருட்டு நிலையானதன்மைகொண்ட சொத்துக்களை கையகப்படுத்துதல் , விரிவாக்குதல் அல்லது முன்னேற்றுவதற்காக உறப்பட்ட செலவுகள் மூலதனச் செலவுகளாக கருதப்படும்.

பிரதான பரீட்சித்தல்கள் மற்றும் கிரயமாக்குதலை உள்ளிட்ட தனிவேறாக கணக்குகள் வைக்கப்பட்டுள்ள ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி உருப்படியொன்றை மீள்நிறுவுவதற்காக உறப்பட்ட செலவினம் மூலதனமயமாக்கப்படும். ஏனைய அடுத்தடுத்த கிரயங்கள் அந்த பகுதிக்குள் அடங்கிய எதிர்கால பொருளாதார நன்மைகள் சபைக்கு சபையைநோக்கிப் பாய்ந்து வருவதற்கான இயலுமை நிலவுமாயின் அத்துடன் உருப்படியின் கிரயத்தை நம்பகத்தன்மைமிக்தாக அளவிட முடியுமாயின் மாத்திரமே மூலதனமயமாக்கப்படும்.

3.1.3 தேய்மானம்

எளிய நேர்கோட்டு வழிமுறையின் அடிப்படையில் கீழே காட்டப்படுகின்ற வருடாந்த வீதத்தில் மதிப்பீடுசெய்யப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்திற்குள் அந்த அளவுகளை பதிவேடுகளிலிருந்து நீக்கும்பொருட்டு தேய்மானங்கள் விரிவான வருமானக் கூற்றில் செலவுச்சுமையாக காட்டப்படும்.

அலுவலக சாதனங்கள்	10%
தளபாடம், பொருத்திகள்	10%
நலன்புரிச் சாதனங்கள்	10%
கணனி	20%

3.2 அருவச் சொத்துக்கள்

சொத்தொன்றின் இயற்பண்பாகக்கூடிய எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்தைநோக்கி பாய்ந்துவரக்கூடிய நிலைமை இருக்குமாயின் அத்துடன் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் - 38 இன் அருவச் சொத்துக்களின் பிரகாரம் சொத்தின் கிரயத்தை நம்பகத்தன்மைமிக்கவகையில் அளவிட முடியுமாயின் அருவச் சொத்தாக இனங்காணப்படும். அதன்படி இந்த சொத்துக்கள் திரண்ட மதிப்பிறக்கம் மற்றும் ஏதேனும் திரண்ட சேத நட்டத்தை கழித்து நிதிநிலைமை பற்றிய கூற்றில் காட்டப்படும்.

சபையின் அருவச் சொத்துக்களில் பெறப்பட்ட கணனி மென்பொருட்கள் அடங்கும். கணனி மென்பொருட்கள் எளிமையான நேர்கோட்டு வழிமுறையின்பேரில் 5 வருட காலப்பகுதி பூராவிலும் மதிப்பிறக்கம் செய்யப்படும்.

3.3 சரக்குத் தொக்குகள்

சரக்குத் தொக்குகள் மிகவும் குறைந்த கிரயத்திலும் நிகர தேறிய பெறுமானத்திலுமே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நிகர தேறிய பெறுமதி என்பது பொதுவான தொழில்முயற்சிப் பணிகளின்போது மதிப்பீடுசெய்யப்பட்ட நிறைவுசெய்கின்ற மற்றும் விற்பனை செலவுகளைக் கழித்தபின்னர் மதிப்பீடுசெய்யப்பட்ட விற்பனை விலையாகும். இந்த கிரயத்தில் கையிருப்புப் பண்டங்களை கையகப்படுத்துவதற்கான மற்றும் அவை தற்போது இருக்கின்ற இடத்திற்கு அல்லது நிலைமைக்கு கொண்டுவருவதற்காக உறப்பட்ட செலவுகளும் அடங்கும்.

3.4 நிதிசார் சொத்துக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் விடயப் பரப்பிற்குள் நிதிசார் சொத்துக்கள் பொருத்தமானவகையில் இலாபம் அல்லது நட்டம் மற்றும் வருமதியானவை, பருவமுதிர்வுவரை தேக்கிவைக்கப்பட்ட முதலீடுகள், விற்பனைக்காக உள்ள நிதிசார் சொத்துக்கள் அல்லது எதிர்கால பாதுகாப்பு சாதனங்களாக பெயர்குறிக்கப்பட்ட பெறப்பட்டவை ஊடாக நியாயமான பெறுமதிக்கு நிதிச்சொத்துக்களாக வகைப்படுத்தப்படும்.

தனது நிதிசார் சொத்தில் அடிப்படை ஏற்பிசைவின் பேரில் பணிப்பாளர்சபை அவற்றின் வகைப்படுத்தலை தீர்மானிக்கும்.

அனைத்து நிதிசார் சொத்துக்களும் தொடக்கத்தில் நியாயமான பெறுமதி நேர்க்கணியமாகவும் இலாபம் அல்லது நட்டம் மூலமாக சொத்துக்கள் நியாயமான பெறுமதிக்கு ஏற்புடையதாக அமையாத சந்தர்ப்பங்களில் நேரடியாக இயற்பண்பாகிய கொடுக்கல் வாங்கல் கிரயத்திலும் ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

சபையினால் கடன் மற்றும் வருமதிகள் மற்றும் வைப்புகள் அவை தொடங்கப்படுகின்ற தினத்திலேயே முதலில் ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய அனைத்து நிதிசார் சொத்துக்களும் (இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு காரணமாக்கப்பட்ட சொத்துக்களை உள்ளிட்டதாக) தொடக்கத்தில் சாதனங்களின் உடன்படிக்கை ஏற்பாடுகளுக்கு சபை ஒரு தரப்பினராக அமைந்த வர்த்தக தினத்திலேயே ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

எதேனும் சொத்தொன்றின் காசுப்பாய்வுகள் மீதுள்ள ஒப்பந்தம்சார்ந்த உரிமைகள் நிறைவடைகையில் அல்லது நிதிசார் சொத்துக்கள் உரித்துவத்தின் அனைத்துவிதமான அபாயநேர்வுகளும் வெகுமதிகளும் கணிசமானவகையில் சாட்டுதல் செய்யப்பட்டவிடத்து கொடுக்கல் வாங்கலொன்றின் நிதிசார் சொத்துக்களின்பேரில் ஒப்பந்தம்செய்யப்பட்ட காசுப்பாய்வுகள் கிடைப்பதற்குள்ள உரிமையை அது சாட்டுதல் செய்யுமிடத்து சபை நிதிசார் சொத்துக்களை இனங்காணலை நீக்கிவிடும். சாட்டுதல் செய்யப்பட்ட சொத்தொன்று சபையினால் உருவாக்கப்பட்ட அல்லது

தேக்கிவைக்கப்பட்ட எதாவது கடப்பாடு, தனிவேறான சொத்தாகவோ அல்லது பொறுப்பாகவோ இனங்காணப்படும்.

நிதிசார் சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுவதோடு பணத்தொகையை எதிரீடுசெய்ய சபை சட்டரீதியான உரிமையைக் கொண்டுள்ளவிடத்தும் தேறிய அடிப்படையில் செலுத்தித்தீர்க்க அல்லது சொத்தினை தேறியதாக்கி சொத்துக்களை இணையாக செலுத்தித்தீர்க்க கருதப்படுமாயின் மாத்திரம் தேறிய பணத்தொகைகள் நிதிநிலைமை பற்றிய கூற்றில் சமர்ப்பிக்கப்படும்.

சபையின் நிதிசார் சொத்துக்களில் காசு, குறுங்கால முதலீடுகள் மற்றும் வர்த்தக மற்றும் பிற வருமதிகள் அடங்குகின்றன.

3.4.1 இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு நிதிசார் சொத்துக்கள்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு நிதிச்சொத்துக்களில் வர்த்தகத்திற்காக தேக்கிவைக்கப்படுகின்ற நிதிசார் சொத்துக்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு ஆரம்ப ஏற்பிசைவின்பேரில் பெயர்குறித்த நிதிசார் சொத்துக்கள் அடங்குகின்றன. நிதிசார் சொத்துக்கள் கிட்டிய காலப்பகுதி சார்ந்ததாக விற்பனை அல்லது மீள்கொள்வனவு செய்கின்ற கருமத்திற்காக கையகப்படுத்தப்பட்டிருப்பின் அவை வர்த்தகத்திற்காக தேக்கிவைக்கப்பட்டு வகைப்படுத்தப்படும்.

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் அளக்கப்படுகின்ற நிதிசார் சொத்துக்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் நியாயமான பெறுமதியில் அறிக்கை செய்யப்படும். நியாயமான பெறுமதியின் மாற்றங்கள் நிதிசார் வருமான மற்றும் விரிவான வருமானக் கூற்றில் நிதிசார் செலவினமாக இனங்காணப்படும்.

3.4.2 கடனும் வருமதிகளும்

கடனும் வருமதிகளும் முனைப்பான சந்தையில் விலைகளை சமர்ப்பித்திராத நிலையான மற்றும் திட்டவட்டமான கொடுப்பனவுகளைக்கொண்ட உருவாக்கப்படாத நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப கணக்கிடலின் பின்னர் அத்தகைய நிதிசார் சொத்துக்களின் சேதங்கள் கழிக்கப்பட்டு விளைவாற்றல்மிக்க வட்டி வீதத்தை பாவித்து அடுத்தடுத்ததாக மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயத்திற்கிணங்க கணிப்பிடப்படும். மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயமானது கையகப்படுத்துகையில் ஏதேனும் கழிவு அல்லது காப்பீட்டுக் கட்டணம் மற்றும் விளைவாற்றல்மிக்க வட்டி முறையியலின் உள்ளடங்கிய பகுதியான கட்டணங்களையும் கிரயத்தையும் கவனத்திற்கொண்டே கணிக்கப்படுகின்றது. விளைவாற்றல்மிக்க வட்டி முறையியலானது மதிப்பிறக்கம் செய்யப்பட்ட விரிவான வருமானக் கூற்றில் நிதிசார் வருமானத்தில் உள்ளடக்கப்படும். சேதங்கள் காரணமாக ஏற்படுகின்ற நட்டங்கள் நிதிசார் கிரயத்தில் விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

கடனும் வருமதிகளும் வர்த்தக வருமதிகள், ஊழியர் கடன், வைப்பு முற்பணம், ஏனைய வருமதிகள் அத்துடன் காசு மற்றும் காசுக்கு இணையானவற்றையே உள்ளடக்குகின்றது.

3.4.3. நிதிச் சொத்துக்களின் மதிப்பிறக்கம்செய்யப்பட்ட கிரயம்

SLFRS 9 இன் படி, பின்வரும் இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட்டால், சபை மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயத்தில் நிதிச் சொத்தாக ஏற்பிசைவு செய்யும்.

அ) நிதிச் சொத்து, ஒப்பந்தம் செய்யப்பட்ட காசுப்பாய்வுகளைச் சேகரிப்பதற்காக நிதிச் சொத்துக்களை வைத்திருப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு வணிக மாதிரிக்குள் பேணி வரப்படுவதோடு

ஆ) நிதிச் சொத்தின் ஒப்பந்த விதிமுறைகளின்படி குறித்துரைத்த தேதிகளில் காசுப்பாய்வுகளை உருவாக்கும். அவை வெறுமனே மொத்தப் பணத்தொகையையும் வட்டியையும் செலுத்துவதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்ட காசுப்பாய்வுகளாகும்.

அரச பிணையங்களிலும் நிலையான வைப்புகளிலும் செய்யப்பட்டுள்ள முதலீடுகள் நிதிச் சொத்துக்களின் மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயத் திட்டத்தின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

3.4.4 விற்பனைக்காக உள்ள நிதிசார் முதலீடுகள்

விற்பனைக்காக உள்ள நிதிசார் சொத்துக்கள் எனப்படுவது விற்பனைக்காக உள்ளதென பெயர் குறிக்கப்பட்டுள்ள அல்லது மேலே குறிப்பிட்ட ஏதேனுமொரு நிதிசார் சொத்துக்கள் பிரிவுக்கு வகைப்படுத்தப்படாத உருவாக்கப்பட்டிராத நிதிசார் சொத்துக்களாகும். அடிப்படை ஏற்பிசைவுகளுக்குப் பின்னர் அவை நியாயமான பெறுமதிக்கு கணிப்பிடப்படுவதோடு சேத நட்டங்களைத் தவிர்ந்த அதன் வித்தியாசங்கள் ஏனைய விரிவான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுவதோடு நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களில் ஒதுக்கப்பட்டுள்ள நியாயமான பெறுமதியில் சமர்ப்பிக்கப்படுகின்றன. விற்பனைக்காக உள்ள கடன் பிணையங்களின் பேரிலான வட்டி வருமானம் விளைவாற்றல்மிக்க வட்டி வீதத்தை பாவித்து கணிக்கப்படுவதோடு இலாபத்தில் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். முதலீடொன்றின் ஏற்பிசைவுசெய்தலை நீக்கியவிடத்து நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களில் சேர்ந்த இலாபம் அல்லது நட்டம் இலாபம் அல்லது நட்டங்களில் மீள்வகைப்படுத்தப்படும்

அடிப்படை ஏற்பிசைவின்கீழ் விற்பனைக்காக உள்ள நிதிசார் முதலீடாக சபை ஏதேனும் நிதிசார் சொத்துக்களை பெயர்குறிக்கவில்லை.

3.4.5 நிதிசார் சொத்தொன்றின் சேதமதிப்பீடு

ஒவ்வோர் அறிக்கையிடல் திகதியிலும் நிதிசார் சொத்துக்கள் அல்லது நிதிசார் சொத்துக்கள் குழுமமொன்று சேதமடைவதற்காக வெளிப்படையான சான்றுகள் உள்ளனவாவென சபை மதிப்பீடு செய்வதோடு அத்தகைய சேதம் ஏற்பட்டிருப்பின் சொத்தொன்றின் கொண்டுசெல்லல் பெறுமானம் மற்றும் மதிப்பீடுசெய்யப்பட்ட பெறுமானத்திற்கிடையிலான வித்தியாசத்தைப் பெற்றுக்கொள்ளல் மூலமாக சேதத்தின் அளவு கணிக்கப்படும்.

4. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

நிதி நிலைமை பற்றிய கூற்றின்பேரில் நடைமுறைப் பொறுப்புக்களென வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்களாக அமைவது கேள்வியின் பேரில் அல்லது அறிக்கையிடல் திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தப்படவேண்டியதாக உள்ளவையாகும். நடைமுறையல்லாச் சொத்துக்களாக அமைவது அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் செலுத்தவேண்டிய மீதியாகும்.

இந்த நிதியறிக்கைகளைத் தயாரிக்கையில் அறியப்பட்ட எல்லா பொறுப்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டன. கடந்தகால சம்பவமொன்றின் பெறுபேறாக சபைக்கு சட்டமுறையான அல்லது உடன்பாடுசார்ந்த கடப்பாடு உள்ளவிடத்தும் அந்த கடப்பாடுகளை தீர்ப்பதற்கான பொருளாதார நன்மைகள் பாய்ந்துவரக்கூடிய இயலுமை நிலவுகின்ற மற்றும் அதற்கான நம்பிக்கையை வைக்கக்கூடிய மதிப்பீடொன்றை தயாரிப்பதற்கான இயலுமையை அவசியப்படுத்துகின்றவிடத்தும் நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஏற்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்படும்.

4.1 ஓய்வூதிய நன்மைகள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 19 "இளைப்பாற்று நன்மைக் கிரயம்" உடன் அமைந்தொழுகத்தக்கவகையில் அனைத்து நிரந்தர ஊழியர்களுக்காகவும் சேவையின் முதலாவது வருடம் நிறைவடைந்ததிலிருந்து இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 1983 இன் 12 ஆம் இலக்கமுடைய பணிக்கொடை செலுத்துதல் சட்டத்தின்படி ஊழியரொருவர் தொடர்பிலான பொறுப்பு தொடர்ச்சியான ஐந்து வருட சேவைக்காலம் நிறைவடைந்ததிலிருந்து மாத்திரமே தொடங்குகின்றது. பொறுப்புகளுக்கான வெளிவாரி நிதியங்கள் வழங்கப்படுவதில்லை.

4.2 மூலதனக் கடப்பாடுகளும் எதிர்பாராத பொறுப்புகளும்

எதிர்பாராத பொறுப்புகளாக பொருளாதார நன்மைகள் சாட்டுதல் செய்யப்படுவதற்கான வாய்ப்புகளற்ற அல்லது நம்பகத்தன்மைமிக்கவகையில் அளவிட முடியாத சந்தர்ப்பங்களில் நிச்சயமற்ற எதிர்கால சம்பவங்கள் அல்லது நிகழ்கால கடப்பாடுகள் மூலமாக மாத்திரம் வழியுரிமை உறுதிப்படுத்தப்படுகின்ற நடப்புக் கடப்பாடுகள் ஆகும்.

சபையின் மூலதனக் கடப்பாடுகள் மற்றும் எதிர்பாராத பொறுப்புக்கள் நிதிக்கூற்றுகளில் ஏற்புடைய குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிதியறிக்கைகளைத் தயாரிக்கையில் அறியப்பட்ட எல்லா பொறுப்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டன. கடந்தகால சம்பவமொன்றின் பெறுபேறாக சபைக்கு சட்டமுறையான அல்லது உடன்பாடுசார்ந்த கடப்பாடு உள்ளவிடத்தும் அந்த கடப்பாடுகளை தீர்ப்பதற்கான பொருளாதார நன்மைகள் பாய்ந்துவரக்கூடிய இயலுமை நிலவுகின்ற மற்றும் அதற்கான நம்பிக்கையை வைக்கக்கூடிய மதிப்பீடொன்றை தயாரிப்பதற்கான இயலுமையை அவசியப்படுத்துகின்றவிடத்தும் நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஏற்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்படும்.

4.3 கடற்றொழிலாளர் ஓய்வூதிய நிதியம்

கடற்றொழிலாளர் ஓய்வூதிய நிதியத்தின் பொறுப்புகள் 2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆயுட்கணிப்பு மதிப்பீட்டின்பேரில் நிகழ்கால பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுகளில் கணக்குப் பதியப்பட்டுள்ளன.

இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 4 இன் 15 வது பந்தியில் கூறப்பட்டுள்ளவகையில் காப்புறுதி உடன்படிக்கைகளில், காப்புறுதிக் கம்பெனி ஒவ்வோர் அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியிலும் தனது காப்புறுதி உடன்படிக்கையின்கீழ் எதிர்கால காசுப் பாய்வுகளின் நிகழ்கால மதிப்பீடுகளை பாவித்து தனது அடையாளம்கண்ட காப்புறுதிப் பொறுப்புக்கள் போதுமானவையா என்பதை மதிப்பீடுசெய்ய வேண்டும். எதிர்கால காசுப் பாய்வுகளை கவனத்திற் கொண்டவிடத்து தனது காப்புறுதிப் பொறுப்புக்களின் கொண்டுசெல்லல் பெறுமதி (சார்ந்த பிற்போடப்பட்ட கையகப்படுத்தலுக்கான கிரயம் மற்றும் சார்ந்த அருவச் சொத்துக்களை கழித்து) போதுமானதல்லவென அந்த மதிப்பட்டில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பின் ஒட்டுமொத்த பற்றாக்குறையை இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காண வேண்டும்.

சந்தை வட்டிவீதங்களின் வித்தியாசங்களை கருத்தில்கொண்டு ஓய்வூதியப் பொறுப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு இலாப - நட்டக் கூற்றில் வேறு விரிவான வருமானத்தில் அத்துடன் நிதிசார் கூற்றுகளில் பிற விரிவான வருமானத்தின் பற்றாக்குறை இனங்காணப்பட்டுள்ளது.

இதனால் பிற விரிவான வருமானத்தின்கீழ் கடற்றொழிலாளர் ஓய்வூதிய பொறுப்பின் மேற்சொன்ன அதிகரிப்பினை இனங்காணுதல் மேற்படி தரநியமத்தின் அவசியப்பாடுகளுடன் அமைந்தொழுகுகின்றன.

5. விரிவான வருமானக் கூற்று

5.1 வருமானம்

1. சபையின் வருமானம் காப்புறுதித் தவணைப்பணம், திறைசேரி உண்டியல்களின் வட்டி வருமானம் மற்றும் நிலையான வைப்புகள், ஊழியர்கடன் மற்றும் பிற நானாவித வருமானத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

2. அனைத்தது வருமானமும் அட்டுறு அடிப்படையிலேயே ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

3. காப்புறுதி தவணைப்பணம் கடற்றொழிலாளர்களுக்கான மானியம் என்றவகையிலேயே அரசாங்கத்திடமிருந்து கிடைத்துள்ளது.

4. மூலதனச் செலவுகளுக்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்த கொடை படிப்படியான அடிப்படையில் வருமானமான ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

5.2 வருமானத்தை ஏற்பிசைவு செய்தல்

1) ஓய்வூதிய தவணைப்பண வருமானம் காப்புறுதி செய்யப்பட்ட காலப்பகுதிக்காக ஏற்பிசைவு செய்யப்படும்.

2) மேற்படி வருமானம் அட்டுறு அடிப்படையிலானதாக அமைவதோடு சார்ந்த செலவுகளுடன் சீராக்கப்படுகின்றது.

3) வட்டி வருமானம் கால அடிப்படையில் அட்டுறுநிலையடையும்.

5.3 அரசாங்கக் கொடைகளுக்கான கணக்கீடு

உறப்பட்ட செலவுகளுக்காக சபைக்குச் செலுத்தப்படுகின்ற கொடைகள் இந்த செலவுகள் இனங்காணப்பட்ட காலப்பகுதிக்குள் வருமானமாக விரிவான வருமானக்கூற்றில் இனங்காணப்படும். சொத்தொன்றின் கிரயத்திற்காக சபைக்குச் செலுத்தப்படுகின்ற கொடைகளைச் சார்ந்ததாக சொத்தொன்றின் பயனுள்ள ஆயுட்காலம் பூராவிலும் படிப்படியான அடிப்படையில் விரிவான வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

5.4 செலவுகள்

உறப்பட்ட செலவினம் மற்றும் குறித்துரைத்த செலவு உருப்படிக்கு இடையிலான நேரடியான தொடர்பின் அடிப்படையில் விரிவான வருமானக் கூற்றில் செலவுகள் இனங்காணப்படும். சபையை பேணிவருதல் மற்றும் மூலதன சொத்துக்களை வினைத்திறன்கொண்ட நிலைமையில் பேணிவருவதற்காக உறப்பட்ட அனைத்துச் செலவுகளும் ஆண்டுக்கான மிகைநிலையை தயாரிக்கையில் வருமானத்தில் வரவுவைக்கப்பட்டுள்ளது.

401/4 இலக்கமும் 2008.10.15 திகதியும் கொண்ட பணிப்பாளர்சபை பத்திரம் மூலமாக கீழே காட்டப்பட்ட வீதத்தின் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட சபையின் நேரில் செலவினங்கள் பின்வருமாறு அமையும்.

செலவினம்	**வீதம்**
வாடகையும் தொலைபேசியும்	5%
தபால் கட்டணமும் நீர்க்கட்டணமும்	5%
மின்சாரம்	5%
தலைமை அலுவலக உபகரணங்கள்	5%
கட்டிடப் பராமரிப்பு	5%
வாகனப் பராமரிப்பு	3%
எரிபொருள்	2%
காகிதாதிகள்	2%
சீருடைகள்	2%
பாதுகாப்பு	5%
கணனி செலவுகள்	5%

6. காசுப் பாய்வுக்கூற்று

இலங்கை கணக்கீட்டுத் தரநியமம் 07 பிரகாரம் திட்டத்தின் காசுப்பாய்வுக் கூற்று "நேரில் முறைமையை" பயன்படுத்தியே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

7. அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் இடம்பெறுகின்றசம்பவங்களின் பொதுமானதன்மை கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளதோடு அவசியமான இடங்களில் கணக்குகளில் பொருத்தமான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8. சார்ந்த தரப்பினர்களின் கொடுக்கல் வாங்கல்கள்

கமத்தொழில் காப்புறுதித் திட்டமும் கமக்காரர் ஓய்வூதியத் திட்டமும் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் சார்ந்த தரப்பினர்களாக கருதப்படுகின்றன. இந்த சார்ந்த தரப்பினருடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் நியாயமான பெறுமதியின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படுகின்றன.

கடற்றொ லாளர் ஒய் ய, ச கப் பா காப் நலன் ரித் ட்டம்

நி க் ற் க க்கான ப் கள்

ப் -01

2024.12.31 ஆதனம், சாதனம் மற் ம் பொ த்தொ

சொத்	2024.01.01 இல் ரயம்/ம ப்	கை ர்த்தல்	ரயம் சேர்த்தவை	2024.12.31 இல்	2024.01.01 இல் ரண்ட தேய்மானம்	கை ர்த்தல்	ஆண் க்கான தேய்மானம்	மொத்த தேய்மானம்	2024.12.31 இல் க த்தெ ய பெ ம
அ வலக சாதனங்கள்	528,649	-	-	528,649	477,513	-	14,792	492,305	36,344
நலன் ரிச் சாதனங்கள்	1,325	-	-	1,325	1,325	-	-	1,325	-
தளபாடம், பொ த் கள்	77,677	-	-	77,677	74,114	-	2,850	76,964	713
கணினிகள்	264,945	-	-	264,945	264,945	-	-	264,945	-
	872,595	**-**	**-**	**872,595**	**817,897**	**-**	**17,642**	**835,539**	**37,056**

2024 செம்பர் 31 இல் . 696,175.42 பெ ம கொண்ட இன்ன ம் பா க்கப்பட் வ ன்ற வரலாற் க் ரயம்கொண்ட மையாக தேய்மானம் க க்கப்பட்ட சொத் க்களை ஆதனம், சாதனம், பொ த்தொ கள் என்ப உள்ளடக் ன்ற .

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கடற்றொழிலாளர் ஒய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

	31.12.2024	31.12.2023
குறிப்பு -02 - கையிருப்புகள்	ரூ.	ரூ.
அச்சிடல் பொருட்கள்	116,255	87,430
	116,255	**87,430**
குறிப்பு 03 - வருமதிகள்		
செலுத்தப்பட்டிராத ஓய்வூதியம்	83,172	
இறப்புப் பணிக்கொடை முற்பணம்	5,000	5,000
	88,172	**5,000**
குறிப்பு -04		
இலதாக்கிய கிரயத்தில் நிதிச்சாதனங்கள்		
திறைசேரி உண்டியல் - இலங்கை வங்கி	29,076,885	110,070,126
நிலையான வைப்பு - மக்கள் வங்கி	299,958,861	284,358,861
	329,035,746	**394,428,987**
குறிப்பு -05 - காசு மற்றும் காசுக்கு இணையானவை		
கணக்கிலக்கம் 164790 இலங்கை வங்கி, யூனியன் பிளேஸ்	190,525	332,905
கணக்கிலக்கம் 164795 இலங்கை வங்கி, யூனியன் பிளேஸ்	711,056	948,429
கணக்கிலக்கம் 91071672 இலங்கை வங்கி, நுகேகொட	24,000	25,000
கணக்கிலக்கம் 335100280112349 மக்கள் வங்கி, நுகேகொட	47,945	
சேகரித்தல் கணக்குகள்	114,438	102,996
	1,087,964	**1,409,330**
குறிப்பு - 06 - கடற்றொழிலாளர் ஒய்வூதிய திரண்ட நிதியம்		
முன்கொண்டுவந்த மீதி	(4,934,955,153)	(4,509,752,321)
முந்திய ஆண்டுக்கான சீராக்கம்	-	(98,000)
	(4,934,955,153)	(4,509,850,321)
ஆண்டில் சேர்த்தவை		
ஆண்டுக்கான மொத்த மிகைநிலை/(பற்றாக்குறை)	(482,727,810)	(425,104,832)
	(5,417,682,963)	**(4,934,955,153)**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

	31.12.2024 ரூ.	31.12.2023 ரூ.
குறிப்பு -7 - இறப்புப் பணிக்கொடை நிதியம்		
முன்கொண்டுவந்த மீதி	1,663,720	-
கூட்டுக		
ஆண்டுக்கான பங்களிப்பு	1,743,600	1,746,720
கழிக்க		
இறப்புப் பணிக்கொடை கொடுப்பனவு	(209,000)	(83,000)
	(209,000)	(83,000)
	1,534,600	**1,663,720**
	3,198,320	**1,663,720**
குறிப்பு -08 - சென்மதிகள்		
ஓய்வூதியக் கொடுப்பனவு	5,560,510	5,537,581
கமத்தொழில் காப்புறுதித் திட்டம்	74,051,579	67,786,327
மீளளிக்கத்தக்க பங்களிப்பு	104,594	82,940
இறப்புப் பணிக்கொடை	169,000	167,000
உதவுதொகை மீதான வட்டியின் மீளளிப்பு	124,704	150,451
கணினிப் பராமரிப்பு	11,450	-
கமக்காரர் ஓய்வூதிய நிதியம்	-	86,866,223
	80,021,837	**160,590,522**
குறிப்பு - 09 - அட்டுறு செலவினங்கள்		
அச்சிடல்	545,812	522,699
கணக்காய்வுக் கட்டணங்கள்	535,725	327,000
தபால் செலவுகள்	346,690	-
	1,428,227	**849,699**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

	31.12.2024 ரூ.	31.12.2023 ரூ.
குறிப்பு -10 - நிர்வாகச் செலவுகள்		
சம்பளமும் ஊதியமும்	845,412	2,283,133
ஊ.சே.நி. பங்களிப்பு	116,637	302,868
ஊ.ந.நி. பங்களிப்பு	23,327	68,543
அதிகால	3,242	-
விசேட படிகள்	483,879	557,736
பணிக்கொடை	92,408	273,031
எரிபொருள்	498,715	460,976
காகிதாதிகள்	345,370	314,066
அச்சிடல்	333,265	267,539
பணியாளர் சீருடை	31,374	-
வாடகை	1,429,836	1,237,854
தொலைபேசி	895,270	370,852
தபால்	801,008	694,102
நீர்க் கட்டணச் சிட்டை	57,801	48,591
பாதுகாப்பு	174,023	184,530
மின்சாரம்	373,776	313,436
மோட்டார் வாகனப் பராமரிப்பு	813,217	792,711
கட்டிடப் பராமரிப்பு	171,604	491,215
பராமரிப்பு - அலுவலக உபகரணங்கள்	173,243	96,073
அலுவலக சாதனப் பராமரிப்பு	247,426	331,109
தேய்மானம்	17,642	17,642
கணக்காய்வுக் கட்டணங்கள்	208,725	324,000
	8,137,200	**9,430,008**
குறிப்பு - 11 - நிதி அறவீடுகள்		
வங்கி அறவீடுகள்	13,800	6,236
	13,800	**6,236**

தணிக்கையாளர் ஜெனரலின் அறிக்கைகள்

12 அத்தியாயம்

வேளாண் காப்பீட்டுத் திட்டம்

எனது இலக்கம்: ARI/C/AAIB/1/24/28/FA 2025 ஜூன் 09

தலைவர்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையினதும் அதன் கமக்காரர் ஒய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் மற்றும் கடற்றொழிலாளர் ஒய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டதினதும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் மற்றும் பிற சட்டமுறையான, ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மேற்படி அறிக்கை இத்துடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்.

ஜீ.எச்.டீ. தர்மபால

பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள் :- 1. செயலாளர் - நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

2. செயலாளர், கமத்தொழில், கால்நடைவளம், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

எனது இலக்கம்: ARI/C/AAIB/1/24/28/FA 2025 ஜூன் 09

தலைவர்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையினதும் அதன் கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டதினதும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் மற்றும் பிற சட்டமுறையான, ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுகள்

1.1 அபிப்பிராயம்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் ("சபை") மற்றும் அதன் கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டங்களினதும் ("குழுமம்") 2024 திசெம்பர் 31 இல் நிதிநிலைமை பற்றிய கூற்று, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான விபரமான வருமானக் கூற்று, உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று, அன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்வுக் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள், பொழிப்பு தயாரிக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சபையினதும் குழுமத்தினதும் நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1999 இன் 20 ஆம் இலக்கமுடைய கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்கமுடைய நிதிச்சட்டத்தினதும் ஏற்பாடுகளின்கீழ் எனது பணிப்புரையின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) உறுப்பரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையில் முனைப்பழியுளள் அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் (1.2.1) இல் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக சபையின் நிதிசார் கூற்றுகள் ஊடாக 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிநிலைமை மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிசார் செயற்பாடு மற்றும் காசுப்பாய்வு இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமைகளை பிரதிபலிக்கின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

குழுமம்

மறுப்பு அபிப்பிராயம்

குழுமத்தின் நிதிக்கூற்றுகள் பற்றி நான் அபிப்பிராயமொன்றை வெளியிடப்போவதில்லை. குழுமத்தின் அபிப்பிராயம் மறுக்கப்படுவதற்கான அடிப்படை பகுதியில் (1.2) ஆராயப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுகள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்க போதியளவிலான மற்றும் உசிதமான சான்றுகயைளப் பெற்றுக்கொள்ள என்னால் இயலாமல் போயிற்று.

1.2 குழுமத்தின் நிதிக்கூற்றுகள் பற்றிய மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

2024 திசெம்பர் 31 அந் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட சபையின் நிதிக்கூற்றுகள் பற்றி 1.2.1 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்டு முனைப்பழியுள்ள அபிப்பிராயமொன்றை வெளியிடுகிறேன்.

குழுமத்தில் உள்ள கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்

திட்டத்திற்காக 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகள் பற்றி 1.2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்டு என்னால் மறுப்பு அபிப்பிராயமொன்று வெளியிடப்பட்டிருந்தது.

குழுமத்தில் உள்ள கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்திற்காக 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகள் பற்றி 1.2.3 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்டு என்னால் மறுப்ப அபிப்பிராயமொன்று வெளியிடப்பட்டிருந்தது.

1.2.1 சபையின் நிதிக்கூற்றுகள் பற்றிய முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) மகியங்கனை, எம்பிலிபிட்டிய மற்றும் அநுராதபுரம் ஆகிய நகரங்களிலுள்ள 3 உத்தியோகபூர்வ இல்லங்கள் அமைந்துள்ள 76.6 பரச்சஸ் காணி சபைக்குச் சொந்தமானதாக இருந்தபோதிலும் மேற்படி காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2018 தொடக்கம் 2022 ஆம் ஆண்டுவரை பயிர்ச்சேத காப்புறுதி இழப்பீட்டினை செலுத்துவதற்காக பொது திறைசேரியிலிருந்து வருமதியானதாக சபையின் இறுதிக்கணக்குகளில் காட்டப்பட்டிருந்த ரூ. 4,249,619,152 வருமதியான வருமானம் 2023 ஆம் ஆண்டில் மொத்தப் பணத்தொகையும் திரண்ட நிதியத்தில் பற்றுவைத்து பதிவழிக்கப்பட்டிருந்தது. 1999 இன் 20 ஆம் இலக்கமுடைய கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை சட்டத்தின்படி தொழிற்பாட்டு வருமானத்தின் நூற்றுக்கு 5 வீதம் கமநலக்காப்புறுதி நிதியத்திற்கு மாற்றப்படுவதால் மேற்படி பணத்தொகையுடன் தொடர்புடையதாக அவ்விதமாக தொழிற்பாட்டு வருமானத்திலிருந்து மாற்றப்பட்ட ரூ. 212,480,957 பணத்தொகை கமநலக்காப்புறுதி நிதியத்திலிருந்து அகற்றப்பட்டு திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) காசுப் பாய்வுக் கூற்றினை தயாரிக்கையில் இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் 4 அம் பந்திக்கிணங்க செயலாற்றியிராததால் சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் கொடுக்கல் வாங்கல் மீதிகளுக்கிடையிலான வித்தியாசம் ரூ. 58,650,439 ஐ வருமதியான கணக்கு மீதிகளுக்குள் சீராக்கியமை மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டங்களுக்காக பேணிவரப்படுகின்ற நடைமுறைக் கணக்குகளில் உண்மையான காசு உட்பாய்ச்சல் ரூ. 1,724,342,412 உம் உண்மையான காசு வெளிப்பாய்ச்சல் ரூ.1,475,253,745 உம் தொழிற்பாட்டு காசுப் பாய்வு ரூ. 190,696,424 ஆல் குறைவாக கணிக்கப்பட்டிருந்தது. அத்துடன் காசாக செலுத்தப்பட்டிருந்த ரூ. 2,137,293 ஆக அமைந்த ஊழியர் மருத்துவக் காப்புறுதிக் கட்டணம் காசுப் பாய்வுக் கூற்றில் முன்வைக்கப்படாமை காரணமாக அப்பெறுமதியால் தொழிற்பாட்டுக் காசுப்பாய்வு மிகையாக கணிக்கப்பட்டிருந்தது. மேலும் ஊழியர் மருத்துவக் காப்புறுதி நிதியக் கணக்கு மீதிகளின் வித்தியாசம் ரூ. 8,960,763 ஆல் அதிகரித்தமை முதலீட்டுக் காசுப்பாய்வில் அறிக்கை செய்யப்பட்டமையால் முதலீட்டுக் காசுப்பாய்வு அந்த அளவினால் மிகையாகக் கணிக்கப்பட்டிருந்ததோடு முதலீட்டிலிருந்து பெற்ற வட்டியான ரூ. 5,703,848 முதலீட்டுக் காசுப் பாய்வில் முன்வைக்கப்படாமை காரணமாக அந்த அளவினால் முதலீட்டுக் காசுப்பாய்வு குறைவாக கணிக்கப்பட்டிருந்தது.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.க.நி.) அமைவாக நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்த கணக்கீட்டு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பிலான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் உசிதமானதுமென்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2.2 கமக்காரர் ஒய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்

அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

(அ) செயற்றிட்டத்தின் மொத்த சொத்துக்கள் ரூ. 3,062,149,691 மற்றும் மொத்த பொறுப்புகள் ரூ. 94,351,635,618 ஆக அமைந்தமையால் சொத்துக்களை விஞ்சிய பொறுப்பு ரூ. 91,289,485,927 ஆகவும், மொத்த நடைமுறைச் சொத்துக்கள் ரூ. 1,125,049,320 மற்றும் மொத்த நடைமுறைப் பொறுப்புகள் ரூ. 3,222,013,500 அகவும் அமைந்தமையால் நடைமுறை சொத்துக்களை விஞ்சிய நடைமுறைப்பொறுப்பு ரூ. 2,096,964,180 ஆகவும் அமைவதோடு திறைசேரியின் பங்களிப்பு இன்றி திட்டத்தை முன்னெடுத்துச்செல்ல முடியாத நிலைமை நிலவுவதால் செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமை சிக்கலானதாகும்.

(ஆ) இலங்கை கணக்காய்வு நியமம் இலக்கம் 01 இன் 88 வது பந்திக்கு முரணாக மீளாய்வாண்டில் கமக்காரர்களிடமிருந்து கிடைத்த தவணைப்பண வருமானம், கமக்காரர் ஒய்வூதியம் பெறுனர்களின் பங்களிப்பு வருமானம் மற்றும் முதலீட்டு வட்டியை உள்ளிட்டதாக மீளாய்வாண்டில் கிடைத்த ரூ. 143,566,887 பணத்தொகையை காலப்பகுதிக்கான வருமானமாக கணக்குப்பதியாமல் திரண்ட நிதியத்திற்கு சீராக்கி இருந்தமையால் அந்த அளவினால் இலாபம் குறைவடைந்திருந்தது.

(இ) காசுப் பாய்வுக் கூற்றினை தயாரிக்கையில் இலங்கை கணக்கீட்டு நியமம் 7 இன் 4 வது பந்தியின் பிரகாரம் உதவுதொகை செலுத்துனர்களிடமிருந்து கிடைத்த ரூ. 135,443,031 தவணைப்பண வருமானத்தை தொழிற்பாட்டு வருமானத்திற்குள் இனங்காணாமையால் தொழிற்பாட்டு செயற்பாடு ஊடாக பிறப்பிக்கப்பட்ட காசுப்பாய்வு அதே அளவினால் குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததோடு ரூ. 8,123,855 முதலீட்டு வரமானத்திற்குள் இனங்காணப்படாமையால் முதலீட்டுச் செயற்பாடுகள் ஊடாக பிறப்பிக்கப்பட்ட காசுப்பாய்வு அந்த அளவினால் குறைமதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) வருடத்தின் தொடக்க ஓய்வூதியப் பொறுப்பில் ஆண்டுக்குள் செலுத்தப்பட்ட ஓய்வூதியத் தொகையைக் கழித்த பின்னர் கிடைக்கின்ற இறுதி மீதிக்கு நூற்றுக்கு 11 சதவீதத்தை சேர்த்து ஓய்வூதிய பொறுப்பினைக் கணிப்பிடுகின்ற முறையியலை செயற்றிட்டம் தொடர்ச்சியாக கடைப்பிடித்து வந்தது. அதன்படி 2024 சனவரி 01 ஆந் திகதயில் தொடக்கமீதியாக அமைந்த ரூ. 86,898,445,376 இல் கமக்காரர் ஓய்வூதிய செலுத்துலாக அமைந்த ரூ. 4,845,125,008 ஐ கழித்து அந்த மீதியுடன் நூற்றுக்கு 11 சதவீதமாக அமைந்த 9,025,865,240 ஐ சேர்த்து இறுதிமீதியான ரூ. 91,079,185,608 ஓய்வூதியப் பொறுப்பாக இனங்காணப்பட்டிருந்தது. இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 59 வது பந்தியின் பிரகாரம் ஆயுட்கணிப்பு மதிப்பிட்டினை செய்யாமல் மேலே குறிப்பிடப்பட்ட வழிமுறையைக் கடைப்பிடித்து கணிக்கப்பட்ட ஓய்வூதியப் பொறுப்பின் திட்பநுட்பத்தன்மை பற்றி திருப்தியடைய முடியாது.

(உ)கமக்காரர்களின் உயிர்த்தரவுத் தகவல்கள் இற்றைப்படுத்தப்படாமை காரணமாக இறந்த மற்றும் வேறு காரணங்களின்பேரில் உரிமைபெற முன்வந்திராத கமக்காரர்களின் ஓய்வூதியம் தொடர்ச்சியாக அஞ்சல் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டில் கமக்காரர்கள் பெற்றுக்கொள்ளாமையால் அஞ்சல் திணைக்களத்தினால் திருப்பி அனுப்பப்பட்ட ஓய்வூதியம் ரூ. 469,255,211 ஆக அமைந்ததோடு மீளாய்வாண்டின் இறுதியில் மேற்படி திணைக்களத்திடமிருந்து கிடைக்கவேண்டிய மீதி ரூ. 99,247,815 ஆக அமைந்தது. மேற்படி மீதிகள் அமைந்துள்ள விதம் மற்றும் ஒவ்வொரு கமக்காரர் பற்றிய விபரங்களை உள்ளடக்கிய தகவல் முறைமையொன்று இல்லாதிருந்தமையால் மீதிகளின் திட்பநுட்பத்தன்மையை உறுதிசெய்துகொள்ள இயலாமல் போயிற்று.

(ஊ) 2024 நவெம்பர் மற்றும் திசெம்பர் மாதங்கள் தொடர்பான கமக்காரர் ஓய்வூதிய உதவுதொகை செலுத்துனர்களின் வருமானம் முறையே ரூ. 8,970,200 மற்றும் ரூ.8,969,200 ஆக அமைந்ததோடு அந்த பெறுமதிகள் கமக்காரர் ஓய்வூதியம் பெறுனர்களின்

பங்களிப்பு வருமான கணக்கிற்கு வரவுவைக்கப்படுவதற்குப் பதிலாக சென்மதியான ஒய்வூதிய கணக்கிற்கு வரவுவைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் வருமானம் ரூ. 17,939,400 ஆல் குறைமதிப்பீட்டுக்கு இலக்காகி உள்ளதோடு நடைமுறைப்பொறுப்பு அதே அளவினால் மிகைமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(எ) செயற்றிட்டத்தின் குழும ஆயுட்காப்புறுதி காப்பீடு மூலமாக வயது 18 - 54 இற்கு இடைப்பட்ட உதவுதொகை செலுத்துனரொருவர் ஒய்வூதியம் பெறமுன்னர் இறத்தல், பூரணமான மற்றும் பகுதியளவிலான ஏலாமை நிலையுறல் என்பவற்றுக்காக செலுத்தநேரிடுகின்ற பணிக்கொடையை செலுத்துவதற்காக 2024 ஆம் ஆண்டில் 266,297 உதவுதொகை செலுத்துனர்களுக்காக ரூ. 15,977,820 பெறுமானம் ஒதுக்கப்பட்டிருந்ததோடு அதில் 256,616 பேர் இயங்காத உதவுதொகை செலுத்துனர்களாக அமைந்ததோடு அவர்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் உண்மையாகவே இயங்காதவர்களின் எண்ணிக்கையை உறுதிப்படுத்திக்கொள்ளாமல் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

1.2.3 கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்

அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படை

(அ) வருடத்தின் தொடக்க ஓய்வூதியப் பொறுப்பிலிருந்து வருடத்திற்குள் செலுத்தப்பட்ட ஓய்வூதிய பணத்தொகையை கழித்த பின்னர் கிடைகின்ற மீதிக்கு நூற்றுக்கு 11 சதவீதத்தை சேர்த்து ஓய்வூதியப் பொறுப்பினை கணிப்பிடுகின்ற முறையிலொன்று திட்டத்தினால் தொடர்ச்சியாக கடைப்பிடிக்கப்பட்டிருந்தது. அதன்படி 2024 சனவரி 01 ஆந் திகதியில் தொடக்கமீதியான ரூ. 5,532,3409, 026 இல் கடற்றொழிலாளர் ஓய்வூதியமாக செலுத்தப்பட்ட ரூ. 88,348,718 கழிக்கப்பட்டு மேற்படி மீதியுடன் நூற்றுக்கு 11 சதவீதமாக அமைந்த ரூ. 598,840,034 சேர்க்கப்பட்டு இறுதி மீதியான ரூ. 6,042,840,342 ஓய்வூதியப் பொறுப்பாக இனங்காணப்பட்டிருந்தது. இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் ஆயுட்கணிப்பு மதிப்பீடு மேற்கொள்ளாமல் அதற்கு முரணாக மேலே குறிப்பிட்டவாறு ஓய்வூதிய பொறுப்பினைக் கணிப்பிட்டு நிதிக்கூற்றுகளில் காட்டியுள்ளமையை கணக்காய்வின்போது ஏற்றுக்கொள்ள இயலாது.

(ஆ) 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் திறைசேரி முறிகளின் மதிப்பீட்டுப்பெறுமதி ரூ. 429,486,430 ஆக அமைந்ததோடு அந்த பெறுமதியில் 2023 ஆம் ஆண்டின் திறைசேரி முறிகளை மதிப்பீடு செய்கையில் அதிகமாக கணிப்பிடப்பட்டிருந்த பெறுமதியான ரூ. 16,520,221 ஐ கழித்தமை காரணமாக மீளாய்வாண்டில் திறைசேரி முறிகளின் பெறுமதி மேற்படி பெறுமானத்தினால் குறைவாக மதிப்பிடப்பட்டிருந்தது.

(இ) செயற்றிட்டத்தின் மொத்த சொத்துக்களாக ரூ. 743,331,403 உம் மொத்த பொறுப்புக்களாக ரூ. 6,125,280,552 உம் நிலவியதோடு சொத்துக்களை விஞ்சிய பொறுப்பு ரூ. 5,381,949,149 ஆக அமைந்தது. இந்த பாதகமான நிலைமை செயற்றிட்டத்தின் இடையறா வழியுரிமை மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

மேலே விபரித்துள்ளவாறு நிதி நிலைமை பற்றிய கூற்றில், விபரமான வருமானக் கூற்றில், உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்றில், மற்றும் காசுப் பாய்வுக் கூற்றில் உள்ளடங்கிய கணியரீதியான உருப்படிகளை மாற்று வழிமுறைகள் ஊடாக உறுதிசெய்யவோ அல்லது மெய்ப்பிக்கவோ என்னால் இயலவில்லை. அதன் காரணமாக நிதி நிலைமை பற்றிய கூற்று, விபரமான வருமானக் கூற்று, உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று, மற்றும் காசுப் பாய்வுக் கூற்று தயாரிக்கப்படுகின்ற பெறுமதிகள் மற்றும் உருப்படிகளில் அறிக்கையிட்ட மற்றும் அறிக்கைசெய்யப்படாத பெறுமதிகள் அல்லது கொடுக்கல் - வாங்கல்கள் சம்பந்தமாக ஏதேனும் சீராக்கம் செய்யப்படவேண்டியது அவசியமா என என்னால் நிச்சயித்துக்கொள்ள இயலவில்லை.

1.3 சபையின் 2024 வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கிய ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையிலுள்ள திகதிக்குப் பின்னர் எனக்கு வழங்க எதிர்பார்த்துள்ள சபையின் 2024 வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள எனினும் நிதிசார் அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதன் மூலமாக கருதப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்புக்கூற வேண்டும்.

நிதிக்கூற்றுகள் சம்பந்தமான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படுவதில்லை என்பதோடு நான் அது பற்றிய எந்தவிதமான உத்தரவாதத்தையோ அல்லது அபிப்பிராயத்தையோ வெளிப்படுத்தப் போவதில்லை.

நிதிக்கூற்றுகள் பற்றிய எனது கணக்காய்வுடன் தொடர்புடையதாக எனது பொறுப்பாக அமைவது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெறக்கூடியதாக அமைந்தவிடத்து வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்கையில் ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுகளுடன் அல்லது கணக்காய்வில் வேறுவிதமாகப் பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கிணங்க கணியரீதியாக பொருரந்துவதில்லையா என்பதை பரிசீலித்துப் பார்ப்பதாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்களின்பேரிலும் என்னால் புரியப்பட்ட பணிகளின் அடிப்படையிலும் இந்த ஏனைய தகவல்கள் கணியரீதியாக தவறாக காட்டப்பட்டுள்ளதாக நான் ஊகிப்பேனாயின் அந்த விடயங்களை நான் அறிவிக்க வேண்டும். இது சம்பந்தமாக நான் அறிவிக்கவேண்டிய விடயமேதும் கிடையாது.

1.4 நிதிக்கூற்றுகள் பற்றிய முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படுதலும் நியாயமான வகையில் சமர்ப்பிக்கப்படுதலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய கணியரீதியான பொய்யான கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுகளை தயாரிக்க இயலச்செய்விக்கும்பொருட்டு அவசியமான உள்ளக கட்டப்பாடுகளைத் தீர்மானிக்கவேண்டியது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் சபையையும் குழுமத்தையும் தொடர்ச்சியாக பேணிவரக்கூடிய ஆற்றலை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு, முகாமைத்துவம் சபையையும் குழுமத்தையும் ஒழித்துக்கட்ட கருதுமெனில் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாயின் தவிர இடையறா வழியுரிமைக்கான அடிப்படையின்பேரில் கணக்குப்பதிதல் மற்றும் சபையினதும் குழுமத்தினதும் இடையறா வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிக்கொணருதலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சபையின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமான பொறுப்பு நிருவகிக்கின்ற தரப்பினால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உட்பிரிவின் பிரகாரம் செயற்றிட்டத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக்கூற்றுகளைத் தயாரிக்க இயலச்செய்விக்கக்கூடியதாக தனது வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி உரியவகையில் புத்தகங்களையும் அறிக்கைகளையும் பேணிவருதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுகள் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக தோன்றுகின்ற பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகள் அற்றனவென்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளிட்ட கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைந்தபோதிலும் ஸ்ரீலங்கா கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை

மேற்கொள்ளும்போது அது எப்பொழுதும் பொருண்மையான பிறழ்கூற்றுகளை வெளிப்படுத்திக் கொள்கின்றது என்பதற்கான உறுதிப்படுத்தலாக அமையமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியான அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகள் தோன்றக்கூடுமென்பதோடு இந்த நிதிக்கூற்றுகளை அடிப்படையாகக்கொண்டு கற்றாராய்வோரால் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் மீது தாக்கமேற்படுத்தக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில்வாண்மை தீர்ப்பளிப்புகள் மற்றும் தொழில்வாண்மை சந்ததேகங்களுடன் ஸ்ரீலங்கா கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் தோன்றக்கூடிய பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகளின் அபாயநேர்வுகளை இனங்காண்கையிலும் மதிப்பீடு செய்கையிலும் சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலமாக மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படுகின்ற அபாயநேர்வுகளைத் தவிர்த்துக்கொள்ளவும், போதியளவிலானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகளால் நேர்கின்ற தாக்கத்தைப் பார்க்கிலும் மோசடியால் ஏற்படுகின்ற தாக்கம் பலம்பொருந்தியதாக அமைவதோடு, மறைசூழ்ச்சி, போலியாவணம் புனைதல், கருத்தொன்றிய கைவிடல்கள் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் மோசடிகள் எற்பட காரணமாக அமைகின்றன.
- உள்ளக் கட்டுப்பாட்டின் விளைவாற்றல் பற்றிய அபிப்பிராயத்தை வெளியிடும் கருத்து இல்லாவிட்டாலும் சந்தரப்பத்திற்கேற்றவகையில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும்பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய புரிந்துணர்வு பெறப்பட்டது.
- பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளினதும் கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் உசிதமானதன்மை, நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக கொள்கைகள் சபையின் இடையறாத வழியுரிமை பற்றிய நிச்சமற்றதன்மைகள் உள்ளனவா என்பது சம்பந்தமாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் இடையறாத வழியுரிமை பற்றிய அடிப்படையை பிரயோகிப்பதன் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதியளவிலான நிச்சமற்றதன்மைகள் உள்ளதாக நான் ஊகிப்பேனாயின் நிதிக்கூற்றுகளில் அதுசம்பந்தமாக உள்ள வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் கவனஞ் செலுத்தப்படல் வேண்டுமென்பதோடு அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானவையாக அமையாதவிடத்து எனது அபிப்பிராயம் மறுக்கப்பட்டதாதல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின்பேரில் இடையறாத வழியுரிமை முற்றுப்பெற இயலும்.
- நிதிக்கூற்றுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமாகவும் நியாயமாகவும் உள்ளடங்கி இருப்பதாகவும் வெளிப்படுத்தலை உள்ளிட்ட நிதிக்கூற்றுகளின்

ஒட்டுமொத்த சமர்ப்பணம் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி ஆளுந் தரப்பினர்களை விழிப்பூட்டுவேன்.

எவ்வாறாயினும் அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக இந்த குழுமத்தின் நிதிக்கூற்றுகள் சம்பந்தமாக கணக்காய்வு அபிப்பிராயமொன்றை வெளியிடுவதற்கான அடிப்படைக்கு போதுமானதும் உசிதமானதுமான சான்றுகளை என்னால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்ட்ட அவசியப்பாடுகள் சம்பந்தமான விசேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன .

2.1.1 எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக , 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க கணக்காய்விற்கு அவசியமான அனைத்து தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெறப்பட்டதோடு எனது விசாரணையில் புலனாகின்றவிதத்தில் முறையான நிதியறிக்கைகள் சபையினால் பேணிவரப்பட்டிருப்பினும் குழுமத்தின் கணக்காய்விற்காக அவசியமெனக் கருதப்படுகின்ற அனைத்து தகவல்களையும் தெளிவுபடுத்தல்களையும் நான் பெற்றுக்கொள்ளவில்லை என்பதோடு முறையான கணக்கறிக்கைகளை குழுமம் பேணிவந்துள்ளதா என்பதை என்னால் தீர்மானிக்க இயலாமல் போயிற்று.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க சபையின் நிதிக்கூற்றுகள் முந்திய வருடத்துடன் நேரொத்தவையாக அமைகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட அவசியப்பாட்டிற்கு அமைவாக எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் 1.2.1 (அ),(ஆ) மற்றும் (இ) ஆகிய பிரிவுகளில் காட்டப்பட்டுள்ள அவதானிப்புகள் நீங்கலாக முந்திய வருடத்தில் என்னால் செய்யப்பட்டுள்ள விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளில் அடங்கியுள்ளன.

2.2 கடைப்பிடிக்கப்பட்ட செயல்வழிமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின்பேரிலும் கணியரீதியான மட்டுப்பாடுகளுக்குள்ளேயும் கீழே குறிப்பிடப்பட்ட கூற்றுக்களை வெளியிடும் அளவுக்கு எதுவுமே எனது கவனத்திற்கு இலக்காகவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்

சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க சபையின் ஆளுகைச் சபையினது எவரேனும் அங்கத்தவருக்கு சபையுடன் இணைந்த ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ வேறுவிதமாகவோ பொதுவான தொழில்முயற்சி நிலைமைக்குப் புறம்பான தொடர்பு உள்ளமை.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் நீங்கலாக எதேனும் ஏற்புடைய எழுத்திலான சட்டத்திற்கு அல்லது சபையின் ஆளுகைச் சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைந்தொழுகாதவகையில் செயலாற்றி உள்ளமை.

சட்டவிதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு	**அமைந்தொழுகாமை**
(அ) 2000 இன் 43 ஆம் இலக்கமுடைய காப்புறுதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 12 (3) (1) ஆம் இலக்கப் பந்தியும் 1999 இன் 20 ஆம் இலக்கமுடைய கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை சட்டத்தின் 29 வது பிரிவும்	சபையினால் அமுலாக்கப்படுகின்ற கமத்தொழில் காப்புறுதி அலுவல்களுக்காக காப்புறுதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் காப்புறுதிக் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் ஒழுங்குறுத்தல் அவசியப்படாவிடினும் இந்த விவசாயமல்லாத மூன்றாந்தரப்பு காப்புறுதி நடவடிக்கைகளுக்காக காப்புறுதி ஒழுங்குறுத்தல் ஆணைக்குழுவின் மேற்பார்வையும் அதன் சட்டவிதிகளின் பிரகாரம் செயலாற்றவேண்டியபோதிலும் அது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(ஆ) 1999 இன் 20 ஆம் இலக்கமுடைய கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை சட்டம்	கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் நோக்கம் கமக்காரர்களின் நலனோம்பலாக அமைந்திருப்பினும் சபை அந்த நோக்கத்திற்குப் புறம்பாக மூன்றாந்தரப்பு மோட்டார்வாகன காப்புறுதிச் செயற்றிட்டமொன்றை ஆரம்பித்து பேணிவருகின்றது. 2007 ஆம் ஆண்டில் டிராக்டர்களுக்காக மூன்றாந்தரப்பு காப்புறுதியை வழங்க சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த அனுமதியைப் போன்றே மோட்டார்வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் விவசாய உபகரணங்களுக்காக மாத்திரம் காப்புறுதிச் சான்றிதழ்களை வழங்குவதற்கான அதிகாரம் இருப்பதாக காட்டப்பட்டிருப்பினும் அதற்கு முரணாக ஏனைய வாகனங்களுக்காக மூன்றாந்தரப்பு காப்புறுதியை வழங்குதல் 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.
(இ) இலங்கை சனநாயக சோஷலிஸக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நி:பி. 381	சபையின் 45 வங்கிக் கணக்குகளும் உள்ளிட்டதாக குழுமத்தின் 57 வங்கிக் கணக்குகளுக்காக திறைசேரியின் அங்கீகாரமின்றி ஆரம்பித்து பேணிவரப்படுகின்றது.
(ஈ) இலங்கை சனநாயக சோஷலிஸக் குடியரசின் தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13:4 பிரிவு	வெற்றிடம் நிலவுகின்ற பதவியொன்றில் பதில்கடமையாற்றுவதற்காக மேற்படி பதவியில் பதவியை வகிக்க எல்லாவிதத்திலும் பூரணமான தகைமையற்ற உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்படலாகாதென காட்டப்பட்டிருந்தபோதிலும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்காக நிறைவுசெய்திருக்கவேண்டிய தகைமைகளின்றி 05 பேர்

	அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளிலும் உத்தியோகத்தரொருவர் பணிப்பாளர் (நிருவாகம்) பதவியிலும் 07 மாதங்கள் தொடக்கம் 04 வருடங்கள் வரையான காலம் தொடர்ச்சியாக பதில்க் கடமைக்காலம் நீடிக்கப்பட்டு நியமனம் வழங்கப்பட்டிருந்தது.
(உ) 2022 திசெம்பர் 14 ஆந் திகதிய 2310/29 ஆம் இலக்கமுடைய நடவடிக்கைமுறை விதிகளுக்கான அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் IX அத்தியாயத்தின் 131 வது பிரிவு	சட்டத்திற்கு முரணாக 09 பதவிகளுக்காக 22 உத்தியோகத்தர்கள் 06 மாதங்கள் தொடக்கம் 10 வருடங்கள் வரை நீண்டகால பதில்க்கடமை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.
(ஊ) கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் முகாமைத்துவ சேவைகள் தொகுதி பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் 4.3.2.2 பந்தி	உதவிப்பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் மனிதவளம்) பதவிக்காக வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பு செய்கையில் தகைமைகளும் அனுபவமுமற்ற உத்தியோகத்ரொருவர் அதற்காக சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார்.
(எ) 2015 மே 25 ஆந் தேதிய PED 1/2015 ஆம் இலக்கமுடைய அரசாங்க பொறுப்பு முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி இலக்கம் 2	சுற்றிக்கைக்கு முரணாக MM 1-1 சேவைகள் பிரிவைச் சேர்ந்த 19 உத்தியோகத்தர்களுக்காக 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் ரூ. 3,218,493 உம் 15 உத்தியோத்தர்களுக்காக 2024 ஆம் ஆண்டில் ரூ. 1,183,833 உம் போக்குவரத்துப் படியாக செலுத்தப்பட்டிருந்தது.
(ஏ) 2022 ஒற்றோபர் 06 ஆந் திகதியும் 06/2022 இலக்கமும்கொண்ட அரசாங்க பொறுப்பு முயற்சிகள் சுற்றறிக்கை	சுற்றிக்கைக்கு முரணாக 60 வயதினைக்கடந்த 04 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு அங்கீகாரமின்றி சம்பளம் மற்றும் படிகளாக ரூ. 6,790,567 செலுத்தப்பட்டிருந்தது.
(ஐ) 2022 யூலை 08 ஆந் திகதியும் 02/2022 இலக்கமும் கொண்ட அரசாங்க கணக்குகள் திணைக்கள வழிகாட்டியின் பந்தி இலக்கம் 1.2.5	ஏதேனும் திட்டவட்டமான பணிக்காக நியதிச்சட்டமுறையான நிறுவனமொன்றிற்கு வெகுமதிகள் /கொடைகளாக கிடைக்கின்ற பணம் மீண்டும் வரிசை அமைச்சிற்கு மாற்றியனுப்பப்பட வேண்டியிருப்பினும் மொபிடெல் நிறுவனத்திடமிருந்து கிடைத்த மில்லியன் ரூபா பணத் அவ்வாறு மாற்றியனுப்பப்படாமல் வங்கிக் கணக்கில் தேக்கிவைக்கப்பட்டிருந்தத. தொகை
(ஒ) 2019 செத்தெம்பர் 02 ஆந் திகதிய 07/2017 (திருத்தம் II) ஆம் இலக்கமுடைய விவசாய, கிராமிய பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசன , கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு சுற்றறிக்கையின் பந்தி 4	2022/23 பெரும்போகத்துடன் தொடர்புடைய பயிர்ச்சேதத்திற்காக இழப்பீட்டுக் கோரிக்கையை சமர்ப்பித்து இழப்பீடு செலுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள 39,455 பேரிடமிருந்து 9513 பேருக்கு ஒரு சதவீதமென்றவகையில் நூற்றுக்கு 25 சதவீத இழப்பீட்டினை செலுத்துவதற்காக ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கழிந்திருந்தது.
(ஓ) 2020 ஆகஸ்ற் 28 ஆந் திகதிய 01/2020 இலக்கமுடைய அரசாங்க நிதிச் சுற்றறிக்கை மற்றும் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2) (ஆ)	சுற்றிக்கை மற்றும் திருத்திய நிதிப்பிரமாணங்களுக்கு முரணாக ரூ. 110,000 தொடக்கம் ரூ. 9,991,000 வரையான பரப்பெல்லைக்குள் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி நானாவித முற்பணத்தை வழங்குகையில் 70 சந்தர்ப்பங்களில் அதிகபட்ச முற்பண எல்லையைக் கடந்து பெறப்பட்ட அப்போதைய இடைக்கால கட்டுநிதியின் பெறுமானம் ரூ. 23,695,099 ஆக அமைந்ததோடு மூலதன முற்பணத்தின்கீழ் 08 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த முற்பணங்களின் பெறுமதி ரூ. 31,829,529 ஆக அமைந்திருந்தது.

2.2.3. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் நீங்கலாக சபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுடன் அமைந்தொழுகாதவகையில் செயலாற்றியுள்ளமை.

தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்	அமைந்தொழுகாமை
(அ) 1999 இன் 20 ஆம் இலக்கமுடைய கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை சட்டத்தின் 7 (அ) உப பிரிவு	சட்டத்தின் பிரகாரம் விவசாயிகளுக்கு நேரிடுகின்ற நட்டத்திற்காக அவர்களுக்கு சேதஇழப்பீடு வழங்குகின்ற நிறைவான காப்புறுதித் திட்டமொன்று நிறுவப்படவேண்டியபோதிலும் அவ்விதமான சேதம் விளைந்த 8,185 கமக்காரர்களுக்கு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக ரூ. 70,800,200 இழப்பீட்டுத்தொகையானது கணக்கிலக்கங்கள், கமக்காரர்களின் பெயர்கள் மற்றும் அடையாளஅட்டை இலக்கங்கள் பொருந்தாமையால் வணிக வங்கிகளால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளபோதிலும் சம்பந்தப்பட்ட கமக்காரர்களை இனங்கண்டு அந்த பணத்தை செலுத்தித் தீர்க்கவோ அல்லது மீண்டும் திறைசேரிக்கு அனுப்பிவைக்கவோ 6 மாதங்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிட்டுள்ள அவசியப்பாட்டிற்கு அமைவாக கீழே குறிப்பிட்ட அவதானிப்புகள் தவிர்ந்ததாக சபையின் வளங்களை சிக்கனமாகவும் விளைவாற்றல்மிக்க வகையிலும் காலப்பகுதிகளுக்குள் சம்பந்தப்பட்ட சட்டவிதிகளுக்கு அமைவாக பெறுகைசெய்து பாவித்திருக்கவில்லை என்பது.

(அ) சபையின் முகாமைத்துவ தகவல் முறைமைக்கான தொழில்முயற்சி வளங்கள் திட்டமிடல் முறைமைக்காக (ERP System) 2023 ஆம் ஆண்டளவில் ரூ. 72,002,970 செலுத்தியிருந்ததோடு பின்னர் உடன்படிக்கை காலத்தை 2025 ஏப்பிறல் 01 வரை நீடித்துக்கொண்டடிருந்தபோதிலும் 2025 மே 02 ஆம் திகதியளவிலும் மேற்படி அலுவல்கள் நிறைவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்துடன் (IFC) ஒருங்கிணைந்தவகையில் விவசாய முகாமைத்துவ தகவல் முறைமையைக் கட்டியெழுப்புவதற்காக ஐக்கிய நாடுகள் உணவு , விவசாய தாபனத்திடமிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூ. 20,391,089 பணத்தொகை சபைக்கு வழங்கப்பட்டிருந்ததோடு அவ்வருடத்தில் அதற்காக ரூ. 23,009,698 செலவிடப்பட்டிருந்தபோதிலும் 2024 ஆம் ஆண்டளவிலும் இழப்பீடு கணிப்பதற்காகவும் இழப்பீடு செலுத்துகின்ற செயற்பாங்கிற்காகவும் தகவல் முறைமை பாவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்நாட்டு அரசிறை சட்டத்தின் பிரகாரம் வருமான வரிக்காக பதிவுசெய்திராமை காரணமாக 2018 ஏப்பிறல் 01 தொடக்கம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதிவரை சென்மதியான வரிதொகையான ரூ. 299,354,489 ஐ உரிய தினங்களில் செலுத்தியிராமை காரணமாக தாமத வட்டியாக ரூ. 40,869,072 சயால் செலுத்தவேண்டியதாக நிலவியது.

(இ) எதிர்பாராத நிகழ்வுகளால் தோன்றுகின்ற உரிமைகோரல்களுக்காக பிரயோகிக்கப்படவேண்டிய ஒதுக்க நிதியமொன்று 2002 ஆம் ஆண்டிலிருந்து கட்டியெழுப்பப்பட்டிருந்ததோடு 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் அதன் மீதி ரூ. 588,524,391 ஆக அமைந்தது. மேற்படி நிதியம் பாவிக்கப்படவேண்டிய எதிர்பாராத நிகழ்வுகள் சம்பந்தமாக வரைவிலக்கணம் விதித்து விதிமுறைகள் கட்டியெழுப்பப்பட்டிருக்கவில்லை என்பதால் 2002 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை 22

வருட காலத்திற்குள் இந்த நிதியம் பாவனைக் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் ஓய்வூதிய செயற்றிட்டத்தில் உறுப்புரிமை பெற்று 60 வயதினைக்கடந்து ஓய்வூதியம் பெறுகின்ற வயதினை அடைந்திருந்த 32,149 கடற்றொழிலாளர்களில் 26,093 பேருக்கு கடற்றொழிலாளர் ஓய்வூதிய நன்மைகள் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) மூன்றாந்தரப்பு காப்புறுதி வருமானத்தில் நூற்றுக்கு 5 வீதத்தை ஒதுக்கி பணப்பாளர்சபை அங்கீகாரத்துடன் ஊக்குவிப்புப்படி நிதியமொன்று கட்டியெழுப்பப்பட்டிருந்ததோடு 2024 ஆம் ஆண்டில் நிதியத்திற்கான ஒதுக்கீடுகள் ரூ. 18,056,415 ஆக அமைந்ததோடு 2024 திசெம்பர் 31 இல் மீதி ரூ. 38,361,464 ஆக அமைந்திருந்தது. 2022 ஆம் ஆண்டில் ரூ. 8,437,499 உம் 2023 இல் ரூ. 8,714,577 உம் 2024 இல் ரூ. 10,380,974 பணத்தொகையும் ஊக்குவிப்புப் படியாக செலுத்தப்பட்டிருந்ததோடு இந்த நிதியத்தை தாபிக்கவும் ஊக்குவிப்புப் படியை செலுத்துவதற்காகவும் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2024 பெப்ருவரி 28 திகதியைக்கொண்ட 01 /2024 இலக்கமுடைய அரசாங்க பொறுப்பு முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 வது பிரிவிற்கமைவாக அரசாங்கத்திற்குச் சொந்தமான பொறுப்புமுயற்சிகளின் நிதிய நலன்புரிச் சங்கங்கள் அல்லது வேறு எந்தவொரு நலனோம்பல் அலுவல்களுக்காகவும் மாற்றப்படக்கூடாதபோதிலும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின்பேரில் ஊழியர்களுக்கு காப்புறுதிக் காப்பீடொன்றினை வழங்குவதற்காக ஊழியர் மருத்துவக் காப்புறுதி நிதியமொன்று கட்டியெழுப்பப்பட்டிருந்ததோடு 2024 ஆம் ஆண்டில் குழுமத்தின் பங்களிப்பு ரூ. 5,221,150 மற்றும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதியத்தின் மீதி ரூ. 36,274,240 ஆக அமைந்திருந்தது. இந்த நிதியத்தை தாபிப்பதற்காக பொது திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(எ) மேலதிக காப்புறுதிக் காப்பீட்டின்கீழ் கொள்ளப்படுகின்ற தொல்லைகளுக்கான இழப்பீடு பொது திறைசேரியினாலும் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினாலும் நிதியாக்கம் செய்யப்பட முடியாதெனினும் பயிர்ச் சேதத்திற்காக ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களை விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள 2022/23 பெரும்போகத்தில் சேதத்திற்குள்ளான 2,190 ஏக்கர் பயிர்நிலங்களின் 1,111 கமக்காரர்களுக்கு தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திடமிருந்தும் பொது திறைசேரியிடமிருந்தும் பெறப்பட்ட பணத்திலிருந்து ரூ. 35,356,111 இழப்பீட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) 2007 திசெம்பர் 31 அந் திகதியில் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தில் நிலவிய குழுமக் காப்புறுதி நிதியத்திலும் அதனோடு தொடர்புடையதாக முதலீடு செய்யப்பட்ட ரூ. 251,547,146 மீதி கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபையின் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. செயற்றிட்டத்தின் நிதித் தேவைக்காக 2020, 2011 மற்றும் 2012 ஆகிய அண்டுகளில் குழுமக் காப்புறுதி நிதியத்திலிருந்து ரூ. 295,230,442 கடன்தொகை பெறப்பட்டிருந்ததோடு அதற்காக 2024 ஆம் ஆண்டுவரையான திரண்ட வட்டி ரூ. 469,030,456 ஆக அமைந்திருந்தது. மீளாய்வாண்டில் செயற்றிட்டத்தின் நிருவாகச் செலவுகளுக்காக திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூ. 249,630,000 பணத்தொகையில் ரூ. 12,596,498 ஒரு பகுதியாக செலுத்தித் தீர்க்கப்பட்டிருந்தது. இதன்படி ஆயுட்காப்புறுதி நிதியத்தின் முதலீடு ஒரு கடன்தொகையாக மாறியிருந்தது.

(ஐ) 1987 இன் 12 ஆம் இலக்க கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச்சட்டத்தின் 6(1) பிரிவின் பிரகாரம் 60 வயதினை பூர்த்திசெய்ததும் ஓய்வூதியம் பெறுவதற்கான உரிமை கிடைக்கவேண்டியபொதிலும் அவ்வயதினை பூர்த்திசெய்த கமக்காரர்களை இனங்கண்டு ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பதோடு 15(1) பிரிவின் பிரகாரம் முறையே 5 தவணைகளுக்கான பணத்தை செலுத்துவதை தவறவிட்ட உதவுதொகை செலுத்துனருக்கு சான்றிதழின்கீழான நன்மைகள் அற்றுப்போதலை உதவுதொகை செலுத்துனருக்கு அறிவிப்பதற்கான அதிகாரம் சபைக்கு இருந்தபோதிலும் நன்மைபெறுனரான தரப்பினரால்

முறைப்படி 5 தவணைகளுக்கான பணத்தை செலுத்துவதை தவறவிட இடம்கிடைக்காதபோதிலும் இடைக்கிடையேயாவது 5 தவணைகளுக்கான பணத்தைச் செலுத்தாத உதவுதொகை செலுத்துனர்களையும் சான்றிதழை மீறியவர்களாக கருதி ஓய்வூதிய நன்மைகள் இழக்கச் செய்விக்கப்பட்டிருந்தது.

(ஒ) கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் உதவுதொகை செலுத்துனர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உறுதிச்சான்றிதழின் 6 வது பிரிவின் பிரகாரம் செலுத்தப்பட்டுள்ள அரையாண்டு தவணைப் பணத்தின் அளவில் நூற்றுக்கு 75 சதவீதம் கிடைத்திருப்பின் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான உரிய ஓய்வூதியத்தைவிடக் குறைக்கப்பட்ட ஓய்வூதியமொன்றைப் பெற்றுக்கொள்ள உரிமை உள்ளபோதிலும் மேற்படி உதவுதொகை செலுத்துனர்களுக்காக ஓய்வூதிய நன்மைகள் இழக்கச்செய்யப்பட்டிருந்தன.

(ஓ) 1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழிலாளர் ஓய்வூதிய சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டச்சட்டத்தின் 5 (1) பிரிவின் பிரகாரம் 18 வயதிற்கும் 59 வயதிற்கும் இடைப்பட்ட எவரேனும் கடற்றொழிலாளர் இந்த ஓய்வுதியத்திட்டத்தில் சேர்ந்துகொள்வதற்கான உரிமையைப் பெறுகின்றபோதிலும் 2018 ஆம் ஆண்டுக்குப் பின்னர் செயற்றிட்டத்திற்காக கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்திற்கு அங்கத்தவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதோடு 7 வது பிரிவின் பிரகாரம் செயற்றிட்டதிற்கு பங்களிப்புச் செய்துள்ள கடற்றொழிலாளர்களுக்காக 60 வயதினை பூர்த்திசெய்கின்ற வேளையிலேயே ஓய்வூதியம் வழங்கப்படவேண்டியபோதிலும் 2007 சனவரியில் இருந்து 2017 திசெம்பர் வரையான காலப்பகுதி தொடர்பாக ஓய்வூதியம் வழங்கப்பட்ட 141 கடற்றொழிலாளர்களுக்காக ரூ. 4,240,063 உம் 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ள 56 கடற்றொழிலாளர்களுக்காக ரூ. 1,320,447 என்றவகையில் கூட்டுத்தொகையாக ரூ. 5,560,510 நிலுவை ஓய்வூதியமாக நிதிக்கூற்றுகளில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தபோதிலும் கடற்றொழிலாளர்களுக்கு செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஒப்பம்

ஜீ.எச்.டீ. தர்மபால

பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பலன்கள் திட்டம்

எனது இலக்கம்: ARI/C/FPS/1/24/25/FA 2025 மே 30

தலைவர்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் மற்றும் பிற சட்டமுறையான, ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மேற்படி அறிக்கை இத்துடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்.

ஜீ.எச்.டீ. தர்மபால

பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள் :- 1. செயலாளர் - நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

2. செயலாளர், கமத்தொழில், கால்நடைவளம், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

எனது இலக்கம்: ARI/C/FPS/1/24/25/FA 2025 மே 30

தலைவர்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

கமக்காரர் ஒய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் மற்றும் பிற சட்டமுறையான, ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக்கூற்றுகள்

1.1 அபிப்பிராயத்தை மறுத்தல்

கமக்காரர் ஒய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் மற்றும் இன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று, இன்றைய தினத்தில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்வுக்கூற்று மற்றும் கணியரீதியான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் சம்பந்தப்பட்ட தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுகளின் குறிப்புகளையும் உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த அண்டுக்கான நிதிக்கூற்றுகள் 1987 இன் 12 ஆம் இலக்கமுடைய கமக்காரர் ஒய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம், இலங்கை சனநாயக சோஷலிஸக் குடியரசின் 154(3) உறுப்பரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்புரையின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நிதியத்தின் நிதிக்கூற்றுகள் பற்றி நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கப் போவதில்லை. அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படை பகுதியில் ஆராயப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுகள் சம்பந்தமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்க போதுமானதும் உசிதமானதுமான சான்றுகளை பெற்றுக்கொள்ள என்னால் இயலவில்லை.

1.2 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

(அ) செயறிட்டத்தின் மொத்த சொத்துக்கள் ரூ. 3,062,149,691 மற்றும் மொத்த பொறுப்புகள் ரூ. 94,351,635,618 ஆக அமைந்தமையால் சொத்துக்களை விஞ்சிய பொறுப்பு ரூ. 91,289,485,927 ஆகவும், மொத்த நடைமுறைச் சொத்துக்கள் ரூ. 1,125,049,320 மற்றும் மொத்த நடைமுறைப் பொறுப்புகள் ரூ. 3,222,013,500 ஆகவும் அமைந்தமையால் நடைமுறை சொத்துக்களை விஞ்சிய நடைமுறைப்பொறுப்பு ரூ. 2,096,964,180 ஆகவும் அமைவதோடு திறைசேரியின் பங்களிப்பு இன்றி திட்டத்தை முன்னெடுத்துச்செல்ல முடியாத நிலைமை நிலவுவதால் செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமை சிக்கலானதாகும்.

(ஆ) இலங்கை கணக்காய்வு நியமம் இலக்கம் 01 இன் 88 வது பந்திக்கு முரணாக மீளாய்வாண்டில் கமக்காரர்களிடமிருந்து கிடைத்த தவணைப்பண வருமானம், கமக்காரர் ஒய்வூதியம் பெறுனர்களின் பங்களிப்பு வருமானம் மற்றும் முதலீட்டு வட்டியை உள்ளிட்டதாக மீளாய்வாண்டில் கிடைத்த ரூ. 143,566,887 பணத்தொகையை காலப்பகுதிக்கான வருமானமாக கணக்குப்பதியாமல் திரண்ட நிதியத்திற்கு சீராக்கி இருந்தமையால் அந்த அளவினால் இலாபம் குறைவடைந்திருந்தது.

(இ) காசுப் பாய்வுக் கூற்றினை தயாரிக்கையில் இலங்கை கணக்கீட்டு

நியமம் 7 இன் 4 வது பந்தியின் பிரகாரம் உதவுதொகை செலுத்துனர்களிடமிருந்து கிடைத்த ரூ. 135,443,031 தவணைப்பண வருமானத்தை தொழிற்பாட்டு வருமானத்திற்குள் இனங்காணாமையால் தொழிற்பாட்டு செயற்பாடு ஊடாக பிறப்பிக்கப்பட்ட காசுப்பாய்வு அதே அளவினால் குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததோடு ரூ. 8,123,855 முதலீட்டு வருமானத்திற்குள் இனங்காணப்படாமையால் முதலீட்டுச் செயற்பாடுகள் ஊடாக பிறப்பிக்கப்பட்ட காசுப்பாய்வு அந்த அளவினால் குறைமதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) வருடத்தின் தொடக்க ஓய்வூதியப் பொறுப்பில் ஆண்டுக்குள் செலுத்தப்பட்ட ஓய்வூதியத் தொகையைக் கழித்த பின்னர் கிடைக்கின்ற இறுதி மீதிக்கு நூற்றுக்கு 11 சதவீதத்தை சேர்த்து ஓய்வூதிய பொறுப்பினைக் கணிப்பிடுகின்ற முறையியலை செயற்றிட்டம் தொடர்ச்சியாக கடைப்பிடித்து வந்தது. அதன்படி 2024 சனவரி 01 ஆந் திகதியில் தொடக்கமீதியாக அமைந்த ரூ. 86,898,445,376 இல் கமக்காரர் ஓய்வூதிய செலுத்துதலாக அமைந்த ரூ. 4,845,125,008 ஐ கழித்து அந்த மீதியுடன் நூற்றக்கு 11 சதவீதமாக அமைந்த 9,025,865,240 ஐ சேர்த்து இறுதிமீதியான ரூ. 91,079,185,608 ஓய்வூதியப் பொறுப்பாக இனங்காணப்பட்டிருந்தது. இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 59 வது பந்தியின் பிரகாரம் ஆயுட்கணிப்பு மதிப்பிட்டினை செய்யாமல் மேலே குறிப்பிடப்பட்ட வழிமுறையைக் கடைப்பிடித்து கணிக்கப்பட்ட ஓய்வூதியப் பொறுப்பின் திட்பநுட்பத்தன்மை பற்றி திருப்தியடைய முடியாது.

(உ) மேற்படி ஓய்வூதிய பொறுப்புக் கணக்கிற்கு மேலதிகமாக உண்மையாகவே செலுத்தவேண்டியதாக இனங்காணப்பட்டுள்ள ஓய்வூதியப் பொறுப்பு ரூ. 2,345,496,047 ஆக அமைந்திருப்பினும் மேற்படி பெறுமதியை அடிப்படையாகக்கொண்டு ஆயுட்கணிப்பு மதிப்பீடு செய்யப்பட்டிராமையால் திட்பநுட்பத்தன்மை உறுதிசெய்யப்படவில்லை.

(ஊ) கமக்காரர்களின் உயிர்த்தரவுத் தகவல்கள் இற்றைப்படுத்தப்படாமை காரணமாக இறந்த மற்றும் வேறு காரணங்களின்பேரில் உரிமைபெற முன்வந்திராத கமக்காரர்களின் ஓய்வூதியம் தொடர்ச்சியாக அஞ்சல் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. 2024 ஆம் அண்டில் கமக்காரர்கள் பெற்றுக்கொள்ளாமையால் அஞ்சல் திணைக்களத்தினால் திருப்பி அனுப்பப்பட்ட ஓய்வூதியம் ரூ. 469,255,211 ஆக அமைந்ததோடு மீளாய்வாண்டின் இறுதியில் மேற்படி திணைக்களத்திடமிருந்து கிடைக்கவேண்டிய மீதி ரூ. 99,247,815 ஆக அமைந்தது. மேற்படி மீதிகள் அமைந்துள்ள விதம் மற்றும் ஒவ்வொரு கமக்காரர் பற்றிய விபரங்களை உள்ளடக்கிய தகவல் முறைமையொன்று இல்லாதிருந்தமையால் மீதிகளின் திட்பநுட்பத்தன்மையை உறுதிசெய்துகொள்ள இயலாமல் போயிற்று.

(எ) 2024 நவெம்பர் மற்றும் திசெம்பர் மாதங்கள் தொடர்பான கமக்காரர் ஓய்வூதிய உதவுதொகை செலுத்துனர்களின் வருமானம் முறையே ரூ. 8,970,200 மற்றும் ரூ.8,969,200 ஆக அமைந்ததோடு அந்த பெறுமதிகள் கமக்காரர் ஓய்வூதியம் பெறுனர்களின் பங்களிப்பு வருமான கணக்கிற்கு வரவுவைக்கப்படுவதற்குப் பதிலாக சென்மதியான ஒய்வூதிய கணக்கிற்கு வரவுவைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் வருமானம் ரூ. 17,939,400 ஆல் குறைமதிப்பீட்டுக்கு இலக்காகி உள்ளதோடு நடைமுறைப்பொறுப்பு அதே அளவினால் மிகைமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(ஏ) செயற்றிட்டத்தின் குழும ஆயுட்காப்புறுதி காப்பீடு மூலமாக வயது 18 - 54 இற்கு இடைப்பட்ட உதவுதொகை செலுத்துனரொருவர் ஓய்வூதியம் பெறமுன்னர் இறத்தல், பூரணமான மற்றும் பகுதியளவிலான ஏலாமை நிலையுறல் என்பவற்றுக்காக செலுத்தநேரிடுகின்ற பணிக்கொடையை செலுத்துவதற்காக 2024 ஆம் ஆண்டில் 266,297 உதவுதொகை செலுத்துனர்களுக்காக ரூ. 15,977,820 பெறுமானம் ஒதுக்கப்பட்டிருந்ததோடு அதில் 256,616 பேர் இயங்காத உதவுதொகை செலுத்துனர்களாக அமைந்ததோடு அவர்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை

மற்றும் உண்மையாகவே இயங்காதவர்களின் எண்ணிக்கையை உறுதிப்படுத்திக்கொள்ளாமல் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

மேலே விபரித்துள்ளவாறு நிதி நிலைமை பற்றிய கூற்றில், விபரமான வருமானக் கூற்றில், உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்றில் மற்றும் காசுப் பாய்வுக் கூற்றில் உள்ளடங்கிய கணியரீதியான உருப்படிகளை மாற்று வழிமுறைகள் ஊடாக உறுதிசெய்யவோ அல்லது மெய்ப்பிக்கவோ என்னால் இயலவில்லை. அதன் காரணமாக நிதி நிலைமை பற்றிய கூற்று, விபரமான வருமானக் கூற்று, உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று, மற்றும் காசுப் பாய்வுக் கூற்று தயாரிக்கப்படுகின்ற பெறுமதிகள் மற்றும் உருப்படிகளில் அறிக்கையிட்ட மற்றும் அறிக்கைசெய்யப்படாத பெறுமதிகள் அல்லது கொடுக்கல் - வாங்கல்கள் சம்பந்தமாக ஏதேனும் சீராக்கம் செய்யபடவேண்டியது அவசியமா என என்னால் நிச்சயித்துக்கொள்ள இயலவில்லை.

1.3 நிதிக்கூற்றுகள் பற்றிய முகாமைத்துவத்தினதும் ஆளுந் தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படுதலும் நியாயமான வகையில் சமர்ப்பிக்கப்படுதலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய கணியரீதியான பொய்யான கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுகளை தயாரிக்க இயலச்செய்விக்கும்பொருட்டு அவசியமான உள்ளக கட்டுப்பாடுகளைத் தீர்மானிக்கவேண்டியது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் நிதியத்தை தொடர்ச்சியாக பேணிவரக்கூடிய ஆற்றலை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு, முகாமைத்துவம் நிதியத்தை ஒழித்துக்கட்ட கருதுமெனில் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாயின் தவிர இடையறா வழியுரிமைக்கான அடிப்படையின்பேரில் கணக்குப்பதிதல் மற்றும் செயற்றிட்டத்தின் இடையறா வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிக்கொணருதலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமான பொறுப்பு நிருவகிக்கின்ற தரப்பினால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உட்பிரிவின் பிரகாரம் செயற்றிட்டத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக்கூற்றுகளைத் தயாரிக்க இயலச்செய்விக்கக்கூடியதாக தனது வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி உரியவகையில் புத்தகங்களையும் அறிக்கைகளையும் பேணிவருதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வினை அடிப்படையாகக்கொண்டு நிதியத்தின் நிதிக்கூற்றுகள் பற்றிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவது எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக இந்த நிதிக்கூற்றுகள் சம்பந்தமாக கணக்காய்வு அபிப்பிராயமொன்றுக்கான அடிப்படையை வழங்க போதியளவிலானதும் உசிதமானதுமான சான்றுகளைப் பெற்றுக்கொள்ள என்னால் இயலாமல் போயிற்று.

2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகள்

சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (III) வது பிரிவில் குறிப்பிட்ட அவசியப்பாட்டுக்கிணங்க செயற்றிட்டத்தில் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுகள் முந்திய வருடத்துடன் நேரொத்தாக அமைகின்றது.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிட்ட அவசியப்பாட்டுக்கிணங்க எனது அறிக்கையில் மறுக்கப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் 1.2 (அ),(ஆ),(ஈ) மற்றும் (ஊ) வரை காட்டப்பட்டுள்ள அவதானிப்புகள் நீங்கலாக கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளில் அடங்கியுள்ளன.

3. தொழிற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டங்கள் , விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் அமைந்தொழுகாமை

கீழ்க் குறிப்பிடப்பட்ட அமைந்தொழுகாத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு	**அமைந்தொழுகாமை**
(அ) 1987 இன் 12 ஆம் இலக்க கமக்காரர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித்திட்டச் சட்டம்	
(i) பிரிவு 6 (1)	வயது 60 வருடங்கள் பூர்த்தியானதும் ஓய்வூதியம் பெறுவதற்கான உரிமை கிடைக்கவேண்டியபோதிலும் அந்த வயதினைப் பூரத்திசெய்த கமக்காரர்களை இனங்கண்டு அவர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருக்கவில்லை
(ii) பிரிவு 12 (இ)	செயற்றிட்டம் சம்பந்தமாக உயிர்த் தரவுகளை உள்ளடக்கிய தகவல் முறைமையொன்று இருந்தபோதிலும் தரவுத் தொகுதியை இற்றைப்படுத்தி பேணிவராமையால் அவசியமான நிதிசார் மற்றும் தொழிற்பாட்டு அறிக்கைளை பெற்றுக்கொள்ள முடியாமல் போயிருந்தது. அதனால் பணிப்பாளர்சபைப் பத்திரம் 528/03 இன் பிரகாரம் செயற்றிட்டத்தில் பங்களிப்புச் செய்துள்ள மொத்த கமக்காரர்களின் எண்ணிக்க 954,254 ஆக அமைந்ததோடு தகவல் முறைமையில் உள்ளடங்கிய எண்ணிக்கை 871,425 ஆக விளங்கியது. அதன்படி 82,829 வித்தியாசம் நிலவியபோதிலும் அதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு தெளிவாகவில்லை.
(iii) பிரிவு 12 (ஈ)	செயற்றிட்டம் தொடர்பில் மதிப்பாய்வுகள், மதிப்பீடுகள் மற்றும் மீளாய்வுகளை மேற்கொண்டு தொழிற்பாட்டு விதிமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டியிருப்பினும் கட்டியெழுப்பப்பட்ட சட்டம், விதிமுறை அல்லது பிரமாணமின்றி உரித்துக்கோராத ஓய்வூதியத்தை மீளச்செலுத்துகையில் அரையாண்டுக்கு 3.32 சதவீத வட்டி தேறிய தவணைப்பணத்திற்கு மேலதிகமாக கணிப்பிடப்பட்டிருந்தது.
(iv) பிரிவு 15 (1)	தொடர்ச்சியாக 5 தவணைகளக்கான பணத்தை செலுத்த தவறியுள்ள உதவுதொகை செலுத்துனருக்கு ஒப்பந்தச் சான்றிதழின் கீழான நன்மைகள் அற்றுப்போவதை உதவுதொகை செலுத்துனருக்கு அறிவிக்க சபைக்கு அதிகாரம் உள்ளபோதிலும்

	நலன்பெறுகின்ற தரப்பினரால் தொடர்ச்சியாக 5 தவணைகளை செலுத்த தவறாதிருப்பினும் இடைக்கிடையே 5 தவணைகளுக்கான பணத்தை செலுத்தாத நலன்பெறுனர்களையும் சான்றிதழை மீறியதாகக் கருதி ஓய்வூதிய நன்மைகள் இழக்கச்செய்யப்பட்டிருந்தது.
(v) பிரிவு 27 (1)	விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதும் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதும் இணக்கத்தின்பேரில் செயற்றிட்டத்தினால் பெறப்படுகின்ற கடனின் அளவு தீர்மானிக்கப்பட வேண்டியிருப்பினும் அவ்வாறான இணக்கத்தைப் பெறாமல் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையிடமிருந்து இந்த செயற்றிட்டத்திற்கு ரூ. 295,230,442 கடன்தொகை பெறப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் செலுத்தவேண்டிய வட்டியையும் உள்ளடக்கிய மொத்த கடன் மீதி ரூ. 552,668,504 ஆக அமைந்திருந்தது.
(ஆ) ஒப்பந்தச் சான்றிதழின் பிரிவு 6	செலுத்தியுள்ள அரையாண்டு உதவுதொகை எண்ணிக்கையில் நூற்றுக்கு 75 வீதம் கிடைத்திருப்பின் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான உரிய ஓய்வூதியத்தைப் பார்க்கிலும் குறைக்கப்பட்ட ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை இருக்கின்றபோதிலும் மேற்படி உதவுதொகை செலுத்துனர்களுக்கு ஓய்வுதிய நன்மைகள் இழக்கச்செய்யப்பட்டிருந்தது.

3.2 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

செயற்றிட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியொன்று கிடையாதென்பதோடு சபையின் மொத்த ஊழியர் சம்பள செலவு மற்றும் நிருவாகச் செலவுகளில் நூற்றுக்கு 50 சதவீத அடிப்படையில் திட்டத்தின் செலவாக பற்றுவைக்கப்பட்டிருந்தது. உரிமை கோராத ஓய்வூதியத்தை மீளச் செலுத்துகையில் நலன்பெறுனரிடமிருந்து கிடைக்கின்ற ஒவ்வொரு தவணையிலுமிருந்து ரூ. 15 வீதம் நிருவாகச் செலவு என்றவகையிலும் கமக்காரரால் முறைப்படி செலுத்தப்பட்ட ஒவ்வொரு தவணையிலுமிருந்து ரூ. 30 காப்புறுதிக் கட்டணமாகவும் கமக்காரருக்கு மீளச்செலுத்துகின்ற தொகையில் ரூ.150 மீண்டும் காப்புறுதிக் கட்டணமாகவும் கழிக்கப்பட்டு கமக்காரருக்கு மீளச்செலுத்துகின்ற தொகை தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும் அதற்கான எந்தவிதமாக விதிமுறையும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 செயலாற்றுகை

(அ) தொடர்ச்சியாக 5 தவணைகளுக்கான பணம்செலுத்துவதை தவறவிடுள்ளவிடத்து அது பற்றி விழிப்பூட்டி ஒப்பந்தப் பத்திரத்தை முனைப்பானதாக்க அவசியமான வசதிகள் செய்யப்பட்டிராமையால் உரிய வயது பூர்த்தியானபின்னர் ஓய்வூதியத்திற்காக 2021 ஆம் ஆண்டில் விண்ணப்பித்த 1,127 உதவுதொகை செலுத்துனர்களுக்கும், 2022 இல் 2,226 பேருக்கும், 2023 ஆம் ஆண்டில் 716 பேருக்கும், 2024 இல் 775 உதவுதொகை செலுத்துனர்களுக்கும் ஓய்வூதியம் செலுத்தாமல் தேறிய தவணைப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வூதிய உரிமைக்காக 7,057 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததோடு அதில் 1,575 விண்ணப்பங்களுக்கு நன்மைகளை வழங்க செயற்றிட்டம் தவறியிருந்தது.

3.4 முகாமைத்துவ செயற்பாடுகள்

(அ) 2007 திசெம்பர் 31 அந் திகதியில் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தில் நிலவிய குழும ஆயுட் காப்புறுதி நிதியத்தினதும் அதனோடு தொடர்புடைய ரூ. 251,547,146 மீதி கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. செயற்றிட்டத்தின் நிதித் தேவைக்காக 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் குழும ஆயுட் கரப்புறுதி நிதியத்திடமிருந்து ரூ. 295,230,442 கடன்தொகை பெறப்பட்டிருந்ததோடு அதற்காக 2024 ஆம் ஆண்டுவரை திரண்ட வட்டி ரூ. 469,030,456 ஆக அமைந்திருந்தது. மீளாய்வாண்டில் செயற்றிட்டத்தின் நிருவாகச்

செலவுகளுக்காக திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூ. 249,630,000 பணத்தொகையில் ரூ. 12,596,498 பணத்தொகையை ஈடுபடுத்தி கடன்தொகையில் ஒரு பகுதி செலுத்தித் தீர்க்கப்பட்டிருந்தது. அதன்படி ஆயுட்காப்புறுதி நிதியத்தின் முதலீடு கடன்தொகையாக மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) மாவிலாறு அணைக்கட்டு மூடப்பட்டதால் கமக்காரர்களுக்கு பயர்ச்சேத இழப்பீடு செலுத்துவதற்காக 7 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட தொகை முந்திய வருடத்தில் செலுத்தப்பட்டிருந்ததோடு இது சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சட்ட மா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பப்பட்டிருந்ததோடு எந்தவிதமான தொடர்கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2007 இல் இருந்து 2022 ஆம் ஆண்டுவரை செலுத்தியிராத மற்றும் நிதிக்கூற்றுகளில் பொறுப்புகளாக இனங்காணப்பட்டிராத செலவிற்கு எதிராக பதிவழித்திருந்த பெறுமதி ரூ. 1,136,598,066 ஆக அமைந்ததோடு 2023 ஆம் ஆண்டில் செலுத்தியிராத ஓய்வூதியப் பொறுப்பு ரூ. 568,503,026 ஐ உதவுதொகை செலுத்துனர்களுக்கு செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேற்படி ஓய்வூதியம் ஓய்வூதியம்பெறுனர்களால் பெறுவதில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு அப்பணத்தொகைகளை மீண்டும் பொது திறைசேரிக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2021 இல் புதிய சேர்த்துக்கொள்ளல் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 2025 சனவரி 09 ஆந் திகதியளவில் ஓரேதடவையில் பணத்தைச்செலுத்திய 1,205 உதவுதொகை செலுத்துனர்களும் அரையாண்டு தவணைப்பணத்தை செலுத்துகின்ற 2,210 பேரும், மாதாந்த தவணைப்பணத்தைச் செலுத்துகின்ற 1,477 உதவுதொகை செலுத்துனர்களும் திட்டத்தின் உறுப்புரிமையைப் பெற்றிருந்ததோடு அந்தந்த உதவுதொகை செலுத்துனர்களுக்கிணங்க உதவுதொகை அறவீட்டினை இனங்காணவும் , உதவுதொகை செலுத்துனர்களின் இயங்குகின்ற அல்லது இயங்காத நிலையை இனங்காணவும், செயலிழந்த உதவுதொகை செலுத்துனர்களிடமிருந்து தவணைப்பணத்தை ஏற்றுக்கொள்ளாதிருக்கவும் இயலச்செய்விக்கும்வகையில் நிலவுகின்ற தகவல் முறைமையோ அல்லது கோப்புகளோ பேணிவரப்பட்டிருக்கவில்லை

ஒப்பம்

ஜீ.எச் தர்மபால

பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பலன்கள் திட்டம்

எனது இலக்கம்: ARI/C/FIPS/1/24/24/FA 2025 மே 28

தலைவர்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள், பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மேற்படி அறிக்கை இத்துடன் அனுப்பிவைக்கப்படுகின்றது.

ஒப்பம்

ஜீ.எச்டீ. தர்மபால

பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள் : 1. செயலாளர் - நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

2. செயலாளர் - கமத்தொழில், கால்நடைவளம், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

3.செயலாளர் - கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்தறை அமைச்சு

எனது இலக்கம்: ARI/C/FIPS/1/24/24/FA 2025 மே 28

தலைவர்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள், பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக்கூற்றுகள்

1.1 அபிப்பிராயம் மறுப்பு

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி நிலைமை பற்றிய கூற்று, அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று, , அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்வுக் கூற்று மற்றும் கணியரீதியான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் தொடர்புடைய தவல்களையும் உள்ளிட்டதாக நிதிக்கூற்றுகளுடன் சம்பந்தப்பட்ட குறிப்புகளை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் 1990 இன் 23 ஆம் இலக்கமுடைய கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச்சட்டம், இலங்கை சனநாயக சோஷலிஸக் குடியரசு அரசியமைப்பின் 154(3) உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்புரையின்கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நிதியத்தின் நிதிக்கூற்றுகள் பற்றி நான் அபிப்பிராயம் தெரிவிக்கப்போவதில்லை. அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படை பகுதியில் ஆராயப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுகள் சம்பந்தமாக கணக்காய்வு அபிப்பிராயத்தை தெரிவிக்க போதியளவிலானதும் உசிதமானதுமான சான்றுகளைப் பெற்றுக்கொள்ள என்னால் இயலாமல் போயிற்று.

1.2 அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படை

(அ) வருடத்தின் தொடக்க ஓய்வூதியப் பொறுப்பிலிருந்து வருடத்திற்குள் செலுத்தப்பட்ட ஓய்வூதிய பணத்தொகையை கழித்த பின்னர் கிடைகின்ற மீதிக்கு நூற்றுக்கு 11 சதவீதத்தை சேர்த்து ஓய்வூதியப் பொறுப்பினை கணிப்பிடுகின்ற முறையிலொன்று திட்டத்தினால் தொடர்ச்சியாக கடைப்பிடிக்கப்பட்டிருந்தது. அதன்படி 2024 சனவரி 01 ஆந் திகதியில் தொடக்கமீதியான ரூ. 5,532,3409, 026 இல் கடற்றொழிலாளர் ஓய்வூதியமாக செலுத்தப்பட்ட ரூ. 88,348,718 கழிக்கப்பட்டு மேற்படி மீதியுடன் நூற்றுக்கு 11 சதவீதமாக அமைந்த ரூ. 598,840,034 சேர்க்கப்பட்டு இறுதி மீதியான ரூ. 6,042,840,342 ஓய்வூதியப் பொறுப்பாக இனங்காணப்பட்டிருந்தது. இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் ஆயுட்கணிப்பு மதிப்பீடு மேற்கொள்ளாமல் அதற்கு முரணாக மேலே குறிப்பிட்டவாறு ஓய்வூதிய பொறுப்பினைக் கணிப்பிட்டு நிதிக்கூற்றுகளில் காட்டியுள்ளமையை கணக்காய்வின்போது ஏற்றுக்கொள்ள இயலாது.

(ஆ) 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் திறைசேரி முறிகளின் மதிப்பீட்டுப்பெறுமதி ரூ. 429,486,430 ஆக அமைந்ததோடு அந்த பெறுமதியில் 2023 ஆம் ஆண்டின் திறைசேரி முறிகளை மதிப்பீடு செய்கையில் அதிகமாக கணிப்பிடப்பட்டிருந்த பெறுமதியான ரூ. 16,520,221 ஐ கழித்தமை காரணமாக மீளாய்வாண்டில் திறைசேரி முறிகளின் பெறுமதி மேற்படி பெறுமானத்தினால் குறைவாக மதிப்பிடப்பட்டிருந்தது.

(இ) செயற்றிட்டத்தின் மொத்த சொத்துக்களாக ரூ. 743,331,403 உம் மொத்த பொறுப்புக்களாக ரூ. 6,125,280,552 உம் நிலவியதோடு சொத்துக்களை விஞ்சிய பொறுப்பு ரூ. 5,381,949,149 ஆக அமைந்தது. இந்த பாதகமான நிலைமை செயற்றிட்டத்தின் இடையறா வழியுரிமை மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

மேலே விபரித்துள்ளவாறு நிதி நிலைமை பற்றிய கூற்றில், விபரமான வருமானக் கூற்றில், உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்றில் மற்றும் காசுப் பாய்வுக் கூற்றில் உள்ளடங்கிய கணியரீதியான உருப்படிகளை மாற்று வழிமுறைகள் ஊடாக உறுதிசெய்யவோ அல்லது மெய்ப்பிக்கவோ என்னால் இயலவில்லை. அதன் காரணமாக நிதி நிலைமை பற்றிய கூற்று, விபரமான வருமானக் கூற்று, உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் காசுப் பாய்வுக் கூற்று தயாரிக்கப்படுகின்ற பெறுமதிகள் மற்றும் உருப்படிகளில் அறிக்கையிட்ட மற்றும் அறிக்கைசெய்யப்படாத பெறுமதிகள் அல்லது கொடுக்கல் - வாங்கல்கள் சம்பந்தமாக ஏதேனும் சீராக்கம் செய்யபடவேண்டியது அவசியமா என என்னால் நிச்சயித்துக்கொள்ள இயலவில்லை.

1.3 நிதிக்கூற்றுகள் பற்றிய முகாமைத்துவத்தினதும் ஆளுந் தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படுதலும் நியாயமான வகையில் சமர்ப்பிக்கப்படுதலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய கணியரீதியான பொய்யான கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுகளை தயாரிக்க இயலச்செய்விக்கும்பொருட்டு அவசியமான உள்ளக கட்டப்பாடுகளைத் தீர்மானிக்கவேண்டியது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் நிதியத்தை தொடர்ச்சியாக பேணிவரக்கூடிய ஆற்றலை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு, முகாமைத்துவம் நிதியத்தை ஒழித்துக்கட்ட கருதுமெனில் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாயின் தவிர இடையறா வழியுரிமைக்கான அடிப்படையின்பேரில் கணக்குப்பதிதல் மற்றும் செயற்றிட்டத்தின் இடையறா வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிக்கொணருதலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்றிட்டத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமான பொறுப்பு நிருவகிக்கின்ற தரப்பினால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உட்பிரிவின் பிரகாரம் செயற்றிட்டத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக்கூற்றுகளைத் தயாரிக்க இயலச்செய்விக்கக்கூடியதாக தனது வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி உரியவகையில் புத்தகங்களையும் அறிக்கைகளையும் பேணிவருதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வினை அடிப்படையாகக்கொண்டு நிதியத்தின் நிதிக்கூற்றுகள் பற்றிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவது எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக இந்த நிதிக்கூற்றுகள் சம்பந்தமாக கணக்காய்வு அபிப்பிராயமொன்றுக்கான அடிப்படையை வழங்க போதியளவிலான தும் உசிதமானதுமான சான்றுகளைப் பெற்றுக்கொள்ள என்னால் இயலாமல் போயிற்று.

2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகள்

சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (III) வது பிரிவில் குறிப்பிட்ட அவசியப்பாட்டுக்கிணங்க செயற்றிட்டத்தில் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுகள் முந்திய வருடத்துடன் நேரொத்தாக அமைகின்றது.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிட்ட அவசியப்பாட்டுக்கிணங்க எனது அறிக்கையில் மறுக்கப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் 1.2 (அ) மற்றும் (ஈ) இல் காட்டப்பட்டுள்ள அவதானிப்புகள் நீங்கலாக கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளில் அடங்கியுள்ளன.

2. தொழிற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டவிதிகள் பிரமாணங்களுடன் அமைந்தொழுகாமை

சட்டதிட்டங்கள், பிரமாணங்களுக்கான தொடர்பு	**அமைந்தொழுகாமை**
(அ) 1990 இன் 23 ஆம் இலக்கமுடைய கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம்	
(i) பிரிவு 3	60 வயதினை பூர்த்திசெய்த 26,093 கடற்றொழிலாளர்களக்கு ஓய்வூதியம் கிடைக்காமை மற்றும் புதிய உதவுதொகை செலுத்துனர்கள் சேர்த்துக்கொள்ளப்படாமை காரணமாக செயற்றிட்டத்தின் 3 வது பிரிவின் குறிக்கோள்கள் ஈடேறியிருக்கவில்லை.
(ii) பிரிவு 5 (1)	18 வயதிற்கும் 59 வயதிற்கும் இடைப்பட்ட எவரேனும் கடற்றொழிலாளர் இந்த கடற்றொழிலாளர் ஓய்வூதிய திட்டத்தில் சேர்ந்துகொள்வதற்கான உரித்தினைக் கொண்டிருந்தபோதிலும் 2018 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எந்தவோர் உறுப்பினரும் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.
(iii) பிரிவு 7	திட்டத்தில் பங்களிப்புச் செய்துள்ள கடற்றொழிலாளர்களுக்கு 60 வயது நிறைவடைகையில் ஓய்வூதியம் வழங்கப்படவேண்டியபோதிலும் 2007 சனவரி தொடக்கம் 2017 திசெம்பர் வரையான காலப்பகுதியுடன் தொடர்புடையதாக ஓய்வூதியம் வழங்கப்பட்ட 141 கடற்றொழிலாளர்களுக்காக ரூ. 4,240,063 உம் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் ஓய்வூதியம் வழங்கப்பட்ட 56 கடற்றொழிலாளர்களுக்காக ரூ. 1,320,447 என்ற வகையில் ரூ. 5,560,510 நிலுவை ஓய்வூதியமாக நிதிக்கூற்றுகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருருந்த போதிலும் கடற்றொழிலாளர்களுக்கு செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(iv) பிரிவு 11	ஓய்வூதியம் பெறுவதற்கான உரித்தினைப்பெற முன்னர் உதவுதொகை செலுத்துனரொருவர் இறந்தால் செயற்றிட்டத்தின்கீழ் முறைப்படி கணிக்கப்பட்ட இறப்புப் பணிக்கொடை செலுத்தப்படல் வேண்டும். சபைக்கு இறப்புப் பணிக்கொடை விண்ணப்பப் பத்திரம் கிடைத்த

	திகதியிலிருந்து இறப்புப் பணிக்கொடை செலுத்துகின்ற செயற்பாங்கினை நிறைவுசெய்ய 3 மாதங்கள் தொடக்கம் 42 மாதங்கள் வரையான காலமும் கடற்றொழிலாளர் இறந்த தினத்திலிருந்து இறப்புப் பணிக்கொடை செலுத்துகின்ற செயற்பாங்கினை நிறைவுசெய்ய 5 மாதங்கள் தொடக்கம் 193 மாதங்களுக்கிடையிலான காலமும் கழிந்திருந்தது.
v)பிரிவு 20	செயற்றிட்டத்தை அமுலாக்குவதற்காக தாபிக்கப்பட்டுள்ள மதியுரைக்குழு 2016 நவெம்பர் மாதத்தின் பின்னர் இதுவரை கூட்டத்தை நடாத்தியிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

(அ) வயது 60 வருடங்களை பூர்த்திசெய்து தவணைப்பணத்தில் நூற்றுக்கு 75 வீதத்தைவிடக் குறைவாக செலுத்தியுள்ள கடற்றொழிலாளர்களுக்கு தேறிய தவணைப் பணத்தைச் செலுத்த 3 மாதங்கள் தொடக்கம் 78 மாதங்கள் வரை கழிந்திருந்தது.

(ஆ) 2024 நவெம்பர் 25 ஆந் திகதிய 2412/08 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி பத்திரிகை மூலமாக இந்த நிதியம் கடற்றொழில் அமைச்சின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளபோதிலும் அமைச்சு மூலமாக நடாத்தப்படுகின்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் இந்த நிதியம் பற்றிக் கவனஞ்செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் திட்டத்தின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்ட 60 வயதினைக் கடந்திருந்த 32,149 கடற்றொழிலாளர்களில் 26,093 பேருக்கு கடற்றொழிலாளர் ஓய்வூதியம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கடற்றொழிலாளர் ஓய்வூதியம் பெறுனர்களின் உயிர்த்தரவு தகவல்களை பேணிவருதல் அல்லது இற்றைப்படுத்தி பேணிவராமை காரணமாக ஓய்வூதியம் பெறுனர்கள் உண்மையாகவே உயிருடன் இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளாமல் மீளாய்வாண்டில் ஓய்வூதியமாக ரூ. 88,348,718 செலுத்தப்பட்டிருந்தபோதிலும் அதன் திட்பநுட்பத்தன்மையை உறுதிசெய்துகொள்ள முடியவில்லை.

ஒப்பம்

ஜீ.எச்.டீ. தர்மபால

பதில் கணக்காய்வாபளர் தலைமை அதிபதி